# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## 2023 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

[*2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

*2023, செத்தெம்பர் மாதம் 15 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 216.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2023 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க,**
**வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்**

[*2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச.வ.- ஓ. 48/2022*

***மத்திய வங்கியின் தீர்மானிப்பு அதிகாரத்துக்காகவும், உரிய காலத்திலானவொரு முறையில் மூலதனம், திரவத்தன்மை, கடனிறுக்கவகையின்மை அல்லது வேறேதேனும் ஆபத்துக்கமைய உரிமம்பெற்ற வங்கி யொன்றைத் தீர்மானிப்புச் செய்வதற்கு மத்திய வங்கி யினாலும் மற்றும் இலங்கை அரசாங்கத்தினாலும் நடைமுறைப்படுத்தப்பட முடியுமான தீர்மானிப்பு வழிமுறைகளுக்காகவும் ஏற்பாடு செய்வதற்கானதும்; நிதிமுறைமை உறுதிப்பாட்டை உறுதிப்படுத்தி அத்தகைய வங்கியின் வைப்பாளர்களினதும் கடன் கொடுத்தோரினதும் நலன்களை உறுதிப்படுத்துவதற்கு வளர்ச்சியடைந்துவரும் முயற்சியொன்றாக அத்தகைய வங்கிக்கு புத்துயிரளிப்பதற்கானதும்; அத்தகைய உரிமம்பெற்ற வங்கிகளுக்கான வைப்புக் காப்புறுதித் திட்டமொன்றுக்கும் மற்றும் ஒடுக்குதல் செயன்முறைக் கும் ஏற்பாடு செய்வதற்கானதும்; அத்துடன் அதனுடன் தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்கானதுமானதொரு சட்டம்.***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-*

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்

**1.** (1) இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

(2) இப்பிரிவின் ஏற்பாடுகள் தவிர்ந்த இச்சட்டத்தின் ஏற்பாடுகள், (இச்சட்டத்தில், "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப் படும்) வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகள், இச்சட்டமூலம் பாராளுமன்றச் சட்டமொன்றாக வருகின்ற தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

*சட்டத்தின் ஏற்புடைமை*

**2.** அப்போதைக்கு வலுவிலுள்ள வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் ஏற்பாடுகள், (இச்சட்டத்தில், ''உரிமம்பெற்ற வங்கிகள்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம்பெற்ற வங்கிகளைத் தீர்மானிப்புச் செய்வதற்கு மத்திய வங்கிக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரம் தொடர்பான தத்துவங்களையும், கடமைகளையும் மற்றும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் மற்றும் நிறைவேற்றுவதிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் I

### மத்திய வங்கியின் தீர்மானிப்பு அதிகாரம்

*மத்திய வங்கியின் தீர்மானிப்பு அதிகாரசபை*

**3.** மத்திய வங்கி, இச்சட்டத்தின்கீழ், உரிமம்பெற்ற வங்கிகள் தொடர்பிலான தீர்மானிப்பு அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்குப் பொறுப்பாதல் வேண்டும்.

*உரிமம்பெற்ற வங்கிகளைத் தீர்மானிப்புச் செய்யும் நோக்கத்துக்கான திணைக்களம் ஒன்றைத் தாபித்தல்*

**4.** (1) இச்சட்டத்தின் நோக்ககங்களுக்காக, மத்திய வங்கியானது, இச்சட்டத்தின்கீழ் தீர்மானிப்பு அதிகாரம் தொடர்பிலான அதன் தத்துவங்களின், கடமைகளின் மற்றும் பணிகளின் உரியமுறையிலானதும் வினைத்திறனானதுமான பிரயோகம், புரிகை மற்றும் நிறைவேற்றுகைக்காக மத்திய வங்கியின்கீழான திணைக்களமொன்றைத் தாபித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட திணைக்களம் ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் உரிமம்பெற்ற வங்கிகள்மீதான ஒழுங்குபடுத்துகை மற்றும் மேற்பார்வைப் பணிகளை நிறைவேற்றுதலாகாது.

மத்திய வங்கி தீர்மானிப்பு அதிகாரத்தைப் பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதல்

**5**. (1) மத்திய வங்கியானது, அதன் தீர்மானிப்பு அதிகாரம் தொடர்பிலான தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளை பிரயோகிப்பதில், புரிவதில் மற்றும் நிறைவேற்றுவதில், தீர் மானிப்புக்கமைய, வேறு நிறுவனங்களுடனான கட்டமைப்பு, அளவு, சிக்கற்தன்மை, இடைத்தொடர்புநிலை என்பவற்றையும் மற்றும் உரிமம்பெற்ற வங்கியின் ஆபத்து தோற்றுருவையும் கவனத்துட் கொள்ளுதல் வேண்டும்.

(2) மத்திய வங்கியானது, தீர்மானிப்புத் திட்டம் தொடர்பிலான தகவல்கள் மற்றும் குறித்த இடத்திலேயே நடைபெறும் விசாரணை களுக்கூடாகச் சேகரிக்கப்பட்ட தகவல்கள் என்பவற்றின் இற்றைப் படுத்தல்கள் மற்றும் குறைநிரப்பிகள் உள்ளடங்கலாக, தீர்மானிப்பு வழிமுறைகள் பற்றி முடிபுசெய்வதற்கும் வகுத்தமைப்பதற்கும் அதற்கு அவசியமாகவுள்ள ஏதேனும் தகவலை வழங்கும்படி எவரேனும் ஆளைத் தேவைப்படுத்துவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஏதேனும் உரிமம்பெற்ற வங்கி, ஒழுங்குபடுத்துகை அல்லது மேற்பார்வை அதிகாரி அல்லது இச்சட்டத்தின்கீழ் எவ்வாள்மீது மத்திய வங்கியினால் ஏதேனும் கட்டளை, ஒழுங்குவிதி, பணிப்பு, தீர்மானம், வழிகாட்டுநெறி அல்லது அறிவுறுத்தல் வழங்கப் பட்டுள்ளதோ அல்லது கோரிக்கையொன்று செய்யப்பட்டுள்ளதோ அத்தகைய வேறு ஆள், உடனடியாக அல்லது அதன்கண் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குப் பிந்தாமல், அத்தகைய கட்டளைக்கு, ஒழுங்குவிதிக்கு, பணிப்புக்கு, தீர்மானத்துக்கு, வழிகாட்டுநெறிக்கு அல்லது அறிவுறுத்தலுக்கு அல்லது கோரிக்கைக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(4) மத்திய வங்கியின் ஒழுங்குபடுத்துகை மற்றும் மேற்பார்வைத் திணைக்களம் ஒவ்வொன்றும், இச்சட்டத்தின்கீழ் தயாரிக்கப்பட்ட தீர்மானிப்பு வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட இயைபான ஒழுங்குபடுத்துகை அல்லது மேற்பார்வை அங்கீகாரங்களை துரிதமாக வசதிப்படுத்துவதற்கென 4 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட திணைக்களத்துக்கான ஒத்துழைப்பை வழங்குதல் வேண்டும்.

குறித்தசில வேறு சட்டவாக்கங்களின் ஏற்புடைமையைத் தவிர்த்தல்

**6**. (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் மற்றும் அவற்றின்கீழ் மத்திய வங்கியால் வழங்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட வேறேதேனும் ஒழுங்குவிதி, கட்டளை, பணிப்பு, தீர்மானம், வழிகாட்டுநெறி அல்லது அறிவுறுத்தலுக்கும் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்து

வதில், இச்சட்டத்தின்கீழ் தீர்மானிப்புக்கமைய, உரிமம்பெற்ற வங்கியொன்றின் மீதான மத்திய வங்கியின் தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளை பிரயோகிப்பதில், புரிவதில் மற்றும் நிறைவேற்றுவதில் இச்சட்டத்துக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சட்டவாக்கங்கள் அல்லது தீர்மானம் ஒடுக்குதல் அல்லது வைப்புக்காப்புறுதி தொடர்பிலான அத்தகைய ஏற்பாடுகளின் ஏதேனும் பாகம் ஏற்புடைமையைக் கொண்டிருத்தலாகாது.

(2) மத்திய வங்கி இச்சட்டத்தின்கீழான தீர்மானிப்பு அதிகாரத்தைப் பிரயோகித்தல் எவ்வாறிருப்பினும், வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் வழங்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி, கட்டளை, பணிப்பு, தீர்மானம், வழிகாட்டுநெறி அல்லது அறிவுறுத்தல் என்பவற்றின்கீழ் ஏதேனும் உரிமம்பெற்ற வங்கிக்கு ஏற்புடையற்பாலனவான ஒழுங்கு படுத்துகைத் தேவைப்பாடுகள், தீர்மானிப்புக்கமைய அத்தகைய உரிமம்பெற்ற வங்கி தொடர்பில் தொடர்ந்தும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகள் உரிமம்பெற்ற வங்கியொன்றின் கொளிக் கம்பெனி முதலியவற்றுக்கு ஏற்புடையதாதல்*

**7.** (1) மத்திய வங்கியினால் ஒழுங்குபடுத்தப்படவில்லை அல்லது மேற்பார்வை செய்யப்படவில்லை என விடயத்திற்கேற்ப, உரிமம்பெற்ற வங்கியின் கொளிக்கம்பெனி ஒன்று, உரிமம்பெற்ற வங்கியொன்றின் துணைக்கம்பெனி ஒன்று அல்லது இணைக் கம்பெனி அல்லது அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் நிதிசார் குழு அல்லது கூட்டமைப்பினுள்ளான ஏதேனும் உருவகம்–

(அ) அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் முக்கிய பணிகளைப் புரிவதற்கு குறிப்பிடத்தக்கவையாகவுள்ள அல்லது குறிப்பிடத்தக்கவையாகக் கருதப்படுகின்ற தீர்மானிப்புக்கமைந்த அத்தகைய உரிமம்பெற்ற வங்கிக்காக அல்லது அதன் சார்பில் ஏதேனும் சேவையை வழங்குகின்றது அல்லது கடமையைப் புரிகின்றது என; அல்லது

(ஆ) அத்தகைய உருவகங்களினால் அத்தகைய சேவையின் அல்லது கடமையின் இடைநிறுத்துகை அல்லது நிறுத்தி விடுகை அத்தகைய வங்கியின் வைப்பாளர்களினதும் கடன்கொடுநர்களினதும் நலன்களுக்கு தீங்கு விளைவிக்கின்றன அல்லது தீங்கு விளைவிக்கும் சாத்தியம் கொண்டுள்ளன அல்லது இலங்கையின் நிதிசார்முறைமையின் இடருக்குட்படுத்துகின்றது என; அத்துடன்

*மத்திய வங்கி திருப்திப்படுத்துமிடத்தும் அத்துடன் முக்கியமான பணிகளைப் புரிவதற்கு குறிப்பிடத்தக்கதாகவுள்ள அத்தகைய சேவையின் அல்லது கடமையின் தொடர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கு அத்தகைய உரிமம்பெற்ற வங்கிக்கு கிடைக்கக்கூடிய மாற்றுவழிகள் எவையும் இல்லாத பட்சத்தில், இச்சட்டத்தின் பாகத்தின் ஏற்பாடுகளை, தீர்மானிப்புக்கமைந்த உரிமம்பெற்ற வங்கியொன்றுக்கு அவை ஏற்புடையதாகும் அதே முறையில் இவ்வுட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஒரு கம்பெனிக்கு அல்லது உருவகத்துக்கு ஏற்புடையனவாக்குவது மத்திய வங்கிக்கு சட்ட முறையாதல் வேண்டும்.*

*(2) மத்தியவங்கி தவிர்ந்த நிதித்துறைசார் ஒழுங்குபடுத்துநரினால் உட்பந்தி (1) (இ) இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் கம்பெனி அல்லது உருவகம் ஒழுங்குபடுத்தப்படும் பட்சத்தில், மத்திய வங்கி இச்சட்டத்தின்கீழ் அத்தகைய கம்பெனி அல்லது உருவகம் தீர்மானிப்பதற்கு எவையேனும் வழிமுறைகள் தொடர்பில் அத்தகைய வழிமுறைகளை எடுக்கும் முன்னர் அத்தகைய ஒழுங்குபடுத்துநரைக் கலந்தாலோசித்து அத்தகைய ஒழுங்குபடுத்துநருக்கு உரிய அறிவித்தலை கொடுத்தல் வேண்டும்.*

*தீர்மானிப்பின் குறிக்கோள்கள்*

***8**. மத்திய வங்கி உரிமம் பெற்ற வங்கியின் மீது இச்சட்டத்தின் கீழான தீர்மானிப்பு அதிகாரம் தொடர்பிலான அதன் தத்துவங்களை, கடமைகளை மற்றும் பணிகளை பிரயோகிப்பதில், புரிவதில் மற்றும் நிறைவேற்றுவதில் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துவதற்கு முயற்சித்தல் வேண்டும் :-*

*(அ) கொடுப்பனவு, தீர்த்தல் மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைகளுட்பட, நிதி முறைமையின் உறுதிப்பாடு;*

*(ஆ) அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் முக்கிய பணிகளின் தொடர்ச்சி;*

*(இ) பகிரங்க நிதி உதவியைக் குறைப்பதன்மூலம் பகிரங்க நிதிகளின் பாதுகாப்பு;*

*(ஈ) அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் வைப்பாளர்களின் பாதுகாப்பு; அத்துடன்*

*(உ) சொத்துக்களின் பெறுமதியானது அழிவைத் தவிர்த்தல் மற்றும் கடன் கொடுநர்களுக்கான நட்டங்களைக் குறைத்தலும் அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின்*

தீர்மானிப்பின் ஒட்டுமொத்த ஆகுசெலவுகளைக் குறைத்தலும்.

உரிமம்பெற்ற வங்கிகள் அறவீட்டுத் திட்டமொன்றைத் தயாரித்தல்

**9.** (1) ஒவ்வோர் உரிமம்பெற்ற வங்கியும், அதன் நிதி நிலைமையினது சீர்குலைவொன்றின்போது அத்தகைய உரிமம்பெற்ற வங்கியினால் எடுக்கப்பட வேண்டிய வழிமுறைகளுக்கு ஏற்பாடு செய்யவேண்டிய அதன் ஆபத்து முகாமைச் செயல்முறையின் பாகம் என்றவகையில் அறவீட்டுத் திட்டமொன்றைத் தயாரித்தல் வேண்டும்.

(2) அறவீட்டுத் திட்டமொன்றைத் தயாரிப்பதில், உரிமம்பெற்ற வங்கியொன்று அதன் குறிப்பான பண்புக்கூறுகள், முறைமைசார் நிகழ்வுகள், அத்தகைய உரிமம்பெற்ற வங்கிக்கும் மற்றும் ஒட்டுமொத்தமாக வங்கித்தொழிற் தொகுதியின் வேறு தனிப்பட்ட உருவகங்களுக்கும் குறிப்பான நெருக்கடி சூழ்நிலைக்காட்சிகள் என்பவற்றுக்கு இயைபாகவுள்ள நிதிசார் மற்றும் பெருநிலைப் பொருளாதாரஞ்சார் சூழ்நிலைக்காட்சிகளைக் கவனத்துட்கொள்ளுதல் வேண்டும்.

(3) அறவீட்டுத் திட்டமொன்றைத் தயாரிப்பதில், உரிமம்பெற்ற வங்கியொன்று ஏதேனும் அசாதாரண பகிரங்க நிதி உதவிக்கான அணுக்கத்தில் எம்முறையிலும் தங்கியிருத்தலாகாது.

(4) ஒவ்வோர் உரிமம்பெற்ற வங்கியும், ஆகக் குறைந்தது ஆண்டுக்கொருமுறை அல்லது அறவீட்டுத் திட்டத்தின்மீது கணிசமானதொரு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய உரிமம்பெற்ற வங்கியின் நிறுவனஞ்சார் கட்டமைப்பு அல்லது சட்டக்கட்டமைப்பு, உரிமம்பெற்ற வங்கியின் தொழிற் செயற்பாடுகள் அல்லது நிதி நிலைமை என்பவற்றில் ஏதேனும் மாற்றம் நிகழும் பட்சத்தில், மத்திய வங்கியின் கோரிக்கையின்மேல் அல்லது அது திரிபுபடுத்துதல்களைத் தேவைப்படுத்துகின்றவிடத்து, அதனது அறவீட்டுத் திட்டத்தை இற்றைப்படுத்துதல் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்ட அறவீட்டுத் திட்டம் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும் :-

(அ) உரிமம்பெற்ற வங்கியின் பொதுவான அறவீட்டு இயலுமை பற்றிய முன்வைப்பொன்று;

(ஆ) உரிமம்பெற்ற வங்கியின் வேறு நிறுவனங்களுக்கான தன்மை, அளவு, கட்டமைப்பு, சிக்கற்தன்மை மற்றும் இடைத்தொடர்பு நிலை என்பவற்றைக் கருத்திற் கொள்கின்ற அறவீட்டுத் திட்டத்தின் நோக்கெல்லை;

(இ) அறவீட்டு கட்டுக்கோப்பின்கீழ் மேவப்பட்ட வங்கித்தொழிற் தொகுதியினுள்ளான வேறு உருவகங்கள் பற்றிய விபரங்கள்;

(ஈ) அறவீட்டு விருப்பத்தெரிவுகள் மீதான தொடர்பாடல் திட்டமிடல் பற்றிய விபரங்கள்;

(உ) சாத்தியமான அறவீட்டு அல்லது தீர்மானிப்பு செயன்முறைகளின்கீழ் ஒட்டுமொத்த உரிமம்பெற்ற வங்கிக்குமான முக்கிய பணிகளின் அல்லது முக்கிய பகிரப்பட்ட சேவைகளின் தொடர்ச்சியான கிடைக்கத்தகு தன்மையை உறுதிப்படுத்துகின்ற முறையொன்றில் ஒழுங்கமைக்கப்பட்ட உரிமம்பெற்ற வங்கியின் அத்தகைய பணிகளினதும் சேவைகளினதும் ஓர் அடையாளங்காணல்;

(ஊ) அறவீட்டு நடவடிக்கைகள் உரிய காலத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கான அறவீட்டுக் குறிகாட்டிகளினதும், தூண்டுகைகளினதும் மற்றும் நடவடிக்கைமுறைகளினதும் ஓர் அடையாளங்காணல்;

(எ) மூலதனம், திரவத்தன்மை மற்றும், விடயத்துக்கேற்ப, உருவகத்துக்கான குறிப்பான அழுத்தங்களிலிருந்து அல்லது சந்தைப் பரவல் அழுத்தங்களிலிருந்து அல்லது அத்தகைய இரு அழுத்தங்களிலிருந்தும் எழக்கூடிய வேறெல்லா அம்சங்களுக்கான திடீர் இடையூறைக் கையாள்வதற்குக் கிடைக்கக்கூடியனவாகவுள்ள பரந்துபட்ட அறவீட்டு விருப்பத்தெரிவுகள்;

(ஏ) அறவீட்டு விருப்பத்தெரிவுகளை நடைமுறைப்படுத்து வதற்குத் தேவையான நேரமும் வளங்களும்;

(ஐ) அறவீட்டுத் திட்டம் வினைத்திறனாகவும் உரியநேரத்திலும் நடைமுறைப்படுத்தப்படுவதைத் தடுக்கக்கூடிய கணிசமானளவு வளங்களின் குறைபாடுகள்;

(ஒ) தொழில் தொடர்ச்சிக்கான திட்டமிடலைத் தயாரித்தல் உட்பட, தடைகளுக்கு பரிகாரமளிப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்;

(ஓ) நடைமுறைப்படுத்தலுக்கான ஆகுசெலவுகள் பற்றிய விபரங்கள்;

(ஔ) அறவீட்டுத் திட்டமானது உரிமம்பெற்ற வங்கியின் முகாமைத்துவத்தினுள் எவ்வாறு ஒருங்கிணைக்கப்படுகின்றது என்பது பற்றிய ஒரு விபரமான விவரணம்;

(க) உரிமம்பெற்ற வங்கியினுள் அறவீட்டுத் திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கும் நடைமுறைப்படுத்து வதற்கும் பொறுப்பாகவுள்ள ஆட்கள்;

(ங) அறவீட்டுத் திட்டத்தை அங்கீகரிப்பதற்கான கொள்கைகளும் நடவடிக்கைமுறைகளும்;

(ச) பின்வருவனவற்றுக்கான பொறிமுறைகளும் வழிமுறைகளும் -

(i) உரிமம்பெற்ற வங்கியின் நிதிகளின் பேணல் அல்லது மீளுருவாக்கம்;

(ii) உரிமம்பெற்ற வங்கியானது திரவத்தன்மையின் ஆற்றல்வள மூலங்களுட்பட அவசரகால நிதியளிப்பு மூலங்களுக்கான அணுகல், கிடைக்கக்கூடிய இணையுறுவின் மதிப்பீடு மற்றும் தொகுதியினுள்ளான உருவகங்களுக்

கிடையேயும் தொழில்களுக்கிடையுமான திரவத் தன்மையைக் கைமாற்றும் சாத்தியம் பற்றிய மதிப்பீடு என்பவற்றைக் கொண்டிருப்பதனை உறுதிப்படுத்துதல்;

(iii) உரிமம்பெற்ற வங்கியானது அதன் செயற்பாடு களைத் தொடர்வதனையும் மற்றும் அதன் கடப்பாடுகள் வருமதியாக வருகின்றபோது அவற்றைப் பூர்த்திசெய்வதனையும் உறுதிப் படுத்துதல்;

(iv) முடுக்கி ஆபத்தையும் விளைவையும் குறைத் தல்;

(v) தனிசுகளை மீள்கட்டமைத்தல்;

(vi) நிதிச் சந்தை உட்கட்டமைப்புக்களுக்கான தொடர்ச்சியான அணுக்கத்தைப் பேணுதல்;

(vii) நிதிசார் திடமான தன்மையை மீள்நிலைப் படுத்தும்பொருட்டு தோதான காலப்பகுதி யொன்றினுள் சொத்துக்களின் விற்பனையை அல்லது தொழில்களை வசதிப்படுத்தல்; அத்துடன்

(viii) அறவீட்டுத் திட்டத்தை உரியகாலத்தில் மீள்மூலதனமயமாக்குவதனை அனுமதிப்ப தற்கு அவசியமான வழிமுறைகளுட்பட, அதன் நடைமுறைப்படுத்தலை வசதிப்படுத்தல்;

(ஞ) நிதிசார் திடமானதன்மையை மீள்நிலைப்படுத்துவதை நோக்காகக்கொண்ட வேறு முகாமைத்துவ நடவடிக்கை கள் அல்லது மூலோபாயங்கள் மற்றும் அந்நடவடிக்கை களின் அல்லது மூலோபாயங்களின் எதிர்பார்க்கப்பட்ட நிதிசார் விளைவு;

(ட) உரிமம்பெற்ற வங்கியானது எந்த சூழ்நிலைகளின்மீது மத்திய வங்கியினால் முனையப்பட்ட நிதிவசதிகளுக்கான அணுக்கத்தை நாடலாமோ அந்த சூழ்நிலைகள் பற்றிய ஒரு பகுப்பாய்வும் மற்றும் இணையுறுவாக தகைமைபெற முடியுமான சொத்துக்களை அடையாளங் காணலும்;

(ண) உரிமம்பெற்ற வங்கி ஏற்புச்செய்துள்ள அல்லது ஏற்புச் செய்ய அல்லது உட்கருதுகின்ற முன்னாயத்த வழிமுறைகள்; அத்துடன்

(த) அறவீட்டுத் திட்டமொன்றில் உள்ளடக்கப்பட வேண்டுமென மத்திய வங்கி காலத்துக்குக் காலம் குறித்துரைக்கின்றவாறான அல்லது தேவைப்படுத்துகின்றவாறான அத்தகைய வேறு தேவைப்பாடுகள் அல்லது தகவல்கள்.

(6) மத்திய வங்கியானது, அது அவசியமெனக் கருதினால், (1) ஆம் உட்பிரிவின்கீழ் தயாரிக்கப்பட்ட அறவீட்டுத் திட்டங்களை ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டு முடிவடைந்ததிலிருந்து ஒரு மாதத்தினுள் அதனது அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கும்படி எல்லா அல்லது தெரிவுசெய்யப்பட்ட உரிமம்பெற்ற வங்கிகளையும் பணிக்கலாம்.

(7) உரிமம்பெற்ற வங்கியொன்றினால் சமர்ப்பிக்கப்பட்ட அறவீட்டுத் திட்டமொன்று பாரிய குறைபாடுகளைக் கொண்டுள்ளதென்று அல்லது அவ்வறவீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் முட்டுக்கட்டைகள் உள்ளனவென்று மத்திய வங்கி கருதுகின்றவிடத்து, மத்திய வங்கியானது அத்தகைய உரிமம்பெற்ற வங்கிக்கு அத்தகைய குறைபாடுகளை அல்லது முட்டுக்கட்டைகளைப் பற்றி அறிவித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய அறிவித்தல் தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள், அக்குறைபாடுகளை அல்லது அம்முட்டுக்கட்டைகளை நிவர்த்திப்பதற்கான போதிய தீர்வுகளை உள்ளடக்கிய மீளாய்வு செய்யப்பட்ட அறவீட்டுத் திட்டமொன்றைச் சமர்ப்பிக்கும்படி அத்தகைய உரிமம்பெற்ற வங்கியைப் பணித்தலும் வேண்டும்.

(8) மத்திய வங்கியானது, உரிமம்பெற்ற வங்கியின் கோரிக்கையின்மேல், (7) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியை, (7) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஒருமாத காலப்பகுதி முடிவடைந்த திகதியிலிருந்து பதினான்கு நாட்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு நீடிக்கலாம்.

(9) மத்தியவங்கி–

(அ) உரிமம்பெற்ற வங்கியொன்று, அதன் பொருளாதாரச் செயற்பாட்டுக்கு அறிமுகப்படுத்துவதற்குத் தேவைப் படுத்தப்பட்ட மாற்றங்களை அடையாளம் கண்டிருக்க வில்லையென அபிப்பிராயப்படுகின்றவிடத்து; அல்லது

(ஆ) அத்தகைய அறவீட்டுத் திட்டத்தின் குறைபாடுகளை அல்லது முட்டுக்கட்டைகளை விளித்துரைப்பதற்கு உரிமம்பெற்ற வங்கியினால் முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் போதுமானவையாக இல்லையென அபிப்பிராயப்படுகின்றவிடத்து,

மத்திய வங்கியானது, குறைபாடுகளின் பாரதூரத்தன்மையையும் மற்றும் உரிமம்பெற்ற வங்கியினது தொழிலின் தொடர்ச்சிமீது அந்தந்த வழிமுறைகளின் விளைவையும் கவனத்துட்கொண்டு, (10) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட வழிமுறைகளுள் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்டவற்றை அல்லது அவசியமானதும் விகிதாசாரப்படியானதுமென அது கருதக்கூடியவாறான வேறே தேனும் வழிமுறையை எடுக்கும்படி அத்தகைய உரிமம்பெற்ற வங்கியைப் பணித்தல் வேண்டும்.

(10) உட்பிரிவு (9) இல் குறிப்பீடு செய்யப்பட்ட வழிமுறைகள் பின்வருவனவற்றையும் உள்ளடக்குதல் வேண்டும்:–

(அ) திரவத்தன்மை ஆபத்தைக் குறைத்தல் உட்பட, உரிமம்பெற்ற வங்கியின் ஆபத்துத் தோற்றுருவைக் குறைத்தல்;

(ஆ) உடனடியான மீள்மூலதனமயமாக்கல் வழிமுறைகளைப் பிரயோகித்தல்;

(இ) உரிமம்பெற்ற வங்கியின் மூலோபாயத்தையும் கட்டமைப்பையும் பரிசீலனை செய்தல்;

(ஈ) முக்கிய பணிகளினதும் திடீர் இடையூறு எதிர்ப்பாற்றலை முன்னேற்றும் பொருட்டு, நிதியளித்தல் மூலோபாயத்தைத் திரிபுபடுத்தல்; அல்லது

(உ) உரிமம்பெற்ற வங்கியின் நிருவாகக் கட்டமைப்பைத் திரிபுபடுத்தல்.

மத்திய வங்கி அறவீட்டுத் திட்டங்களைத் தயாரித்தல் பற்றிய பணிப்புக்களை வழங்குதல்

**10.** (1) மத்திய வங்கி, ஏதேனும் உரிமம்பெற்ற வங்கிக்கான அறவீட்டுத்திட்டங்களைத் தயாரித்தல் பற்றி அத்தகைய உரிமம்பெற்ற வங்கிக்கு, காலத்துக்குக்காலம் பணிப்புக்களை வழங்கலாம்.

(2) மத்திய வங்கியின் ஒழுங்குபடுத்தல் அல்லது மேற்பார்வைத் திணைக்களங்கள், உரிமம்பெற்ற வங்கிகளின் அறவீட்டுத் திட்டங்களின் மீள்மதிப்பீடொன்றை அல்லது இற்றைப்படுத்தலொன்றைத் தேவைப்படுத்தும் எவையேனும் மாற்றங்கள் பற்றி, 4 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட திணைக்களத்திற்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

மத்திய வங்கி தீர்மானிப்புத் திட்டமொன்றை வடிவமைத்தல்

**11.** (1) மத்திய வங்கியானது, வங்கிகளின் தீர்மானிப்புக்கு ஏற்புடையற்பாலனவான சர்வதேச நியமங்களுக்கும் மற்றும் சிறந்த செயல்முறைகளுக்கும் இணங்க, உரிமம்பெற்ற வங்கி ஒவ்வொன்றுக்கும் முறைமைசார் முக்கியத்துவத்தை அல்லது தாக்கத்தைக் கொண்டுள்ளதான தீர்மானிப்புத் திட்டமொன்றை வடிவமைத்தல் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கத்துக்காக உரிமம்பெற்ற வங்கியொன்று, மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியதான மாற்றுவழி, இடைத்தொடர்புநிலை, பதிலீட்டுத் தன்மையில்லாமை, சிக்கலான

தன்மை மற்றும் அத்தகைய வேறு ஒத்த கட்டளைக்கற்கள் அத்தகைய வங்கியின் வீழ்ச்சியானது நிதிசார் முறைமை நிலையுறுதியின் மீது பாரதூரமான தாக்கமொன்றை விளைவிக்கக் கூடியதாகவிருக்கு மிடத்து அல்லது விளைவிக்கக்கூடிய சாத்தியம் கொண்டதாக இருக்குமிடத்து முறையியல் முக்கியத்துவம் அல்லது தாக்கம் கொண்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) மத்திய வங்கியானது, பருவகால அடிப்படையில் அல்லது அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் ஒழுங்கமைப்புச்சார் கட்டமைப்பிலான, அதன் தொழிலிலான அல்லது அதன் நிதி நிலைமையிலான எவையேனும் முக்கிய மாற்றங்களின் பின்னர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் வடிவமைக்கப்பட்ட தீர்மானிப்புத் திட்டமொன்றை மதிப்பீடுசெய்தலும் இற்றைப்படுத்தலும் வேண்டும்.

(3) மத்திய வங்கி, தீர்மானிப்புத் திட்டத்தில் இச்சட்டத்தின்கீழான தீர்மானிப்பு வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் மற்றும் அதன் தீர்மானிப்பு அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்குமான விருப்பத்தெரிவுகளுக்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(4) மத்திய வங்கியின் கோரிக்கையின்மேல், உரிமம்பெற்ற வங்கியொன்று மத்திய வங்கியினால் தீர்மானிப்புத் திட்டம் விரிவுபடுத்தப்படுவதிலும் மற்றும் இற்றைப்படுத்தப்படுவதிலும் மத்திய வங்கிக்கு உதவியளித்தல் வேண்டும்.

(5) உரிமம்பெற்ற வங்கியொன்று, மத்திய வங்கியினால் வடிவமைக்கப்பட்ட தீர்மானிப்புத் திட்டம் பற்றிய மதிப்பீடொன்றை அல்லது இற்றைப்படுத்தலைத் தேவைப்படுத்தக்கூடிய எவையேனும் மாற்றங்கள் பற்றி உடனடியாக மத்திய வங்கிக்குத் தெரிவித்தல் வேண்டும்.

(6) மத்திய வங்கியின் கோரிக்கையின்மேல், உரிமம்பெற்ற வங்கியொன்று பின்வருவன பற்றிய விபரங்களுட்பட தீர்மானிப்புத் திட்டத்தின் வினைத்திறனான நடைமுறைப்படுத்தலுக்கு அவசியமான எல்லாத் தகவல்களையும் மத்திய வங்கிக்கு வழங்குதல் வேண்டும்:-

(அ) அந்தந்த பணிகள் மற்றும் செயற்பாட்டு வழிகள் தொடர்பான சொத்துக்களையும் பொறுப்புக்களையும் கணிசமாக வைத்திருத்தல் என்பனவுட்பட, அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் முக்கிய பணிகள்;

(ஆ) உரிமம்பெற்ற வங்கியினதும் மற்றும் அதன் கட்டுப்பாட்டின் கீழுள்ள எல்லா சட்ட உருவகங்களின தும் தனிசுக் கடப்பாடுகளின் வகுப்பு அல்லது வகுப்புக் கள் பற்றிய விவரணம்;

(இ) உரிமம்பெற்ற வங்கியினதும் மற்றும் வங்கித் தொழில் தொகுதியினுள்ளான வேறு சட்ட உருவகங்களினதும் இருப்புநிலைப் பட்டியலில் இடம்பெறா வெளிப்பாடுகள்;

(ஈ) உரிமம்பெற்ற வங்கியினதும் மற்றும் வங்கித் தொழில் தொகுதியினுள்ளான வேறு சட்ட உருவகங்களினதும் ஆபத்துக்களின் இழப்புக்காப்பு பற்றிய பிரதான தொழிற்பாடுகள்;

(உ) உரிமம்பெற்ற வங்கியின் அல்லது முக்கிய பணிகளின் பிரதான ஒப்பந்தஞ்சார் எதிர்த்திறத்தவர்கள்;

(ஊ) பிரதான ஒப்பந்தஞ்சார் எதிர்த்திறத்தவர்கள் மீதான உரிமம்பெற்ற வங்கியின் இடர்பாட்டுக்குள்ளான நிதிசார் நிலைமையின் தாக்கம் பற்றிய பகுப்பாய்வொன்று;

(எ) சட்ட உருவங்களுடனான தமது கடிதத்தொடர்பை அடையாளங்காணல் மற்றும் முக்கிய பணிகள் ஆகியனவுட்பட இலக்கத்தின் அல்லது பெறுமதியின் நியதிகளின்படி உரிமம்பெற்ற வங்கியானது எந்த முறைமையில் கணிசமான கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுகின்றதோ அந்த முறைமை;

(ஏ) சட்ட உருவகங்களுடனான தமது கடிதத்தொடர்பைத் தாபித்தல் மற்றும் முக்கிய பணிகள் ஆகியனவுட்பட, நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல், உரிமம் பெற்ற வங்கியானது எந்த கொடுப்பனவு, தீர்த்தல் அல்லது கொடுத்துத் தீர்த்தல் முறைமையில் ஒரு பங்குபற்றுனராகவுள்ளதோ அந்த கொடுப்பனவு, தீர்த்தல் அல்லது கொடுத்துத் தீர்த்தல் முறைமை ஒவ்வொன்றும்;

(ஐ) சட்ட உருவகங்களுடனான தமது கடிதத்தொடர்பைத் தாபித்தல் மற்றும் முக்கிய பணிகள் ஆகியனவுட்பட, உரிமம் பெற்ற வங்கியினால் பயன்படுத்தப்பட்ட ஆபத்து முகாமைத்துவம், கணக்கியல் அத்துடன் நிதிசார் மற்றும் நியதிச்சட்ட அறிக்கையிடல் என்பன பற்றிய பொருட் பட்டியலும் பிரதான தகவல் முகாமைத்துவ முறைமை களும்;

(ஒ) சட்ட உருவகங்களுடனான தமது கடிதத்தொடர்பைத் தாபித்தல், முக்கிய பணிகள் ஆகியனவுட்பட, தகவல் முகாமைத்துவ முறைமைகள், தகவல் தொழில்நுட்ப வியல் முறைமைகள் அல்லது உரிமங்களுடன் தொடர்புபட்ட சேவை வழங்குகை பற்றி நிறைவேற் றப்பட்ட உடன்படிக்கைகள்;

(ஓ) பணியாட்டொகுதியினர், பகிரப்பட்ட வசதிகளும் முறைமைகளும் அல்லது மூலதன நிதியளித்தல் அல்லது திரவத்தன்மைப் பொறிமுறைகள், ஏலவேயுள்ள அல்லது எதிர்பாராத கடன் வெளிப்பாடுகள், எல்லைக்கப்பாலான உத்தரவாத உடன்படிக்கைகள், எல்லைக்கப்பாலான தவறுகை இணையுறு உடன் படிக்கைகள் மற்றும் இணைக்கம்பெனிகளுக்கிடையே எல்லைக்கப்பாலான தீர்த்துவைத்தல் உடன்படிக்கை கள், ஆபத்துக் கைமாற்ற ஒழுங்கேற்பாடுகள் மற்றும் அடுத்தடுத்த வியாபார ஒழுங்கேற்பாடுகள் அல்லது சேவை வழங்குகை உடன்படிக்கைகள் என்பன உள்ளடங்கலாக உரிமம்பெற்ற வங்கிக்கும் ஏனைய அக்கறைகொண்டுள்ளோருக்கும் இடையேயான இடைத்தொடர்பு நிலையும் இடைத்தங்கியிருத்தல்களும்;

(ஔ) உரிமம்பெற்ற வங்கியின் தீர்மானிப்புத் திட்டத்தின் விரிவுபடுத்தலுக்கு அவசியமான தகவல்களை வழங்குவதற்குப் பொறுப்பாகவுள்ள உரிமம்பெற்ற வங்கியின் முக்கியமான முகாமைத்துவ ஆளணியினர்;

(க) தீர்மானிப்புத் திட்டத்தின் நோக்கத்துக்கான அவசியமான எல்லாத் தகவல்களையும் மத்திய வங்கி பெற்றுக் கொள்ளும் என்பதை உறுதிப்படுத்துவதற்கு உரிமம் பெற்ற வங்கி செயற்படுத்தியுள்ள பொறி முறைகள்;

(ங) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தீர்மானிப்பு வழிமுறைகளைப் பிரயோகிப்பதற்கான அதிகாரிகளின் முடிபொன்றினால் தூண்டப்படக்கூடிய மூன்றாம் திறத்தவர்களுடனான எவையேனும் உடன்படிக்கைகள் உரிமம்பெற்ற வங்கியினால் மற்றும் வேறேதேனும் சட்ட உருவகத்தினால் முடிவுறுத்தப்படுதலும் அம்முடிவுறுத்துகையினால் ஏற்படுத்தப்பட்ட விளைவுகள் அத்தகைய தீர்மானிப்பு வழிமுறைகளின் நடைமுறைப் படுத்தலை பாதிக்கக்கூடுமா எனும் விபரங்கள்; அத்துடன்

(ச) தீர்மானிப்புக்கு ஆதரவாகவுள்ள சாத்தியமான திரவத் தன்மை மூலங்கள்.

(7) மத்திய வங்கியின் எல்லா ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வைத் திணைக்களங்களும் மற்றும் மத்திய வங்கி தவிர்ந்த நிதிசார் துறையை ஒழுங்குபடுத்தும் வேறு ஏதேனும் அதிகாரிகளும் தீர்மானிப்புப் பணியை நடைமுறைப்படுத்துவதற்கும் மற்றும், அந்நோக்கத்துக்காக, அத்தகைய மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தல் திணைக்களங்களிடத்திலும் மத்தியவங்கி தவிர்ந்த நிதிசார் துறையை ஒழுங்குபடுத்தும் வேறு அதிகாரிகளிடத்திலும் (6) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட தகவல் கிடைக்கக்கூடியதாக உள்ளதென்பதை உறுதிப்படுத்துவதற்கும், 4 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட திணைக்களத்துக்கு ஒத்துழைப்பு வழங்குதல் வேண்டும். அத்தகைய தகவல் கிடைக்கக்கூடியதாகவுள்ளவிடத்து,

அத்தகைய திணைக்களங்களும் அதிகாரிகளும் அத்தகைய தகவலை 4 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட திணைக்களத்துக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(8) மத்திய வங்கியானது, அது அவசியமெனக் கருதினால், உரிமம்பெற்ற வங்கியொன்றுக்கான அல்லது முறைமைப்படுத்தப் பட்ட முக்கியத்துவத்தை அல்லது தாக்கத்தைக் கொண்டுள் ளவையாகக் கருதப்படாத வங்கிகளுக்கான எளிமைப்படுத்தப்பட்ட தீர்மானிப்புத் திட்டங்களை வடிவமைக்கலாம்.

தீர்க்கத் தகுதன்மை பற்றிய மதிப்பீடு

**12.** (1) மத்திய வங்கியானது, எத்தகைய உரிமம்பெற்ற வங்கி தொடர்பில் 11 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் தீர்மானத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதோ அத்தகைய உரிமம் பெற்ற வங்கியின் முறைமைப்படுத்தப்பட்ட முக்கியத்துவத்தை அல்லது தாக்கத்தைக் கருத்திற்கொண்டு உரிமம்பெற்ற வங்கியொன்று தீர்க்கத்தக்கதாகவுள்ளதா என்பதை மதிப்பீடுசெய்து பின்வருவன வற்றைப் பயன்படுத்தாமல் உரிமம் பெற்ற வங்கியைத் தீர்ப்பதற்கான நம்பத்தகுந்த மூலோபாயங்களை அனுமதிக்கின்ற முறையொன்றில் அத்தகைய ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கிக்கும் தோதானதென்றும் சாத்தியவள முள்ளதென்றும் அது கருதக்கூடியவாறான அத்தகைய தீர்மானிப்பு வழிமுறைகளை உருவாக்குதல் வேண்டும் -

(அ) இச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட நிதியளித்தல் பொறிமுறைகள் தவிர, அசாதாரண பகிரங்க நிதியுதவி; அத்துடன்

(ஆ) உத்தரவாதமளிக்கப்பட்டதாயினுஞ்சரி அல்லது வேறுவகையானதாயினுஞ்சரி, மத்திய வங்கியிட மிருந்து அவசரகால சூழ்நிலைகளிலான திரவத்தன்மை சார் உதவி.

(2) உட்பிரிவுகள் (3) மற்றும் (4) இன் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, மத்திய வங்கியானது, பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று அல்லது எவையேனும் ஒன்றுக்கு மேற்பட்டவை

உள்ளடங்கலாக, உரிமம்பெற்ற வங்கியின் தீர்க்கத்தகுதன்மையைத் தீர்மானிப்பதில் அத்தகைய உரிமம்பெற்ற வங்கியொன்றைப் பணிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வழிமுறைகளை எடுத்தல் வேண்டும் –

(அ) உரிமம்பெற்ற வங்கியின் நிதிசார் தொகுதி தொடர்பில் வேறு உருவகங்களுடனான தொகுதிக்குள்ளேயான நிதி உதவி உடன்படிக்கையொன்றை மீளாய்வுசெய்து முடிவு செய்தல்;

(ஆ) மூன்றாம் திறத்தவர்களுடனான சேவை உடன்படிக்கையொன்றைச் செய்தல் அல்லது மத்திய வங்கியானது உரிமம்பெற்ற வங்கியை தீர்மானிப்பின்கீழ் இடுகின்ற விடயத்தில், ஏலவேயுள்ள உடன்படிக்கைகள் பாதிக்கப்படாதிருப்பதை உறுதிப்படுத்தும் நோக்குடன் அத்தகைய உடன்படிக்கைகளில் வாசகங்களை உள்ளடக்குதல்;

(இ) தனியான உருவகமொன்றுக்கான அல்லது தொடர்புடைய உருவகங்களின் தொகுதியொன்றுக்கான அதன் வெளிப்பாட்டை மட்டுப்படுத்தல்;

(ஈ) குறிப்பான சொத்துக்களைக் கையுதிர்த்தல்;

(உ) குறிப்பான செயற்பாடுகளின் செயல்நிறைவேற்றத்தை அல்லது மேம்பாட்டை மட்டுப்படுத்துதல் அல்லது இல்லாதொழித்தல் அல்லது புதிய செயற்பாடுகளைத் தொடங்குதல்;

(ஊ) தீர்மானிப்பு நடவடிக்கைமுறையில் முக்கிய பணிகளை வேறு பணிகளிலிருந்து தனிவேறாக்கக்கூடியதனை உறுதிப்படுத்தி, உரிமம்பெற்ற வங்கிக்கான தோதான சட்ட மற்றும் ஒழுங்கமைப்புசார் மாற்றங்களை அறிமுகப்படுத்தல்;

(எ) குறிப்பான நட்டங்களை ஈடுசெய்வதற்கென காப்புறுதிப் பொறிமுறைகளுட்பட, பொறிமுறைகளைத் தாபித்தல்; அத்துடன்

(ஏ) நட்ட உள்ளீர்ப்புப் பொறுப்புக்கள் உட்பட, மூலதனம் மற்றும் பொறுப்புக்களுக்கான குறைந்தபட்ச தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்கு அவசியமான எவையேனும் வழிமுறைகளை எடுத்தல்.

(3) மத்திய வங்கியானது, ஏதேனும் உரிமம்பெற்ற வங்கியின் தீர்க்கத்தகுதன்மை பற்றிய மதிப்பீடொன்றை நடாத்துவதற்குப் பயன்படுத்தப்படவேண்டிய முக்கிய மூலக்கூறுகள், நியமங்கள் மற்றும் கட்டளைக்கற்கள் என்பவற்றைக் குறித்துரைத்து, அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் தீர்க்கத்தகுதன்மையை உறுதிப்படுத்துவதற்கான பணிப்புக்களை காலத்துக்குக்காலம் வழங்கலாம்.

(4) மத்திய வங்கியானது, (3) ஆம் உட்பிரிவின்கீழ் உரிமம்பெற்ற வங்கியொன்றின் தீர்க்கத்தகுதன்மையை மதிப்பிடுகின்றபோது உரிமம்பெற்ற வங்கிக்கு கேட்தற்கற்கான சந்தர்ப்பத்தினை வழங்குதல் வேண்டும்.

(5) மத்தியவங்கி அது அவசியமெனக் கருத்தினால், உரிமம்பெற்ற வங்கியின் தீர்க்கத்தகுதன்மையை மதிப்பிடுவதில் அத்தகைய வங்கியின் தொகுதியிலான வெளிப்பாட்டைக் கவனத்துட்கொள்ளலாம்.

*தீர்மானிப்புக்கான நிபந்தனைகள்*

**13.** (1) இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் வேறு எவையேனும் ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், மத்திய வங்கியானது, உரிமம்பெற்ற வங்கியொன்று தொடர்ந்தும் ஒப்பேற்றக்கூடியதாக இல்லையென்றும் அல்லது தொடர்ந்து நிலைத்திருப்பதற்கான சாத்தியமில்லையென்றும் அத்துடன் (2) ஆம் உட்பிரிவில் தரப்பட்ட சூழ்நிலைகளின்கீழ் நிலைத்திருப்பதாக வருவதற்கான நியாயமான வாய்ப்புக்களைக் கொண்டிருக்கவில்லையென்றும் திருப்தியுறுகின்றவிடத்து, மத்திய வங்கி, இச்சட்டத்தின்கீழ் அத்தகைய உரிமம்பெற்ற வங்கியைத் தீர்மானிப்புச்செய்வதற்கு முடிபு செய்யலாம்.

(2) உரிமம்பெற்ற வங்கியொன்று பின்வரும் சூழ்நிலைகளுள் ஒன்றின்போது அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றின்போது தொடர்ந்தும் நிலைத்திருக்காததாகவும் மற்றும் தொடர்ந்தும் நிலைத்திருப்பதற்கான நியாயமான வாய்ப்புக்களைக் கொண்டிராததாகவும் இருப்பதாகக் கருதப்படுகின்றது அல்லது அவ்வாறு இருப்பதற்கான சாத்தியமுள்ளதாகக் கருதப்படுகின்றது:-

(அ) உரிமம்பெற்ற வங்கியொன்று அவ்வுரிமம்பெற்ற வங்கிக்கு வழங்கப்பட்ட உரிமத்தை இல்லாதாக்குவதற்கு மத்திய வங்கியைக் கட்டாயப்படுத்தக்கூடிய முறையொன்றில், வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட வழங்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிக்கு, பணிப்புக்கு, தீர்மானத்திற்கு, கட்டளைக்கு அல்லது ஒழுங்குபடுத்தல், மூலதன மற்றும் திரவத்தன்மைசார் தேவைப்பாடுகள் உள்ளடங்கலான ஏதேனும் தேவைப்பாட்டுக்கு இணங்கியொழுகத் தவறியுள்ளதென அல்லது இணங்கியொழுகத் தவறுவதற்கான சாத்தியத்தைக் கொண்டுள்ளதென மத்திய வங்கி அபிப்பிராயப்படுமிடத்து;

(ஆ) உரிமம்பெற்ற வங்கியொன்று கடனிறுக்க வகையற்றதாக உள்ளதென்று அல்லது கடனிறுக்க வகையற்றதாக வருவதற்கான சாத்தியத்தைக் கொண்டுள்ளதென்று மத்திய வங்கி அபிப்பிராயப்படுமிடத்து; அத்துடன்

(இ) உரிமம்பெற்ற வங்கியொன்று அதன் கடப்பாடுகள் வருமதியாகவுள்ளவாறாக, வைப்பாளர்களுக்கான அல்லது வேறு கடன்கொடுநர்களுக்கான அக்கடப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்கு இயலாததாக உள்ளவிடத்து அல்லது மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்பட்டவாறான அதன் எவையேனும் கடப்பாடுகளை பூர்த்திசெய்ய இயலாதிருப்பதற்கான சாத்தியத்தைக் கொண்டுள்ளவிடத்து.

(3) உரிமம்பெற்ற வங்கியொன்றின் எவையேனும் முன்னரான இடையீட்டு வழிமுறைகளின் அல்லது வேறு எவையேனும் மேற் பார்வை வழிமுறைகளின் நடைமுறைப்படுத்துகையானது, மத்திய வங்கி இச்சட்டத்தின்கீழான அதன் தீர்மானிப்பு அதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கான முன்நிபந்தனையொன்றாகக் கருதப்படுத லாகாது.

(4) மத்திய வங்கி, உரிமம்பெற்ற வங்கியொன்றைத் தீர்மானிப்புச் செய்வதற்கு முடிபுசெய்கின்றவிடத்து, அது அத்தகைய உரிமம்பெற்ற வங்கிக்கு எழுத்திலான அதனது முடிபை அறிவித்து இச்சட்டத்தின் கீழான தீர்மானிப்பு வழிமுறைகளை நடைமுறைப் படுத்தத் தொடங்குதல் வேண்டும்.

(5) மத்திய வங்கி (1) ஆம் உட்பிரிவின்கீழ் உரிமம்பெற்ற வங்கியொன்றைத் தீர்மானிப்புச்செய்வதற்கு முடிபுசெய்கின்ற விடத்து, அது 14 ஆம் பிரிவில் தரப்பட்ட தீர்மானிப்புத் தத்துவங்களுள் ஏதேனும் ஒன்றை அல்லது எவையேனும் அதற்கு மேற்பட்டவற்றைப் பிரயோகிக்கலாம்:

ஆயின் எவ்வாறாயினும், மத்திய வங்கி (4) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிவிப்புத் தேதியிலிருந்து முப்பது நாட்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்குள் ஆகக்குறைந்தது அத்தகைய தீர்மானிப்புத் தத்துவமொன்றைப் பிரயோகித்தல் வேண்டும்.

(6) தீர்மானிப்புக்கமைய உரிமம்பெற்ற வங்கியொன்று, இச்சட்டத்தின்கீழான தீர்மானிப்பு வழிமுறைகள் தொடங்கப்பட்ட பின்னர், அதன் தொழிலை மத்திய வங்கியின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுநடாத்துதல் வேண்டும்.

*மத்திய வங்கியின் தீர்மானிப்புத் தத்துவங்கள்*

**14.** (1) உரிமம்பெற்ற வங்கியொன்றின் தீர்மானிப்பு நோக்கத்துக் காக மத்திய வங்கி பின்வருவனவற்றுக்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) அத்தகைய உரிமம்பெற்ற வங்கிக்கான நிருவாகி யொருவரை நியமித்தல்;

(ஆ) அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் பங்குகளின் கைமாற்றமொன்றை வலுவுறுத்தல்;

(இ) அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் தெரிவு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் எல்லாவற்றையும் அல்லது எவற்றையும் கைமாற்றுதல்;

(ஈ) ஏலவேயுள்ள பங்குதாரர்களுக்கூடாகவும் மற்றும் புதிய பங்குதாரர்களுக்கூடாகவும் மூலதன அதிகரிப்பொன்றை ஏற்படுத்துதல்;

(உ) இணைப்பு வங்கியொன்றைத் தாபிப்பதற்கான மூலதனத்தை வழங்கும்படி அமைச்சரைக் கோருதல்; அல்லது

(ஊ) மத்திய வங்கியினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளை அடிப்படையாகக்கொண்டு அப் பொருள்பட அத்தகைய உரிமம்பெற்ற வங்கியொன்றின் தீர்மானிப்புக்கான தற்காலிக நிதிஉதவியை வழங்குவதற்கு அமைச்சரைக் கோருதல்.

(2) இச்சட்டத்தின் கீழான உரிமம்பெற்ற வங்கியொன்றின் தீர்மானிப்பின் நோக்கத்துக்காக, மத்திய வங்கியானது, (1) ஆம் உட்பிரிவில் தரப்பட்ட தத்துவங்களுக்கு மேலதிகமாக, அது தனியாக அல்லது கூட்டிணைந்து நேரடியாக அல்லது நிருவாகியொருவரை நியமிப்பதனூடாகப் பிரயோகிக்கக்கூடிய பின்வரும் தத்துவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் பணிப்பாளர்களை, பிரதம நிறைவேற்று அலுவலரை அல்லது முக்கிய முகாமைத்துவ ஆளணியினரை அல்லது வேறெவரேனும் ஊழியரை நீக்குதல் அல்லது மாற்றீடு செய்தல்;

(ஆ) பந்தி (அ) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனுமாளுக்கு அத்தகைய உரிமம்பெற்ற வங்கியினால் செலுத்தப்பட்ட மாறுபடக்கூடிய ஊதியத்தை அறவீடு செய்தல் அல்லது மீட்டெடுத்தல்;

(இ) ஏதேனும் கொடுக்கல்வாங்கலில் அத்தகைய உரிமம் பெற்ற வங்கியின் பங்குதாரர்களின் உரிமைகளைப் புறக்கணித்தல்;

(ஈ) ஒப்பந்தங்களை முடிவுறுத்தல், தொடர்தல் அல்லது குறித்தளித்தல், சொத்துக்களைக் கொள்வனவு செய்தல் அல்லது விற்பனை செய்தல், தனிசுகளை எழுத்தி லிடுதல் மற்றும் உரிமம்பெற்ற வங்கியின் தொழிற்பாடு களை மீள்கட்டமைப்பதற்கு அல்லது முடிவுக்குக் கொண்டுவருவதற்கு அவசியமான வேறேதேனும் நடவடிக்கையை எடுத்தல்;

(உ) பின்வருவனவற்றின்மூலம் அத்தியாவசிய சேவை களினதும் முக்கிய பணிகளினதும் தொடர்ச்சியை உறுதிப்படுத்தல்–

(i) தற்காலிக காலப்பகுதியொன்றுக்கு உரிமம் பெற்ற வங்கிமூலம் அதன் அடுத்துறுநருக்கு அல்லது ஏதேனும் கொள்ளும் கம்பெனிக்கு;

(ii) உரிமம்பெற்ற வங்கி சார்பில் இணைக்கப்படாத மூன்றாம் திறத்தவர்களிடமிருந்து அவசியமான சேவைகளைப் பெறுகை செய்வதன்மூலம்;

(iii) தீர்மானிப்புக்கு முன்னர் ஏலவேயுள்ள நியதி நிபந்தனைகளின்கீழ் இணைப்பு வங்கியுட்பட கைமாற்றுநருக்கு உரிமம்பெற்ற வங்கியின் முக்கிய பணிகளின் தொடர்ச்சிக்கு அவசிய மானவாறான அத்தகைய சேவைகளைத் தொடர்ச்சியாக வழங்கும்படி எவரேனும் சேவை வழங்குநரைத் தேவைப்படுத்துவதன் மூலம்;

(ஊ) மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக ஆறு மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு

உரிமம்பெற்ற வங்கியின் தொழில் அனைத்தையும் அல்லது அதன் பாகத்தை இடைநிறுத்துதல், மட்டுப் படுத்துதல் அல்லது தடைசெய்தல்;

(எ) இரண்டு வேலை நாட்களுக்கு மேற்படாத காலப்பகுதி யொன்றுக்கு பின்வருவனவற்றை இடைநிறுத்துதல் -

(i) தீர்மானிப்புக்கான உரிமம்பெற்ற வங்கியினது நுழைவின் பயனைக்கொண்டு அல்லது இச்சட்டத்தின்கீழான எவையேனும் தீர்மானிப் புத் தத்துவங்களைப் பிரயோகிப்பதன் பயனைக்கொண்டு எழுகின்றவையும், உரிமம் பெற்ற வங்கியானது எந்த நிதிசார் ஒப்பந்தத் தின் திறத்தவரொருவராக உள்ளதோ அந்த நிதிசார் ஒப்பந்தத்தின் விரைவுறுத்தல் உரிமை, முடிவுறுத்தல் உரிமை அல்லது எதிரீட்டு உரிமை;

(ii) உரிமம்பெற்ற வங்கி திறத்தவரொருவராக உள்ள ஒப்பந்தமொன்றின் கீழான கொடுப்பன வொன்றை அல்லது வழங்கலொன்றைச் செய்வதற்கான கடப்பாடு;

(iii) உரிமம்பெற்ற வங்கி திறத்தவரொருவராக உள்ள ஒப்பந்தமொன்றின்கீழ் சொத்துக்களை அல்லது வேறுவகையில் சேகரிக்கப்பட்ட பணத்தை அல்லது ஆதனத்தை இணைப்பதற் கான உரிமை;

(ஏ) உரிமம்பெற்ற வங்கியின் மூலதனத்தை அதிகரிப்ப தன்மூலமும் மற்றும் புதிய பங்குதாரர்களுக்கு பங்குகளை விற்பனை செய்வதன்மூலமும் உரிமம்பெற்ற வங்கியை மீள்-ஒழுங்கமைத்தல் மற்றும் உரிமம்பெற்ற வங்கியின் பணிப்பாளர்கள் சபையை மீளுருவாக்கு தல்;

(ஐ) உரிமம்பெற்ற வங்கியின் ஒப்பேற்றக்கூடியதல்லாத தொழிலை முடிவிடுதல் அல்லது அதன் முகாமைத்துவத்தை மீள் ஒழுங்கமைத்தல் உட்பட, வைப்பாளர்களின் நலன்களுக்கான ஏதேனும் முறையில் உரிமம்பெற்ற வங்கியை மீள்நிர்மாணம் செய்தல்;

(ஒ) உரிமம்பெற்ற வங்கியின் பங்குதாரர்களுக்கு மற்றும் துணைநிலைப்படுத்தப்பட்ட தனிசு வைத்திருப்பாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நட்டங்களை ஏற்றங்கீகரித்தல்;

(ஓ) உரிமம்பெற்ற வங்கியின் தனிசுக் கடப்பாடுகளை மூலதனமாக மாற்றுதல்;

(ஔ) மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய நியதிநிபந்தனைகளின் மீது, உரிமம்பெற்ற வங்கியின் செலவில் சுயாதீன சட்டத்தரணிகள், கணக்காளர்கள், கணக்காய்வாளர்கள், விலைமதிப்பு நிபுணர்கள் மற்றும் ஆலோசகர்களை ஈடுபடுத்தல்;

(க) இச்சட்டத்தின்கீழ் தீர்மானிப்புத் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் உறப்பட்ட செலவினங்களை எதிர்கொள்ளுதல்; அல்லது

(ங) இப்பிரிவின்கீழான தத்துவங்களின் பிரயோகத்தைப் பாதிக்கின்ற அல்லது அதனுடன் தொடர்புபட்ட, அல்லது அதன் இடைநேர்விளைவான ஏதேனும் கருமம் தொடர்பில் மத்திய வங்கி அவசியமெனக் கருதக்கூடிய அத்தகைய வேறுவிடயங்களைச் செய்தல்.

**15.** (1) பிரிவு 8 இல் குறித்துரைக்கப்பட்ட தீர்மானிப்பின் குறிக்கோள்களை எய்தும் பொருட்டும் மற்றும் 30, 31, 32, 33 மற்றும் 34 ஆம் பிரிவுகளில் ஏற்பாடு செய்யப்பட்ட தீர்மானிப்பு வழிமுறைகளின் வினைத்திறனான நடைமுறைப்படுத்தலை உறுதிப்படுத்தும் பொருட்டும் மத்திய வங்கி இச்சட்டத்தின்கீழ் நிதிசார் உறுதிப்பாட்டு நிதியமொன்றைத் தாபித்தல் வேண்டும். *நிதிசார் உறுதிப்பாட்டு நிதியம்*

(2) நிதிசார் உறுதிப்பாட்டு நிதியம், மத்திய வங்கியின் வேறு சொத்துக்களிலிருந்தும் மற்றும் மத்திய வங்கியால் முகாமை செய்யப்படும் சொத்துக்களிலிருந்தும் தனிவேறாக முகாமை செய்யப்படுதல் வேண்டும்.

(3) மத்திய வங்கி பின்வருவனவற்றுக்கான தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் -

(அ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நிதிசார் உறுதிப்பாட்டு நிதியத்தை முகாமை செய்தல், நிருவகித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்;

(ஆ) நிதிசார் உறுதிப்பாட்டு நிதியத்தின் பொது நிருவாகம் தொடர்பிலான கொள்கைகளை வகுத்தமைத்தல்;

(இ) நிதிசார் உறுதிப்பாட்டு நிதியத்தின் நிதி முகாமைத்துவத்துக்கு அவசியமாகக்கூடியவாறான அல்லது விரும்பத்தக்கவாறாக முதலீடுசெய்தலும் மற்றும் ஏதேனும் கொடுக்கல்வாங்கலை அல்லது உடன்படிக்கையைச் செய்தலும்; அத்துடன்

(ஈ) ஐம்பத்தோராம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, உரிமம்பெற்ற வங்கிகளின் தீர்மானிப்புக்கள் பற்றிய நிதியளிப்புக்குப் பங்களித்தல்.

(4) பின்வருவன நிதிசார் உறுதிப்பாட்டு நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும் -

(அ) அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகள்;

(ஆ) அரசாங்கத்திடமிருந்தான உதவுதொகைகள்;

(இ) சர்வதேச நிதிசார் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட மானியங்கள் அல்லது கடன்கள்;

(ஈ) நிதிசார் உறுதிப்பாட்டு நிதியத்தின் பணங்களினது முதலீடுகளிலிருந்து பெறப்படுகின்ற முதலீட்டு வருமானமும் ஈட்டுகைகளும்;

(உ) 33 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, மத்திய வங்கி அவசியமானவையாகக் கருதக்கூடியவாறான உரிமம்பெற்ற வங்களிடமிருந்தான உதவுதொகைகள்; அத்துடன்

(ஊ) அமைச்சரினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான வேறேதேனும் மூலத்திலிருந்தான ஏதேனும் வருமானம்.

தீர்மானிப்பின் நோக்கத்துக்காக உரிமம்பெற்ற வங்கியொன்றின் சொத்துக் களையும் பொறுப்புக் களையும் விலைமதிப்பிடல்

**16.** (1) தீர்மானிப்பு நோக்கத்துக்காக உரிமம்பெற்ற வங்கியொன்றின் சொத்துக்களினது மற்றும் பொறுப்புக்களினது அல்லது பங்குகளினது பெறுமதியை மதிப்பிடும்பொருட்டு, மத்திய வங்கியானது எவையேனும் தீர்மானிப்பு வழிமுறையை நடைமுறைப்படுத்த முன்னரான எந்தநேரத்திலும், காலத்துக்குக் காலம் மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தகைமைகளையும் அனுபவத்தையும் கொண்டிருக்க வேண்டிய சுயாதீன உயர்தொழில்சார் விலைமதிப்பீட்டாளர் ஒருவரினால் நிறைவேற்றப்பட வேண்டிய அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் பங்குகள் பற்றிய ஓர் அறிவார்ந்ததும் யதார்த்தமானதுமான விலைமதிப்பீட்டைச் செய்விக்கும்படி அத்தகைய உரிமம்பெற்ற வங்கியைப் பணிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், மத்திய வங்கியானது, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட தகைமைகளையும் அனுபவத்தையும் கொண்டிருக்கவேண்டிய சுயாதீன உயர்தொழில்சார் விலைமதிப்பீட்டாளர் ஒருவருக்கூடாக நிறைவேற்றப்பட வேண்டிய உரிமம்பெற்ற வங்கியொன்றின் சொத்துக்கள், பொறுப்புக்கள் அல்லது பங்குகள் பற்றிய விலைமதிப்பீட்டொன்றைச் செய்விக்கலாம்.

(3) தீர்மானிப்பு வழிமுறைகளை எடுப்பதற்கான அவசரத் தன்மை காரணமாக தீர்மானிப்பு நோக்கங்களுக்கான ஒரு திட்ட வட்டமான விலைமதிப்பிடல் சாத்தியமில்லாதுள்ளவிடத்து, மத்திய வங்கியானது,-

(அ) நிறைவேற்றப்பட வேண்டிய தற்காலிக விலைமதிப்பீ டொன்றைச் செய்விக்கும்படி உரிமம்பெற்ற வங்கி யொன்றைப் பணிக்கலாம்; அல்லது

(ஆ) தற்காலிக விலைமதிப்பீடொன்றை நேரடியாகப் பொறுப்பேற்கலாம்:

ஆயின் எவ்வாறாயினும், அத்தகைய தற்காலிக விலைமதிப் பீடானது செயன்முறைக்குகந்தவாறு விரைவாக, இறுதி சுயாதீன விலைமதிப்பீடொன்றாகப் பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும்.

(4) உட்பிரிவுகள் (1) மற்றும் (2) இன்கீழ் விலைமதிப்பீட்டாளருக்குச் செய்யப்படவேண்டிய கொடுப்பனவுகள், மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக் கிணங்க உரிமம்பெற்ற வங்கியினால் பொறுக்கப்படுதல் வேண்டும்.

(5) மத்திய வங்கியானது, இப்பிரிவின் நோக்கங்களுக்காக உயர்தொழில்சார் விலைமதிப்பீட்டாளர்களை நியமிப்பதற்கும் மற்றும் அவர்களின் நிரலொன்றை வெளியிடுவதற்குமான அதிகாரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) மத்திய வங்கி, இப்பிரிவின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக காலத்துக்குக்காலம் பணிப்புக்களை வழங்கலாம்.

உரிமம்பெற்ற வங்கிக்கு எதிராக நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகளை நிறுத்தும் கட்டளை

**17.** (1) மத்திய வங்கியானது, உரிமம்பெற்ற வங்கியொன்றின் வைப்பாளர்களின் நலன்கருதி, இச்சட்டத்தின்கீழான தீர்மானிப்பு வழிமுறைகளை நடைமுறைப்படுத்தும் நோக்கங்களுக்காக அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் தொழில் அனைத்தையும் அல்லது அதன் பாகத்தை கொண்டுநடாத்துவதிலிருந்து அத்தகைய உரிமம்பெற்ற வங்கியைத் தடைசெய்துள்ளவிடத்து, மத்திய வங்கியினால் அதுசார்பில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொரு

வர், அதன் எவையேனும் தொழில்கள் தொடர்பில் உரிமம்பெற்ற வங்கிக்கு எதிராக குடியியல் தன்மையினதான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளை தொடர்ந்துநடாத்துவதனைத் தடுப்ப தற்கான கட்டளையொன்றுக்காக நீதிமன்றத்துக்கு விண்ணப்ப மொன்றைச் செய்யலாம்.

(2) நீதிமன்றமானது (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றை மறுதிறத்தவரின்றி கேட்பதன்மேல், உரிமம்பெற்ற வங்கியின் எவையேனும் தொழில்கள் தொடர்பில் அவ்வுரிமம்பெற்ற வங்கியினால் அல்லது அவ்வுரிமம்பெற்ற வங்கிக்கு எதிராக குடியியல் தன்மையினவான எவையேனும் வழக்குநடவடிக்கைகளைத் தொடர்ந்துநடாத்துவதனை மூன்று மாதங்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு நிறுத்தி கட்டளை யொன்றை ஆக்கலாம்.

(3) நீதிமன்றமொன்று (2) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளை யொன்றை ஆக்குகின்றவிடத்து, மத்திய வங்கி செயன்முறைக் குகந்தவாறு விரைவாக அத்தகைய கட்டளை பற்றிய அறிவித்த லொன்றை வர்த்தமானியிலும் மற்றும் இலங்கையில் புழக்கத்தி லுள்ள ஆகக்குறைந்தது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலான தினசரி செய்தித்தாள்களிலும் வெளியிடு தல் வேண்டும்.

## பாகம் II

### தீர்மானிப்பு வழிமுறைகள்

நிருவாகி ஒருவரை நியமித்தல்

**18.** (1) மத்திய வங்கி, உரிமம்பெற்ற வங்கியொன்றின் தீர்மானிப்பின் நோக்கத்துக்காக வர்த்தமானியிலும் மற்றும் இலங்கையில் புழக்கத்திலுள்ள ஆகக்குறைந்தது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளிலான மூன்று தினசரி செய்தித்தாள்களிலும் வெளியிடப்பட்ட கட்டளைமூலம், (2) ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறான தகுதியானவரும் தகுந்தவருமான ஆளொருவரை அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் நிருவாகியாக நியமிக்கலாம்.

(2) ஆளொருவர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் நிருவாகியாக நியமிக்கப்படுவதற்குத் தகுதியானவரும் தகுந்தவருமான ஆளாக உள்ளாரா என்பதைத் தீர்மானிப்பதில், அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் உரிமம்பெற்ற வங்கியொன்றின் பணிப்பாளர்களினது தகுதியையும் பொருத்தப்பாட்டையும் தீர்மானிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கட்டளைக்கற்கள், அத்தகைய ஆளுக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) நிருவாகி சுயாதீன ஆளொருவராக இருத்தல் வேண்டும்; அவர் தீர்மானிப்புக்கமைய உரிமம்பெற்ற வங்கியின் அலுவல்களில், நிதிரீதியில் அல்லது வேறுவகையில், நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறையைக் கொண்டிருத்தலாகாது. அத்தகைய நியமனத்தின் பின்னர் அத்தகைய வங்கியின் அலுவல்களில் நிதி ரீதியில் அல்லது வேறுவகையில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறையைக் கொள்கின்ற இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் உரிமம்பெற்ற வங்கியொன்றின் நிருவாகியாக நியமிக்கப்பட்ட எவரேனுமாள் அத்தகைய நிகழ்வு பற்றி மத்திய வங்கிக்கு உடனடியாகத் தெரிவித்தல் வேண்டுமென்பதுடன் அதன்பின் உடனடியாக நிருவாகியாகச் செயலாற்றுவதிலிருந்து இல்லாதொழிதலும் வேண்டும்.

(4) நிருவாகியொருவர் நியமனத் தேதியிலிருந்து ஆறு மாதங்களைக்கொண்ட பதவிக்காலமொன்றுக்கு நியமிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய பதவிக்காலம், அவ்வாறு செய்வதற்குத் தேவையிருப்பின், வர்த்தமானியிலும் மற்றும் இலங்கையில் புழக்கத்திலுள்ள ஆகக்குறைந்தது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளிலான மூன்று தினசரி செய்தித்தாள்களிலும் வெளியிடப்பட்ட கட்டளையொன்றின்மூலம், ஒரு நேரத்தில் ஆறு மாதங்களைக்கொண்ட மேலதிக காலப்பகுதிகளுக்காக காலத்துக்குக் காலம் நீடிக்கப்படலாம்.

(5) நிருவாகியொருவரை நியமித்தல் பற்றிய அல்லது நிருவாகியொருவரின் பதவிக்காலத்தை நீடித்தல் பற்றிய மத்திய வங்கியின் கட்டளையானது, விடயத்துக்கேற்ப, அத்தகைய நியமனத்துக்கான அல்லது பதவிக்கால நீடிப்புக்கான காரணங்களைக் குறித்துரைத்து உரிமம்பெற்ற வங்கிக்கு எழுத்தில் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(6) நிருவாகியொருவர், (2) ஆம் அல்லது (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைப் பின்பற்றி ஏதேனும் தகைமையீனத்துக்கு அமைந்தவராக வருகின்றவிடத்து, மத்திய வங்கி (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு வேறு எவரேனு மாளை நிருவாகியாக நியமித்தல் வேண்டும்.

(7) ஒன்பதாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய நிருவாகியொரு வருக்கு மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் செலுத்தப்படுதல் வேண்டும்.

(8) நிருவாகி, (19 ஆம் அத்தியாயமான) தண்டனைச்சட்டக் கோவையின் பாகம் IX இன் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளரொருவராக இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், நிருவாகி யானவர் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாக அல்லது குழும மொன்றாக இருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, அதன் பணிப்பாளர் கள் அல்லது முகாமைத்துவப் பங்காளர்கள் அத்தகைய நோக்கங் களுக்காக பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(9) நிருவாகியின் ஊதியக் கொடுப்பனவுட்பட நிருவாகித்துவம் காரணமாக மத்திய வங்கியினால் உறப்பட்ட எல்லா ஆகு செலவுகளும் மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடிய வாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கிணங்க, தீர்மானிப்புக் கமைவாக உரிமம்பெற்ற வங்கியினால் பொறுக்கப்படுதலும் அவ்வங்கிக்கு பொறுப்பிக்கப்படுதலும் வேண்டும். அவ்வாறு செலுத்தப்படற்பாலதான ஏதேனும் ஆகுசெலவானது, அது முழுமையாக மத்திய வங்கிக்குச் செலுத்தப்படும்வரை, அத்தகைய உரிமம்பெற்ற வங்கியிடமிருந்து மத்திய வங்கிக்கான தனிசு வருமதியொன்றை அமைத்துருவாக்குதல் வேண்டும்.

நிருவாகியினால் கட்டுப்பாடு கையேற்கப் படுவதன் பயன்

**19.** (1) பதினெட்டாம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட நிருவாகி, தீர்மானிப்புக்கமைய, உரிமம்பெற்ற வங்கியின் எல்லாச் சொத்துக் கள், உரிமைகள், தொழில் மற்றும் அலுவல்களினதும் கட்டுப் பாட்டைப் பொறுப்பேற்றல் வேண்டுமென்பதுடன் அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அல்லது (4) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு

செய்யப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி முடிவடையும்வரை அல்லது அத்தகைய ஏதேனும் கட்டளை இல்லாதொழிக்கப்படும் நேரம்வரை உரிமம்பெற்ற வங்கியின் பெயரிலும் அதன் சார்பிலும் அவ்வுரிமம்பெற்ற வங்கியின் தொழிலையும் அலுவல்களையும் கொண்டுநடாத்துதல் வேண்டும்.

(2) நிருவாகியொருவர் நியமிக்கப்படுவதன்மேல், உரிமம்பெற்ற வங்கியின் எல்லா ஆதனம், தொழில் மற்றும் அலுவல்கள் பற்றிய விபரங்களை நிருவாகிக்குச் சமர்ப்பிப்பதும் அத்தகைய ஆதனத்தின், தொழிலின் மற்றும் அலுவல்களின் கட்டுப்பாட்டை நிருவாகிக்குக் குறித்தளித்தலும், தீர்மானிப்புக்கமைய அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் எல்லா பணிப்பாளர்களினதும் ஊழியர்களினதும் கடமையாதல் வேண்டும்.

(3) நான்காம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, தீர்மானிப்புக்கமைய உரிமம்பெற்ற வங்கியொன்றின் பணிப்பாளர்களும் மற்றும் ஊழியர்களும் அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் தொழிலையும் அலுவல்களையும் கொண்டுநடாத்துவதற்கு தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லா வசதிகளையும் நிருவாகிக்கு வழங்குதல் வேண்டும்.

(4) பதினெட்டாம் பிரிவின்கீழ் உரிமம்பெற்ற வங்கியொன்று தொடர்பில் மத்திய வங்கியினால் ஆக்கப்பட்ட கட்டளையொன்று வலுவிலுள்ள காலப்பகுதியினுள் -

(அ) அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின், அதன் பணிப்பாளர்களின் மற்றும் பங்குதாரர்களின் எல்லாக் கடமைகளும் பணிகளும் மற்றும் அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் சம்பந்தப்பட்ட அமைப்புக் கூறாகவுள்ள ஆவணங்களும் நிருவாகிக்கு உரித்தானவையாதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் எவரேனும் பணிப்பாளர், முக்கியமான முகாமைத்துவ ஆளணியினர் அல்லது ஊழியரொருவர், நிருவாகியினால்

தேவைப்படுத்தப்படக்கூடியவாறு அல்லது அதிகார மளிக்கப்படக்கூடியவாறு தவிர, உரிமம்பெற்ற வங்கி தொடர்பில் அல்லது உரிமம்பெற்ற வங்கிக்காக, மற்றும் அதுசார்பில் ஏதேனும் செயற்பாட்டில், ஒன்றில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல், ஈடுபடுதலாகாது; அத்துடன்

(இ) எத்தன்மையினதுமான ஏதேனும் ஊதியம், நிருவாகியின் எழுத்திலான முன்னங்கீகாரத்துடன்தவிர, அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் எவரேனும் பணிப்பாளருக்கு, முக்கியமான முகாமைத்துவ ஆளணியினருக்கு அல்லது ஊழியரொருவருக்கு ஒன்றுதிரளுதல் அல்லது செலுத்தப்படற்பாலதாதல் ஆகாது.

*நிருவாகி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய பொருட் பட்டியல் ஒன்றைத் தயாரித்தல்*

**20.** நிருவாகி, அவரது நியமனத் தேதியிலிருந்து அல்லது மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் அவரது கட்டுப்பாட்டின் கீழுள்ள உரிமம்பெற்ற வங்கியின் எல்லாச் சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய பொருட்பட்டியலொன்றைத் தயாரித்து மத்திய வங்கிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

*நிருவாகி ஒப்பேறக் கூடிய தீர்மானிப்பு விருப்பத் தெரிவுகள் பற்றிய அறிக்கையொன்றை தயாரித்தல்*

**21.** (1) நிருவாகி, அவரது நியமனத் தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குப் பிந்தாமல், உரிமம்பெற்ற வங்கி தொடர்பில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய மிகவும் ஒப்பேறக்கூடிய தீர்மானிப்பு விருப்பத்தெரிவுகள் பற்றிய அவரது விதப்புரைகளை உள்ளடக்கி, அவரது கட்டுப்பாட்டின்கீழுள்ள உரிமம்பெற்ற வங்கி பற்றிய விவரமான அறிக்கையொன்றைத் தயாரித்து மத்திய வங்கிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) மத்திய வங்கி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் நிருவாகியினால் ஆக்கப்பட்ட அறிக்கையையும் விதப்புரைகளையும் கருத்திற் கொண்டு, நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய மிகவும் ஒப்பேறக் கூடிய தீர்மானிப்பு விருப்பத்தெரிவை அங்கீகரிக்கலாம் அல்லது அதுபற்றிய ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பணிப்புக்களை,

விடயத்துக்கேற்ப, நிருவாகிக்கு, உரிமம்பெற்ற வங்கிக்கு, பணிப் பாளர்களுக்கு அல்லது முக்கியமான முகாமைத்துவ ஆளணியின ருக்கு வழங்கலாம்.

(3) நிருவாகி, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையில் அத்தகைய நிருவாகியின் கட்டுப்பாட்டின்கீழுள்ள உரிமம்பெற்ற வங்கியானது -

(அ) இலாபமீட்டும் கரிசனையொன்றாக விற்பனை செய்யப் பட வேண்டுமென்று;

(ஆ) தெரிவுசெய்யப்பட்ட சொத்துக்களையும் பொறுப்புக் களையும் கைமாற்றுவதனூடாக அல்லது 30 ஆம் பிரிவின்கீழான இணைப்பு வங்கியொன்றைத் தாபிப் பதனூடாக தீர்மானிப்புச் செய்யப்பட வேண்டுமென்று;

(இ) அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் நிதி நிலைமையை யும் ஆபத்துத்தோற்றுருவையும் கவனத்துட்கொண்டு, மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஏதேனும் வேறு தீர்மானிப்பு தத்துவத்தினூடாக தீர்மானிப்புச் செய்யப்பட வேண்டுமென்று;

(ஈ) ஒடுக்கப்பட வேண்டுமென்று,

விதந்துரைக்கலாம்.

(4) நிருவாகி, தீர்மானிப்புக்கமைய உரிமம்பெற்ற வங்கியின் நிதிசார் நிலைமைகள் பற்றியும் தீர்மானிப்பு வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதில் நிருவாகியின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதல் தொடர்பான தகவல்கள் பற்றியும், 18 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கட்டளையில் மத்திய வங்கியினால் குறித்துரைக் கப்படக்கூடியவாறான அத்தகைய கிரமமுறையிலான அறிக்கை களை தயாரித்து அவற்றை மத்திய வங்கிக்குச் சமர்ப்பித்தல் வேண் டும்.

(5) நிருவாகி, ஒழுங்கமைப்புக்கும் மற்றும் தீர்மானிப்புக்கமைய உரிமம்பெற்ற வங்கியின் கோப்புக்கள், தகவல்கள் மற்றும் ஆவணங்கள் என்பவற்றைப் பேணுவதற்கும் பொறுப்புடைய வராதல் வேண்டுமென்பதுடன் அவரது நிருவாகித்துவக் காலப் பகுதியின்போது அத்தகைய உரிமம்பெற்ற வங்கிபற்றி எடுக்கப்பட்ட எல்லா முடிபுகள் அல்லது நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள் உள்ளடங்கிய இடாப்பொன்றைப் பேணு தலும் வேண்டும்.

நிருவாகித்து வத்தை முடிவுறுத்தல்

**22.** (1) உரிமம்பெற்ற வங்கியொன்றின் தீர்மானிப்பு நோக்கத் துக்காக நியமிக்கப்பட்ட நிருவாகியொருவர், பின்வரும் சூழ்நிலை களுள் எது முதலில் நிகழ்கின்றதோ அதில், அத்தகைய நிருவாகி யாகத் தொழிற்படுவதிலிருந்து இல்லாதொழிதல் வேண்டும்:-

(அ) விடயத்துக்கேற்ப, 18 ஆம் பிரிவின் (1) ஆம் அல்லது (4) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட கட்டளை யில் குறித்துரைக்கப்பட்ட பதவிக்காலம் முடிவடை தல்; அல்லது

(ஆ) அத்தகைய நிருவாகியின் பதவிக்காலத்தை முடிவுறுத்துவதற்கு மத்திய வங்கி தீர்மானிக்கப் பட்டுள்ளவிடத்து.

(2) நிருவாகி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் நியமனம் முடிவுறுத்தப் பட்டதிலிருந்து இருபது வேலை நாட்களுக்குள், அவரது நிருவாகித்து வத்தின் செயற்பாடுகள் பற்றிய இறுதி அறிக்கையொன்றைத் தயாரித்து மத்திய வங்கியிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஏலவேயுள்ள பங்கு தாரர்களினால் மூலதனம் அதிகரிக்கப் படுதல்

**23.** (1) மத்திய வங்கி அல்லது மத்திய வங்கியின் அங்கீகாரத் துடன் நிருவாகி, புதிய பங்குகளை வழங்குவதனூடாக தீர்மானிப் புக்கமைய உரிமம்பெற்ற வங்கியின் மூலதனத்தை அதிகரிப்பதற்கு பின்வரும் நடவடிக்கைகளை எடுக்கலாம்–

(அ) நட்டங்களின் அளவைத் தீர்மானித்தல் மற்றும் அத்த கைய உரிமம்பெற்ற வங்கியின் இலாபங்கள், ஒதுக்குகள் மற்றும், அவசியமெனில், மூலதனம் என்பவற்றிலிருந்து

அத்தகைய நட்டங்களின் தொகையை ஈடுசெய்து அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் நிதிக்கூற்றுக் களைத் தயாரிப்பதற்கு; அத்துடன்

(ஆ) வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட எல்லா மூலத்தனத் தேவைப்பாடுகளுக்கும் இணங்கியொழுவ தற்கென அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் பங்குகளில் முதலீடுசெய்யப்படுவதற்குத் தேவைப்படுத் தப்பட்ட மேலதிக மூலதனத் தொகையைத் தீர்மானித் தலும், அத்தகைய கோரிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நேரத்தினுள் தேவையாகவுள்ள மேலதிக மூலதனத்தின் முழுத்தொகைக்கும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் அதன் சமமான பிணிக்கின்ற உறுதிப்பாடு களைச் சமர்ப்பிப்பதன்மூலம், ஒப்பப்பணஞ் செலுத் தும்படியும் மேலதிகப் பங்குகளைக் கொள்வனவு செய்யும்படியும் உரிமம்பெற்ற வங்கியின் ஏலவேயுள்ள பங்குதாரர்களை எழுத்தின்மூலம் கோருவதற்கு:

ஆயின், எவ்வாறாயினும், இப்பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட கோரிக்கைக்குமுன்னர், மத்திய வங்கியானது, அவசியமென அது கருதினால், நிழற் பணிப்பாளர்களாகச் செயலாற்றியிருக்கக்கூடிய வர்களும் அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் வீழ்ச்சிக்கு நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் பங்களித்திருக்கக்கூடியவர்களுமான பங்குதாரர்களை விசாரணை செய்து அடையாளங்காணலாமென்பதுடன் இப்பிரிவின்கீழ் மூலதனத்தை அதிகரிப்பதில் பங்கு பற்றுவதற்கு அத்தகைய பங்குதாரர்களைப் அனுமதித்த லுமாகாது:

ஆயின், மேலும், பங்குதாரர்கள் இப்பிரிவின்கீழ் ஒப்பப்பணஞ்செலுத்தினால் அல்லது மேலதிகப் பங்குகளைக் கொள்வனவுசெய்தால், அத்தகைய பங்குதாரர்கள், மத்திய வங்கியினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான காலப்பகுதியொன்றுக்கு உரிமம்

பெற்ற வங்கிகளின் பங்குச் சொத்தாண்மை வரையறைகளின்மீது வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் பணச்சபையினால் வழங்கப்பட்ட பணிப்புகளின் ஏற்புடைமையிலிருந்து விலக்களிக்கப்படலாம்.

(2) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் அல்லது உரிமம்பெற்ற வங்கியின் அமைப்பகவிதிகளில் அல்லது வேறேதேனும் அமைப்பாக்க ஆவணத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், தீர்மானிப்புக்கமைந்த உரிமம்பெற்ற வங்கியொன்றின் ஏலவேயுள்ள பங்குதாரர்கள், (1) ஆம் உட்பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறுதவிர, வழங்கப்பட்ட மேலதிகப் பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு வாங்குமுன்னுரிமையை அல்லது வேறெவையேனும் உரிமைகளைக் கொண்டிருத்தலாகாது.

(3) முதலாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, மத்திய வங்கியானது, இப்பிரிவின்கீழ் அதன் கடமைகளைப் புரிவதில் பங்குதாரர்களுக்கும் துணைநிலைப்படுத்தப்பட்ட தனிசு வைத்திருப்போர்களுக்கும் குறித்தொதுக்கப்படவேண்டிய நட்டங்களை ஏற்றங்கீகரிப்பதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டும்.

*புதிய பங்குதாரர்களினால் மீள்மூலதனமயமாக்கப்படுதல்*

**24.** (1) இருபத்திமூன்றாம் பிரிவின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றியும் புதிய பங்குதாரர்களினால் ஓர் உரிமம்பெற்ற வங்கியை மீள்மூலதனமயமாக்கும் நோக்கங்களுக்காகவும், மத்திய வங்கியானது,-

(அ) இருபத்திமூன்றாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்க ஏலவே தீர்மானிக்கப்படாதிருப்பின், அத்தகைய உரிமம்பெற்ற வங்கியினது நட்டங்களின் அளவைத் தீர்மானித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் இலாபங்களிலிருந்தும், ஒதுக்குகளிலிருந்தும், அத்துடன் அவசியமாயின், மூலதன மற்றும் துணைநிலைப்படுத்தப்பட்ட தனிசிலிருந்தும் நட்ட உள்ளீர்ப்பு நோக்கத்துக்காக வேறேதேனும் சாதனத்திலிருந்தும் அத்தகைய நட்டங்களின் தொகையை மேவுகின்றனவாக அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தலும் வேண்டும்;

(ஆ) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், நட்டங்களைப் பிரதிபலிப்பதற்குக் கூறப்பட்ட மூலதனத்தின் மீள்பெறுமான மதிப்பீட்டைச் செய்விக்கலாம்;

(இ) இச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட எல்லா மூலதனத் தேவைப்பாடுகளுக்கும் அத்தகைய உரிமம்பெற்ற வங்கி இணங்கியொழுகுவதனைச் செய்விப்பதற்குத் தேவையான நிதியளிப்பின் தொகைகளையும் வகையையும் தீர்மானிக்கலாம்;

(ஈ) அப்போதைக்கு வலுவிலுள்ள சட்டத்தினால் விதிக்கப்பட்டவையும் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு ஏற்புடையற்பாலவையுமான மூலதனத் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதற்கென மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஏதேனும் வடிவத்திலான மேலதிக மூலதனத்தை அத்தகைய உரிமம்பெற்ற வங்கி வழங்குவதனைச் செய்விக்கலாம்.

(2) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், மத்திய வங்கியானது, பிணையங்கள் சந்தையை ஒழுங்குபடுத்துதலும் பிணையங்களை வழங்குவோரினால் செய்யப்படவேண்டிய வேறு வெளிப்படுதல்களும் தொடர்பாக, இப்பிரிவின் ஏற்பாடுகளின்கீழான பங்குகளை அத்தகைய உரிமம்பெற்ற வங்கி வழங்குவதனைச் செய்விக்கலாம்.

(3) மத்திய வங்கியானது இப்பிரிவின்கீழ்அதன் கடமைகளைப் புரிவதில் பங்குதாரர்களுக்கும் துணைநிலைப்படுத்தப்பட்ட தனிசு வைத்திருப்போர்களுக்கும் குறித்தொதுக்கப்படவேண்டிய நட்டங்களை ஏற்றங்கீகரிப்பதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

பங்குகளைக் கைமாற்றுதலும் ஒன்றிணைவொன்றைப் பயனுறுத்துதலும்

**25.** (1) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், மத்திய வங்கியானது, முழுமையாக அல்லது பகுதியளவில், வேறேதேனும் நிதிநிறுவனத்துக்கு தீர்மானிப்புக்கமைந்த ஏதேனும் உரிமம்பெற்ற வங்கியின் பங்குகளைக் கைமாற்றலாம் அல்லது வேறு ஏதேனும் நிதிநிறுவனத்துடன் அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் ஒன்றிணைவொன்றைப் பயனுறுத்தலாம்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "நிதிநிறுவனம்" என்பது, வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் உரிமம்பெற்றவொரு வங்கி அல்லது நிதித் தொழில் சட்டத்தின்கீழ் உரிமம்பெற்றவொரு நிதிக்கம்பெனி அல்லது மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான வேறேதேனும் நிதிநிறுவனம் என்று பொருளாகும்.

(2) ஐந்தாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, மத்திய வங்கியானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் பங்குகளைக் கைமாற்றும் அல்லது ஒன்றிணைவொன்றைப் பயனுறுத்தும் நேரத்தில் அத்தகைய பங்குகளின் கைமாற்றம்பெறுநர் கடனிறுக் கவகையுள்ளவராக இருப்பதனையும், அவ்வாறு கைமாற்றப்பட்ட பங்குகளைப் பயனுள்ளவகையில் வைத்திருப்பதற்கும் தீர்மானிப் பின் குறிக்கோள்களை எய்துவதற்கும் போதிய நிபுணத்துவத்தையும், ஆற்றலையும், வளங்களையும் கொண்டிருக்கவேண்டிய பங்கு தாரர்களின், பணிப்பாளர்களின் மற்றும் முக்கியமான முகாமைத் துவ ஆளணியினரின் தகுதியும் பொருத்தமும் உட்பட, வங்கித் தொழில் சட்டத்தின்கீழான ஏற்புடையற்பாலனவான தேவைப்பாடு களுக்கு அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதிக்கு, பணிப்புக்கு, தீர்மானத்துக்கு அல்லது கட்டளைக்கு இணங்கியொழுகு வதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் பங்குகளைக் கைமாற்றுதலானது, அல்லது ஒன்றிணைவொன்றைப் பயனுறுத்துதலானது, 16 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அத்தகைய தகைமைகளையும் அனுபவத்தையும் கொண்ட சுயாதீனமான உயர்தொழில்சார் பெறுமானமதிப்பீட்டாளரொருவரினால் நிறைவேற்றப்பட்ட அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் புத்திசாதுரியமான மற்றும் யதார்த்தமான பெறுமானமதிப்பீடொன்றின் அடிப்படை யின்மீது மத்திய வங்கியினால் நடாத்தப்படுதல் வேண்டும்.

(4) மத்திய வங்கியானது, காலத்துக்காலம் வழங்கப்பட்ட பணிப்புகள்சார் என்றவகையாக, (1) ஆம் உட்பிரிவின்கீழ் பங்குகளைக் கைமாற்றுவதற்கான நடவடிக்கைமுறையைக் குறித்துரைக்கலாம்.

(5) மத்திய வங்கியானது, இப்பிரிவின்கீழ் அதன் கடமைகளைப் புரிவதில் பங்குதாரர்களுக்கும் துணைநிலைப்படுத்தப்பட்ட தனிசு வைத்திருப்போர்களுக்கும் குறித்தொதுக்கப்படவேண்டிய நட்டங்களை ஏற்றங்கீகரிப்பதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட சொத்துகளையும் பொறுப்புக் களையும் மூன்றாந் திறத்தவ ரொருவருக்குக் கைமாற்றுதல்

**26.** (1) ஐந்தாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, மத்திய வங்கியானது, (இச்சட்டத்தின் இப்பாகத்தில் "கைமாற்றும் வங்கி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) தீர்மானிப்புக்கமைந்த உரிமம்பெற்ற வங்கிக்கு முன்னறிவித்தலொன்றைக் கொடுத்தபின்னர், அத்தகைய கைமாற்றும் வங்கியின் எல்லாச் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் அல்லது அவற்றின் பாகத்தை அல்லது (இச்சட்டத்தின் இப்பாகத்தில், "இயைபான தேதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) குறிப்பிட்டவொரு தேதியிலுள்ளவாறு நிலவுகின்ற அத்தகைய கைமாற்றும் வங்கியின் அத்தகைய சொத்துக்களும் பொறுப்புக்களும் ஆகிய இரண்டையும், (இச்சட்டத்தில், "கைமாற்றம் பெறுநர்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) எவரேனும் மூன்றாந்திறத்தவருக்குக் கைமாற்றலாம்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய பொறுப்புக்கள் அல்லது அவற்றின் பாகம் வைப்புப் பொறுப்புக்களைக் கொண்டுள்ளவிடத்து, அத்தகைய வைப்புப் பொறுப்புக்கள், வைப்புக்களை ஏற்றுக் கொள்ளுவதற்குச் சட்டத்தினால் அனுமதிக்கப்படாத ஏதேனும் உருவகத்துக்குக் கைமாற்றப்படுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட கைமாற்றம் பெறுநர் கடனிறுக்கவகையுள்ளதாக இருத்தல் வேண்டுமென்பதுடன் தகைமைபெறுகின்ற பங்குதாரர்களின், பணிப்பாளர்களின் மற்றும் முக்கியமான முகாமைத்துவ ஆளணியினரின் பொருத்தமாந் தன்மை தொடர்பான தேவைப்பாடுகளுட்பட, வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் ஏற்புடையற்பாலனவான தேவைப்பாடுகளுக்கு அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதிக்கு, பணிப்புக்கு, தீர்மானத்துக்கு அல்லது கட்டளைக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்; அத்துடன் தீர்மானிப்பின்

குறிக்கோள்களை எய்துவதற்கு அவ்வாறு கைமாற்றப்பட்ட சொத்துக்களை அல்லது பொறுப்புக்களை அல்லது அத்தகைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஆகிய இரண்டையும் பயனுள்ளவகையில் வைத்திருப்பதற்கும் போதிய நிபுணத்துவத்தையும், ஆற்றலையும் மற்றும் வளங்களையும் அது கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் கைமாற்றுதலானது, 16 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய தகைமைகளையும் அனுபவத்தையும் கொண்ட சுயாதீனமான உயர்தொழில்சார் பெறுமான மதிப்பீட்டாளரொருவரினால் நிறைவேற்றப்பட்ட, அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் தெரிவுசெய்யப்பட்ட சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் புத்திசாதுரியமான மற்றும் யதார்த்தமான பெறுமானமதிப்பீடொன்றின் அடிப்படையின்மீது மத்திய வங்கியினால் நடாத்தப்படுதல் வேண்டும்.

(4) மத்திய வங்கியானது, காலத்துக்குக்காலம் வழங்கப்பட்ட பணிப்புகள் என்றவகையாக அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் வைப்பாளர்கள், கடன்கொடுநர்கள் மற்றும் பங்குதாரர்கள் என்போரின் அக்கறைகளைக் கருத்திற்கொண்டு, (1) ஆம் உட்பிரிவின்கீழ் கைமாற்றப்படவேண்டிய சொத்துக்களையும் பொறுப்புக்களையும் தெரிவுசெய்வதற்கான கட்டளைக்கற்களைக் குறித்துரைக்கலாம்.

(5) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக, ‘‘கைமாற்றும் வங்கியொன்றின் சொத்துக்களும் பொறுப்புக்களும்’’ என்பது, பின்வருவனவற்றையும் உள்ளடக்கும்:-

(அ) (கடன்கள், காசு மீதிகள், ஒதுக்கு நிதிகள், முதலீடுகள் மற்றும் வைப்புக்கள் என்பனவுட்பட) இயைபான தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று கைமாற்றும் வங்கியினால் சொந்தமாகவைத்திருக்கப்பட்ட அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனம் எல்லாம் அல்லது அதன் பாகம்;

(ஆ) இயைபான தேதிக்கு நேற்முற்போந்த நாளன்று கைமாற்றும் வங்கியினால் சொந்தமாக வைத்திருக் கப்பட்ட அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தில் அல்லது அதிலிருந்து எழுகின்ற உரிமை கள், தத்துவங்கள், சிறப்புரிமைகள், அதிகாரங்கள் மற்றும் அக்கறைகள் எல்லாம் அல்லது அவற்றின் பாகம்;

(இ) இயைபான தேதிக்கு நேர்முற்போந்த நாளன்றுள்ள கைமாற்றும் வங்கியின் ஏதேனும் சட்டவுரிமை அல்லது கடப்பாடுகள்;

(ஈ) இருபத்தெட்டாம் பிரிவின் (உ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய, இயைபான தேதிக்கு நேர்முற் போந்த நாளன்றுள்ள கைமாற்றும் வங்கியின் சட்டவுரிமைகளும் கடப்பாடுகளும் உட்பட, பொறுப்புக் கள் எல்லாம் அல்லது அவற்றின் பாகம்; அத்துடன்

(உ) இலங்கையிலுள்ள அத்தகைய கைமாற்றும் வங்கி தொடர்பான அல்லது அதனோடிணைந்த புத்தகங்கள், கணக்குகள் மற்றும் ஆவணங்கள் எல்லாம்.

(6) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட கைமாற்றம்பெறும் வங்கியானது,-

(அ) கைமாற்றும் வங்கியின் தொடர்புபட்ட திறத்தவர் களினால், நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல், கட்டுப்படுத்தப்படுதலாகாது;

(ஆ) வரிகள் தொடர்பான பொறுப்புக்களும் தொழிலாளர் தொடர்பான பொறுப்புக்களும் உட்பட்ட வேறெவை யேனும் பொறுப்புடைமைகள் நீங்கலாக, வெளிப்படை யாகக் கைமாற்றப்பட்ட அப்பொறுப்புக்களுக்காக, அல்லது கைமாற்றம் பெறுநரினால் வெளிப்படையாக உடன்பட்டுக்கொள்ளப்பட்ட வேறெவையேனும் நியதி களுக்கு அல்லது நிபந்தனைகளுக்கிணங்க, கைமாற்றும் வங்கியின் பங்குதாரர்களுக்கு அல்லது வேறு கடன் கொடுநர்களுக்கு மட்டுமே பொறுப்பாதல் வேண்டும்;

(இ) தீர்மானிப்பில் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் கைமாற்றத்தின் நியதிநிபந்தனைகளுக்கு இணங்கியொழுகுவதற்குக் கைமாற்றம் பெறுநர் தவறியமை காரணமாக விளைவிக்கப்பட்ட எவையேனும் நட்டங்களுக்காக மத்திய வங்கிக்கு அல்லது 39 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட வைப்புக் காப்புறுதித் திட்டத்துக்கு நட்டஈடளிப்பதற்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

சொத்துக் களையும் பொறுப்புக் களையும் கைமாற்று வதற்காக நிறைவேற்றப்பட வேண்டிய தேவைப் பாடுகள்

**27.** பின்வருமாறு இருந்தாலொழிய, 26 ஆம் பிரிவின்கீழான சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் கைமாற்றமொன்று மத்திய வங்கியினால் செய்யப்படுதலாகாது:-

(அ) கைமாற்றம்பெறுநர் கடனிறுக்க வகையுள்ளதென்றும் ஏற்புடையற்பாலனவான ஒழுங்குபடுத்தும் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுகின்றதென்றும், கைமாற்றப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட கைமாற்றும் வங்கியின் தொழிலைத் தகுதிவாய்ந்தவொரு முறையில் நிறைவேற்றுவதற்கு ஆற்றலுடையதென்றும் மற்றும் கைமாற்றப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட தொழில் பற்றிய அல்லது அதுதொடர்பாகக் கைமாற்றும் வங்கி அதன் வைப்பாளர்களுக்கும் கடன்கொடுநர்களுக்கும் கொண்டுள்ள பொறுப்புக்களை எதிர்கொள்கின்றதென்றும் மத்திய வங்கி திருப்திப்பட்டாலொழியவும்;

(ஆ) (i) கைமாற்றப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட தொழில் பற்றி அல்லது அதுதொடர்பாகக் கைமாற்றும் வங்கியின் ஏலவேயுள்ள எவையேனும் சொத்துக்கள் பயன்படுத்தப் படவேண்டிய மற்றும் கைமாற்றப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட தொழில்பற்றி அல்லது அதுதொடர்பாகக் கைமாற்றும் வங்கியின் ஏலவேயுள்ள எவையேனும் பொறுப்புக்கள் எதிர்கொள்ளப்படவேண்டியமுறை தொடர்பாகவும்; அத்துடன்

(ii) கைமாற்றும் வங்கியிடமிருந்து அரசாங்கத்துக்கு வருமதியான எவையேனும் கொடுப்பனவுகள் செய்யப்படவேண்டிய முறைதொடர்பாகவும்,

மத்திய வங்கியினாற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கு இணங்கியொழுகுவதற்குக் கைமாற்றம் பெறுநர் எழுத்தில் உடன்பட்டாலொழியவும்; அத்துடன்

(இ) இச்சட்டத்தின்கீழ் அத்தகைய கைமாற்றம் பெறுநருக்கு காலத்துக்குக்காலம் மத்திய வங்கி வழங்கக்கூடிய வாறான அத்தகைய வேறு பணிப்புகளுக்கு இணங்கி யொழுகுவதற்குக் கைமாற்றம் பெறுநர் உடன்பட்டா லொழியவும்.

சொத்துக்களையும் பொறுப்புக்களையும் கைமாற்றுவதன் பயன்

**28**. மத்திய வங்கி வேறுவகையாக முடிபுசெய்தாலொழிய, கைமாற்றும் வங்கியின் சொத்துக்களும் பொறுப்புக்களும் இயைபான தேதியிலிருந்து பயனுறும் வகையில் 26 ஆம் பிரிவின்கீழ் கைமாற்றம்பெறுநர் ஒருவருக்குக் கைமாற்றப்பட் டுள்ளவிடத்து, -

(அ) கைமாற்றம்பெறுநர் கைமாற்றும் வங்கியின் கைமாற்றப் பட்ட சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் கட்டுப் பாட்டையும் உடைமையையும் கொண்டிருத்தல் வேண் டும்:

ஆயின், எவ்வாறாயினும், கைமாற்றம்பெறுநரினால் செய்யப்பட்ட ஒரு வேண்டுகோளின்மேல், மத்திய வங்கியானது, எவையேனும் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் அக்கைமாற்றத்துக்காக ஏற்புடையற் பாலவான கட்டளைக்கற்களை எதிர்கொள்ளாதவிடத்து, கைமாற்றம் செய்யப்படும் நேரத்தில் குறித்துரைக்கப் படக்கூடியவாறானவொரு காலப்பகுதியினுள், அத்த கைய சொத்துக்களை அல்லது பொறுப்புக்களைக் கைமாற்றும் வங்கிக்கு மீண்டும் கைமாற்றலாம்:

ஆயின், மேலும், எந்தப் பங்குதாரர்களின், வைப் பாளர்களின் மற்றும் கடன் கொடுநர்களின் அக்கறை களும் உரிமைகளும் கைமாற்றும் வங்கியில் உள்ளனவோ அந்தப் பங்குதாரர்கள், வைப்பாளர்கள் மற்றும்

கடன்கொடுநர்கள், கைமாற்றம்பெறுநருக்கு கைமாற்றப் பட்ட சொத்துக்களும் பொறுப்புக்களும் தொடர்பில் உரிமைகளை அல்லது உரிமைக்கோரிக்கைகளைக் கொண்டிருத்தலாகாது.

(ஆ) தொழில் கொண்டுநடாத்துவதற்குக் கைமாற்றும் வங்கிக்கு இயைபான சட்டங்களின்கீழ் பணச்சபை யினால் வழங்கப்பட்ட உரிமம், கைமாற்றம்பெறுநருக்கு கைமாற்றப்பட்டிராத அதன் தொழிலின் எஞ்சியுள்ள ஏதேனும் பாகத்தைக் கொண்டுநடாத்துவதற்கு கைமாற்றும் வங்கியை இயலச்செய்வதற்கு அவசியமாக வுள்ளவாறான அளவுக்கு, விடயத்துக்கேற்ப, திரிபுபடுத் தப்படுதல் வேண்டும் அல்லது இல்லாதாக்கப்படுதல் வேண்டும்;

(இ) கைமாற்றும் வங்கியின் கைமாற்றப்பட்ட சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றியனவையும் அல்லது அவை தொடர்பானவையும், இயைபான தேதிக்கு நேர்முற் போந்த நாளன்று உள்ளவையும் அல்லது பயனுள்ளவை யும், கைமாற்றும் வங்கி அவற்றுக்கான திறத்தவ ரொருவராகவுள்ளவையும் அல்லது கைமாற்றும் வங்கியின் சார்பில் உள்ளவையுமான எல்லா ஒப்பந்தங் களும், உறுதிகளும், முறிகளும், உடன்படிக்கைகளும், அற்றோணித் தத்துவங்களும், சட்டப் பிரதிநிதித் துவத்தின் அளிப்புக்களும் மற்றும் எத்தகைய தன்மையினவையுமான வேறு சாதனங்களும், இயை பான தேதியிலிருந்து பயனுறுவனவாக, கைமாற்றம் பெறுநரின் விடயத்துக்கேற்ப, செய்துகொள்ளப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட ஒப்பந்தங்களாக, உறுதிகளாக, முறிகளாக, உடன்படிக்கைகளாக, அற்றோணித் தத்துவங்களாக, சட்டப்பிரதிநிதித்துவத்தின் அளிப்புக் களாக அல்லது வேறு சாதனங்களாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஈ) கைமாற்றம் பெறுநரினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்டவையும், கைமாற்றப்பட்ட சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றியவையும் அல்லது அவை

தொடர்பானவையும், இயைபான தேதிக்கு நேர்முற் போந்த நாளன்று முடிவுறாதுள்ளவையும், எத்தகைய தன்மையினவையுமான எல்லா வழக்குகளும் வழக்கு நடவடிக்கைகளும், இயைபான தேதியிலிருந்து பயனுறுவனவாகக் கைமாற்றும் வங்கியினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகளாகவும் வழக்குநடவடிக்கைகளாகவும் கருதப்படுதல் வேண்டு மென்பதுடன் அதற்கிணங்கத் தொடர்ந்துநடாத்தப்பட்டு கையுதிர்க்கவும்படலாம்;

(உ) இயைபான தேதிக்கு நேர்முற்பாந்த நாளன்று கைமாற்றும் வங்கியில் தொழிலில் உள்ளவர்களும் கைமாற்றம் பெறும் வங்கியினால் தொழில் முனையப் படாதவர்களும், கைமாற்றும் வங்கிக்குக் கைமாற்றப் பட்டவாறாகக் கைமாற்றும் வங்கியின் தொழிலினது அத்தகைய பாகத்துடன் சம்பந்தப்பட்டவர்களுமான கைமாற்றும் வங்கியின் அத்தகைய எல்லா அலுவலர் களும் வேறு ஊழியர்களும் அல்லது விடயத்துக்கேற்ப, கைமாற்றும் வங்கியின் தொழில் முழுவதும் கைமாற்றம் பெறும் வங்கிக்குக் கைமாற் றப்படுமிடத்து, கைமாற்றும் வங்கியின் எல்லா அலுவலர்களும் வேறு ஊழியர்களும் நட்டஈடு செலுத்தப்படுவதற்கு உரித்துடையோராதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், கைமாற்றும் வங்கியின் எவரேனும் அலுவலர் அல்லது வேறு ஊழியர் நட்டஈடு செலுத்தப்படுவதற்கு உரித்துடையவராக இருக்கு மிடத்து, கைமாற்றம்பெறுநர் தொழில் ஆணையாளர் தலைமையதிபதியின் கலந்தாலோசனையுடன் அத்த கைய அலுவலருக்கு அல்லது ஊழியருக்குச் செலுத்தப் படவேண்டிய நட்டஈட்டுத்தொகையைத் தீர்மானித்தல் வேண்டும். வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் வேறேதேனும் நட்டஈட்டை உரிமை கோருவதற்கு அத்தகைய அலுவலருக்கு அல்லது ஊழியருக்கு உள்ள உரிமையை அத்தகைய தீர்மானம் பாதித்தலாகாது.

வெளிநாட்டு நாணய வைப்பாளர்கள் தொடர்பில் கைமாற்றம் பெறுநருக்குள்ள பொறுப்பின் அளவு

**29**. இச்சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், கைமாற்றும் வங்கியின் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் கைமாற்றம் பெறுநருக்கு கிடைக்கக்கூடியனவாக்கப்படாதவிடத்து, கைமாற்றும் வங்கியின் எவரேனும் வெளிநாட்டு நாணய வைப்பாளர்களின் கோரிக்கைகளை எதிர்கொள்வதற்குக் கைமாற்றம்பெறுநரின் பொறுப்பு, கைமாற்றும் வங்கியின் தொழிலைப் பரிசீலனை செய்வதன்மேலும், மற்றும் அத்தகைய வைப்பாளர்களுக்கு நிவாரணமளிப்பதற்கான ஏதேனும் திட்டத்தில் தரப்பட்டுள்ள அளவுவரை மட்டும், மத்திய வங்கியினால் வகுத்தமைக்கப்படக் கூடியவாறாக, அத்தகைய திட்டத்தின் நியதிநிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகின்றவர்களான அத்தகைய வைப்பாளர்கள் தொடர்பில் மட்டுமே வரையறுக்கப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய வெளிநாட்டு நாணய வைப்புக்கள் கைமாற்றம்பெறுநருக்கு கிடைக்கக்கூடியனவாக்கப் படும் பட்சத்தில் அல்லது கைமாற்றும் வங்கியின் அத்தகைய கைமாற்றம் பெறுநர் வெளிநாட்டு நாணய வைப்புக்களை அல்லது வேறு சொத்துக்களை வெளிநாட்டில் அறவிடும் பட்சத்தில், மத்திய வங்கியானது, அவ்வாறு கிடைக்கக்கூடியனவாக்கப்பட்ட வெளிநாட்டு நாணய வைப்புக்களை அல்லது அவ்வாறு அறவிடப் பட்ட வெளிநாட்டு நாணய வைப்புக்களையும் வேறு சொத்துக் களையும் அத்தகைய வெளிநாட்டு நாணய வைப்பாளர்களுக்குக் கொடுப்பனவுசெய்தல் தொடர்பாகக் கைமாற்றம்பெறுநருக்குப் பணிப்புகளை விடுப்பதற்குத் தத்துவமுடையதாதல் வேண்டுமென் பதுடன் கைமாற்றம்பெறுநர் அத்தகைய பணிப்புகளுடன் இணங்கியொழுகுதலும் வேண்டும்.

ஓர் இணைப்பு வங்கியைத் தாபித்தல்

**30**. (1) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், மத்திய வங்கி, இயைபான சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, இச்சட்டத்தின்கீழ் தீர்மானிப்புக்கமைந்த ஓர் உரிமம்பெற்ற வங்கியின் வீழ்ச்சி முறைமைசார் முக்கியத்துவத்தை அல்லது தாக்கத்தைக் கொண்டிருக்கமுடியுமென அபிப்பிராயப்படு மிடத்து, மத்திய வங்கியானது, 31 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவிற்

குறித்துரைக்கப்பட்ட நியதிநிபந்தனைகளுக்கமையவும் அமைச்சரின் அங்கீகாரத்துடனும், பின்வரும் நோக்கத்துக்காக (இச்சட்டத்தில், "இணைப்பு வங்கி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிறுவனங்களைத் தாபிப்பதற்கு முடிபு செய்யலாம்:-

(அ) அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் முக்கியமான பணிகள் மற்றும் ஒப்பேறக்கூடிய தொழிற்பாடுகள் எல்லாவற்றினதும் அல்லது அவற்றின் பாகத்தினது தொழிற்பாடுகளைத் தொடர்ந்து நாடத்துதல்; அல்லது

(ஆ) அத்தகைய உரிமம்பெற்ற வங்கியினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட பங்குகளை, சொத்துக்களுள் ஏதேனுமொன்றை அல்லது அதற்கு மேற்பட்டவற்றை, பொறுப்புக்களை, சட்டவுரிமைகளை மற்றும் கடப்பாடுகளை அல்லது வேறு ஆதனச் சாதனங்களைக் கைமாற்றுதல்:

ஆயின், எவ்வாறாயினும், ஓர் இணைப்பு வங்கிக்கு கைமாற்றப்பட்ட பொறுப்புக்களின் தொகை, எம்முறையிலும், விடயத்துக்கேற்ப, இச்சட்டத்தின் பாகம் III இல் ஏற்பாடுசெய்யப்பட்ட வைப்புக் காப்புறுதித் திட்டத்தினால், அல்லது அரசாங்கத்தினால் வழங்கப்படும் கைமாற்றப்பட்ட சொத்துக்களினதும் ஏனைய வளங்களினதும் தொகையை விஞ்சுதலாகாது.

(2) மத்திய வங்கியானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் எடுக்கப்பட்ட முடிபை வர்த்தமானியிலும், இலங்கையில் புழக்கத்திலுள்ள ஆகக்குறைந்தது சிங்கள, ஆங்கில மற்றும் தமிழ் நாளாந்தச் செய்தித்தாள்கள் மூன்றிலும், இணைப்பு வங்கி தாபிக்கப்பட்டதிலிருந்து ஐந்து நாட்களினுள் வெளியிடுதல் வேண்டும்.

(3) மத்திய வங்கி அவசியமெனக் கருதக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமைய இலங்கையில் வங்கித்தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு மத்திய வங்கி இணைப்பு வங்கிக்கு உரிமமொன்றை வழங்குதல் வேண்டும்.

(4) இணைப்பு வங்கி துரிதமானவொரு முறையில் தாபிக்கப் படுவதனை மத்திய வங்கி உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பது டன் அத்தகைய தாபனக் காலப்பகுதி (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட மத்திய வங்கியின் முடிபிலிருந்து இரண்டு நாட்களை விஞ்சுதலுமாகாது.

(5) இணைப்பு வங்கியைத் தாபித்தலானது, தீர்மானிப்புக்மைந்த உரிமம்பெற்ற வங்கியின் முதனிலை அமைப்பாக்க ஆவணங்களின் அடிப்படையின்மீதாதல் வேண்டுமென்பதுடன் அதனைத் தாபிக்கின்றமை பற்றிய ஏனைய இயைபான ஆவணங்கள், அது தாபிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் இயைபான அதிகாரிகளுக்குச் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(6) இணைப்பு வங்கியின் தொழிற்பாடுகள், (3) ஆம் உட்பிரிவின்கீழான உரிமம் வழங்கப்பட்ட தேதியை அடுத்துவரும் முதலாவது வேலைநாளிலிருந்து தொடங்கப்படுதல் வேண்டும்.

**31.** (1) முப்பதாம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட இணைப்பு வங்கி கூட்டிணைக்கப்பட்டவொரு குழுவாதல் வேண்டுமென்பதுடன் அதன் கூட்டிணைக்கப்பட்ட பெயரில் அது வழக்குத்தொடுக்கலாம் அல்லது அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாம்.

*இணைப்பு வங்கியின் அலுவல்களை முகாமை செய்தல்*

(2) (அ) இணைப்பு வங்கியின் அலுவல்களின் முகாமையும் நிருவாகமும் இணைப்பு வங்கியின் ஆளும் குழுவில் உரித்தாக் கப்படுதல் வேண்டுமென்பதுடன் அது மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூயவாறான அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்களைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(ஆ) இணைப்பு வங்கியின் ஆளும் குழுவினது உறுப்பினர்கள், தகுதியானவர்களும் தகுந்தவர்களுமான ஆட்களாவிருத்தல் வேண்டுமென்பதுடன் மத்திய வங்கியினால் நியமிக்கப்படுதலும் வேண்டும். மத்திய வங்கியானது, (11) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட கட்டளைக்கற்களின் அடிப்படையின்மீது ஆளும் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட வேண்டிய ஆட்களின் தகுதியையும் பொருத்தத்தையும் அவர்களின் நியமனத்துக்குமுன்னர் மதிப்பீடு செய்தல் வேண்டும்.

(3) மத்திய வங்கியின் அங்கீகாரத்துக்கமைய, இணைப்பு வங்கியின் முக்கியமான முகாமைத்துவ ஆளணியினர் (11) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளுக்கமைய, இணைப்பு வங்கியின் ஆளும் குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(4) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், மத்திய வங்கியின் எவரேனும் அலுவலர், இணைப்பு வங்கியின் ஆளும் குழுவினது உறுப்பினரொருவராக அல்லது இணைப்பு வங்கியின் ஓர் முக்கியமான முகாமைத்துவ ஆளணியினராக நியமிக்கப்படுதலாகாது.

(5) இணைந்த வங்கியின் மூலதனம் ஏதேனும் ஏற்புடைமையாகும் எழுத்தினலான சட்டத்தின் நியதிகளின் பிரகாரம் அவசியமான நிதிகளின் ஒதுக்கீட்டுக்கமைவாக அரசாங்கத்தினால் முழுமையாக வழங்கப்படுதல் வேண்டும். இணைப்பு வங்கிக்கு நிதியளித்தல் சம்பந்தமாக அரசாங்க உத்தரவாதங்களையும் அரசாங்கப் பிணை யங்களையும் வழங்குவதுபற்றி முடிபுசெய்வதற்கு அரசாங்கம் உரிமையைக்கொண்டிருத்தல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், இப்பிரிவில் அடங்கியுள்ளதெதுவும், இணைப்பு வங்கிக்கு அவசரகாலத் திரவத்தன்மை உதவியை, மரபுவழிச் சந்தைத் திரவத்தன்மை உட்செலுத்துகைப் பொறி முறைகளை அல்லது கடன்களை வழங்குவதிலிருந்து மத்திய வங்கியைத் தடுப்பதாகப் பொருள்கொள்ளப்படுதலாகாது:

ஆயின், மேலும், இப்பிரிவின்கீழ் அரசாங்கத்தினால் ஓர் இணைப்பு வங்கிக்கு மூலதனம் வழங்கப்படுதலானாது, அத்தகைய இணைப்பு வங்கியின்மீது கட்டுப்பாட்டைப் பிரயோகிப்பதிலிருந்து மத்திய வங்கியைத் தடுத்தலாகாது. சர்வதேச நியமங்களுக்கும் மிகச்சிறந்த செயல்முறைகளுக்கும் இணங்க இணைப்பு வங்கி நியமப் பட்டறி விதிகளுக்கு அமைந்ததாகவிருப்பதனை மத்திய வங்கி உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(6) ஓர் இணைப்பு வங்கியைத் தாபிப்பதற்கும் மற்றும் தொழிற்படுத்துவதற்குமான நியதிநிபந்தனைகள் பின்வருவனவற்றையும் உள்ளடக்குதல் வேண்டும்:-

(அ) மூலதனத்தை வழங்குதல்;

(ஆ) தொழிற்பாடுசார் நிதியளித்தலும் திரவத்தன்மை ஆதரவும்;

(இ) ஆறுமாதங்கள் வரையிலானவொரு காலப்பகுதிக்காக, இணைப்பு வங்கிக்கு ஏற்புடையனவான பட்டறி மற்றும் வேறு மேற்பார்வைசார் அத்துடன் ஒழுங்குபடுத்தும் தேவைப்பாடுகளுக்கான எவையேனும் தற்காலிக மாற்றங்கள்;

(ஈ) ஆளுகைக் கட்டுக்கோப்பை எடுத்துக்கூறுவதற்கான தேவைப்பாடு; அத்துடன்

(உ) பணிப்பாளர்கள் சபையும் இணைப்பு வங்கியின் முகாமைத்துவமும்.

(7) இப்பிரிவின் நோக்கத்துக்காக, மத்திய வங்கியானது பின்வருவனவற்றுக்கான தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) விடயத்துக்கேற்ப, தீர்மானிப்புக்கமைந்த உரிமம்பெற்ற வங்கியினால் வழங்கப்பட்ட பங்குகளை, சொத்துக்களை, பொறுப்புக்களை அல்லது வேறு சொத்தாண்மைச் சாதனங்களை காலத்துக்கு காலம் இணைப்பு வங்கிக்கு கைமாற்றுவதற்கும்;

(ஆ) (8) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, இணைப்பு வங்கியிலிருந்து தீர்மானிப்புக்கமைந்த உரிமம்பெற்ற வங்கிக்கு எல்லாச் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் அல்லது அவற்றின் பாகத்தினது கைமாற்றத்தை எதிர்மாறாக்குவதற்கும்;

(இ) அத்தகைய நோக்கத்துக்காக, பணிப்புகளின் மூலம் மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்பட்ட இயல்தகைமையுடைய கட்டளைக்கல்லுக்கு அமைய இணைப்பு வங்கியிலிருந்து வேறெவரேனும் ஆளுக்கு பங்குகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், சட்டவுரிமைகள் மற்றும் கடப்பாடுகளைக் கைமாற்றுவதற்கும்;

(ஈ) இணைப்பு வங்கியின் முடுகையையும் ஒழுங்கானமுறையிலான ஒடுக்குதலையும் வசதிப்படுத்துவதற்கும்.

(8) தீர்மானிப்புக்கமைந்த உரிமம்பெற்ற வங்கிக்கு (7) ஆம் உட்பிரிவின்கீழ் பங்குகள், சொத்துக்களும், பொறுப்புக்களும் சட்டவுரிமைகளும் கடப்பாடுகளும் மற்றும் வேறேதேனும் சொத்தாண்மைச் சாதனம் என்பவற்றின் கைமாற்றத்தை எதிர்மாறாக்குதலானது, பின்வரும் சூழ்நிலைகளுள் ஒன்றில் புரியப்படுதல் வேண்டும்:-

(அ) 30 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஓர் இணைப்பு வங்கியைத் தாபிப்பதற்கான முடிபில் அத்தகைய எதிர்மாறாக்குதலுக்கான இயலுமாந்தன்மை வெளிப்படையாக ஏற்பாடுசெய்யப்படுமிடத்து;

(ஆ) தீர்மானிப்புக்கமைந்த உரிமம்பெற்ற வங்கியிலிருந்து இணைப்பு வங்கிக்குக் கைமாற்றப்பட்ட பங்குகள், சொத்துக்களும், பொறுப்புக்களும், சட்டவுரிமைகளும் கடப்பாடுகளும் மற்றும் வேறேதேனும் சொத்தாண்மைச் சாதனங்களும் அத்தகைய கைமாற்றத்தின் நிபந்தனைகளை எதிர்கொள்ளாதவிடத்து அல்லது இணைப்பு வங்கியைத் தாபிப்பதற்கான முடிபில் குறித்துரைக்கப்பட்ட பங்குகள், சொத்துக்களும், பொறுப்புக்களும் மற்றும் சட்டவுரிமைகளும் கடப்பாடுகளும் மற்றும் வேறேதேனும் சொத்தாண்மைச் சாதனம் என்பவற்றின் வகுதிகளினுள் அடங்காதவிடத்து; அல்லது

(இ) பங்குகள், சொத்துக்களும், பெறுப்புக்களும் மற்றும் சட்டவுரிமைகளும் கடப்பாடுகளும் மற்றும் வேறு சொத்தாண்மைச் சாதனங்கள் என்பவற்றின் கைமாற்றப்பட்ட நேரத்தில் இடம்பெற்ற பெறுமான மதிப்பீட்டுப் பிழைகளை நிவர்த்திசெய்வது அவசியமாகவுள்ளவிடத்து.

(9) இணைப்பு வங்கிக்கும் அதிலிருந்தும் பங்குகள், சொத்துக்களும், பொறுப்புக்களும், சட்டவுரிமைகளும் கடப்பாடுகளும் மற்றும் வேறு சொத்தாண்மைச் சாதனங்கள் என்பவற்றின் கைமாற்றம், 16ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய தகைமைகளையும் அனுபவத்தையும் உடைய சுயாதீனமான உயர்தொழில்சார் பெறுமான மதிப்பீட்டாளரொருவரினால் நிறைவேற்றப்பட்ட ஒரு பெறுமானமதிப்பீட்டின் அடிப்படையின் மீது இருத்தல் வேண்டும்.

(10) தீர்மானிப்புக்கமைந்த ஓர் உரிமம்பெற்ற வங்கியின் எவரேனும் பங்குதாரரின் அல்லது கடன்கொடுநரின் மற்றும் எந்த மூன்றாந்திறத்தவரின் பங்குகள், சொத்துக்களும், பொறுப்புக்களும், சட்டவுரிமைகளும் கடப்பாடுகளும் மற்றும் வேறு சொத்தாண்மைச் சாதனங்கள் என்பன இணைப்பு வங்கிக்குக் கைமாற்றப்படவில்லையோ அந்த மூன்றாந்திறத்தவர், இணைப்பு வங்கிக்கு, அதன் ஆளும் குழுவுக்கு, அல்லது மத்திய வங்கிக்குக் கைமாற்றப்பட்ட பங்குகள், சொத்துக்களும் பொறுப்புக்களும், சட்டவுரிமைகளும் கடப்பாடுகளும் மற்றும் வேறு சொத்தாண்மைச் சாதனங்கள் என்பன மீது ஏதேனும் உரிமையைக் கொண்டிருத்தலாகாது.

(11) மத்திய வங்கியானது, காலத்துக்குக் காலம், வைப்பாளர்கள், கடன்கொடுநர்கள் மற்றும் பங்குதாரர்களின் அக்கறைகளைக் கருத்திற்கொண்டு, பின்வருவனவற்றைக் குறித்துரைத்து விடயத்துக்கேற்ப, பணிப்புகள், வழிகாட்டுநெறிகள் மற்றும் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை வழங்கலாம்:-

(அ) தீர்மானிப்புக்கமைந்த உரிமம்பெற்ற வங்கியின் எஞ்சியுள்ள சொத்துக்களும் பொறுப்புக்களும் ஒழித்துக் கட்டப்பட வேண்டிய முறை;

(ஆ) இணைப்பு வங்கியின் தொழிற்பாடுகள் எம்முறையில் நிறைவேற்றப்படவேண்டுமோ அம்முறை;

(இ) இணைப்பு வங்கிக்கு வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள்;

(ஈ) இணைப்பு வங்கியினால் எதிர்கொள்ளப்படவேண்டிய குறைந்தபட்ச மூலதன மற்றும் திரவத்தன்மைத் தேவைப்பாடுகள்;

(உ) இணைப்பு வங்கிக்கு ஏற்புடையற்பாலனவாக இருக்கவேண்டிய கூட்டிணைப்பு ஆளுகையின் கோட்பாடுகள்;

(ஊ) இணைப்பு வங்கியின் ஆளும் குழுவினது உறுப்பினர்களினதும் முக்கியமான முகாமைத்துவ ஆளணியினரினதும் தகுதியையும் பொருத்தத்தையும் மதிப்பீடு செய்வதற்காக ஏற்புடையற்பாலனவான கட்டளைகற்கள்;

(எ) இணைப்பு வங்கிக்குக் கைமாற்றப்படவேண்டிய சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் பெறுமான மதிப்பீடுகளை ஏற்றுக்கொள்வதற்கான கட்டளைக் கற்கள்;

(ஏ) சொத்துக்களையும் பொறுப்புக்களையும், சட்டவுரிமைகளையும் கடப்பாடுகளையும் மற்றும் சொத்தாண்மைச் சாதனங்களையும் கைமாற்றும்போது நிறைவேற்றப்பட வேண்டிய பிரதிபயன் முறைசார்; அல்லது

(ஐ) இணைப்பு வங்கிக்கு ஆரம்பத்தில் கைமாற்றப்பட்ட சொத்துக்களினதும் பொறுப்புகளினதும் மற்றும் வேறு சொத்தாண்மைச் சாதனங்களினதும் எதிர்மாறாக்குகைகளின் முறையும் சூழ்நிலைகளும்.

ஓர் இணைப்பு வங்கியின் காலம்

**32.** (1) மூன்றாம், மற்றும் (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, இணைப்பு வங்கியின் காலம், தீர்மானிப்புக் கமைந்த உரிமம்பெற்ற வங்கியின் பங்குகள், சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் சொத்தாண்மைச் சாதனங்கள் என்பவற்றின் கைமாற்றத்தினது கடைசித்தேதியிலிருந்து இரண்டாண்டுக் காலப்பகுதியொன்றை விஞ்சுதலாகாது.

(2) மத்திய வங்கியானது, (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட இரண்டாண்டுக் காலப்பகுதி பூர்த்திசெய்யப்பட்ட தன்மேல், தீர்மானிப்பின் குறிக்கோள்கள், இணைப்பு வங்கிக்குக் குறித்தளிக்கப்பட்ட பணிகளைப் பூர்த்திசெய்தல் மற்றும் அதன்

தகுதிப்பாட்டுக்குரிய அத்தகைய வேறு கருமங்கள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு அதன் சொந்த மதிப்பீட்டிற்கிணங்க, செயல்முறைக்குகந்தவரை விரைவாக இணைப்பு வங்கியை முடிவுறுத்துதல் வேண்டும்.

(3) நான்காம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, இணைப்பு வங்கியானது தீர்மானிப்பின் குறிக்கோள்களுக்கு இனிமேலும் சேவையாற்றுவதில்லையென மத்திய வங்கி திருப்திப்படுமிடத்து, மத்திய வங்கியானது, அமைச்சருக்கு அறிவித்தபின்னர் -

(அ) இணைப்பு வங்கியை வேறோர் உருவகத்துடன் ஒன்றிணைக்கலாம்;

(ஆ) இணைப்பு வங்கியின் சொத்துக்களை, உரிமைகளை மற்றும் கடப்பாடுகளை மூன்றாந் திறத்தவரொருவருக்கு முழுமையாக அல்லது பகுதியளவில் விற்பனை செய்யலாம்; அல்லது

(இ) இணைப்பு வங்கியின் சொத்துக்களை ஒழித்துக்கட்டி அதன் கடப்பாடுகளை முழுமையாகச் செலுத்தலாம்.

(4) இணைப்பு வங்கியின் காலம் ஒரு தடவையில் மேலதிகமான ஓராண்டுக் காலப்பகுதிக்கு மத்திய வங்கியினால் நீடிக்கப்படலாம்:

ஆயின், எவ்வாறாயினும், ஓர் இணைப்பு வங்கியின் காலம், கூட்டுமொத்தத்தில் ஐந்தாண்டுகளை விஞ்சுதலாகாது.

(5) (அ) இரண்டாம், (3) ஆம் மற்றும் (4) ஆம் உட்பிரிவுகளின்கீழ் மத்திய வங்கியின் எல்லா முடிபுகளும், அத்தகைய முடிபுகளை நியாயப்படுத்துகின்ற சூழ்நிலைகளினதும் சந்தை நிலைமைகளினதும் மதிப்பீட்டின் அடிப்படையிலானவையாதல் வேண்டும்.

(ஆ) மத்திய வங்கியானது, அத்தகைய முடிபுகளின் தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள் அமைச்சருக்கு அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும். (4) ஆம் உட்பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட ஒரு நீடிப்பின் விடயத்தில், மத்திய வங்கி அத்தகையவொரு நீடிப்பு ஏன் அவசியமாகவுள்ளதென்பதுபற்றி நியாயப்படுத்தப்பட்ட விளக்கமொன்றையும் வெளியிடுதல் வேண்டும்.

(6) இணைப்பு வங்கியின் காலம் (2) ஆம் உட்பிரிவின்கீழ் முடிவுறுத்தப்படுமிடத்து, மத்திய வங்கியானது-

(அ) அத்தகைய இணைப்பு வங்கிக்கு வழங்கப்பட்ட உரிமத்தை இல்லாதாக்குதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின் பாகம் V இன் கீழ் அத்தகைய இணைப்பு வங்கியை ஒடுக்குதல் வேண்டும்.

(7) ஐம்பத்தோராம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இப்பிரிவின்கீழ் இணைப்பு வங்கியின் தொழிற்பாடு இல்லாதொழிவதிலிருந்து விளைகின்ற எல்லாப் பெறுகைகளும் அரசாங்கத்துக்குக் கைமாற்றப்படுதல் வேண்டும்.

அரசாங்கத்தினால் தற்காலிக நிதியுதவி வழங்கப்படுதல்

**33.** (1) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அரசாங்கமானது, அதற்கென அமைச்சருக்கு மத்திய வங்கியினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையைக் கவனத்துட்கொண்டு, விடயத்துக் கேற்ப, உரிமம்பெற்ற வங்கியின் தீர்மானிப்பினது நிதியளிப்புக்கு அல்லது இணைப்பு வங்கியொன்றுக்கு உதவுதொகை செலுத்துவதற்கென தற்காலிக நிதியுதவியை வழங்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட தற்காலிக நிதியுதவி, பின்வரும் நிபந்தனைகள் திருப்திசெய்யப்பட்டால் மட்டுமே அரசாங்கத்தினால் வழங்கப்படுதல் வேண்டும்:-

(அ) நிதிசார் முறைமையின் உறுதிப்பாட்டுக்குக் குழப்பம் ஏற்படும் ஆபத்தைத் தவிர்ப்பதற்கு அத்தகைய நிதியுதவி அவசியமாகவிருப்பின்;

(ஆ) ஐம்பத்தோராம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் அனுமதிக்கப்பட்டவாறு 49 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட வைப்புக் காப்புறுதி நிதியத்தினூடாக அல்லது தனிப்பட்ட மூலகங்களினூடாக மாற்று நிதியளித்தல் வெறுமையாக்கப்பட்டிருப்பின் அல்லது அத்தகைய மூலங்கள் போதாதிருப்பின் அல்லது நியாயமானவொரு காலஎல்லையினுள் கிடைக்காதிருப்பின்;

(இ) உரிமம்பெற்ற வங்கியின் நட்டங்கள் ஆகக்குறைந்தது பங்குதாரர்களுக்கேனும் மற்றும் துணைநிலைப் படுத்தப்பட்ட தனிசு வைத்திருப்போர்களுக்கேனும் குறித்தொதுக்கப்படின்; அத்துடன்

(ஈ) தீர்மானிப்புக்கமைந்த உரிமம்பெற்ற வங்கி அல்லது இணைப்பு வங்கி, ஒரு தீர்மானிப்பு அல்லது மீளக்கட்டமைத்தல் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப் பட்டவுடன் ஒப்பேறக்கூடியதாக வருமென மத்திய வங்கி அபிப்பிராயப்படின்.

(3) இப்பிரிவின்கீழான தற்காலிக நிதியுதவி பின்வருவன வற்றுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படலாம்:-

(அ) தீர்மானிப்புக்கமைந்த ஓர் உரிமம்பெற்ற வங்கிக்காக அல்லது 30 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட ஓர் இணைப்பு வங்கிக்காக நிதியுதவி அளிப்பதற்கும்;

(ஆ) முப்பத்தாறாம் பிரிவின்கீழ் பங்குதாரர்களுக்கும் கடன்கொடுநர்களுக்கும் நட்டஈடு செலுத்துவதற்கும்; அல்லது

(இ) பந்தி (அ) அல்லது (ஆ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட நோக்கங்களின் இடைநேர்விளைவானதான அல்லது அவற்றுடன் சம்பந்தப்பட்டதான அத்தகைய வேறு வழிமுறையை எடுப்பதற்கும்.

(4) (அ) இப்பிரிவின்கீழ் தற்காலிக நிதியுதவியை வழங்குவதன் விளைவாக, அரசாங்கம், தீர்மானிப்புக்கமைந்த ஓர் உரிமம்பெற்ற வங்கியில் அல்லது இணைப்பு வங்கியில் கட்டுப்படுத்துகின்றவோர் அக்கறையை வைத்திருக்கின்றதாக வருமிடத்து, அத்தகைய உரிமம்பெற்ற வங்கி அல்லது இணைப்பு வங்கி ஒரு வர்த்தக மற்றும் உயர்தொழில்சார் அடிப்படையின்மீது முகாமைசெய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் மத்திய வங்கியினால் அதிகரித்த மேற்பார்வைக்கு அமைந்ததாதலும் வேண்டும்.

(ஆ) பந்தி (அ)வில் குறிப்பீடு செய்யப்பட்ட, விடயத்துக்கேற்ப, உரிமம்பெற்ற வங்கி அல்லது இணைப்பு வங்கி, நியாயமானவொரு காலஎல்லையினுள், அரசாங்கக் கட்டுப்பாட்டிலிருந்து அது

வெளிச்செல்வதற்காக, மத்திய வங்கியின் திருப்திக்கு ஒரு திட்டத்தை அபிவிருத்திசெய்தல் வேண்டும். அமைச்சர், மத்திய வங்கியின் விதப்புரையின்மீது, உரிய நேரத்தையும், சந்தை நிலைமைகளையும், அந்தரங்கத்தன்மைத் தேவைப்பாடுகளையும் கருத்திற்கொண்டு, நியாயமானதும் வெளிப்படையானதுமானவொரு முறையில் வெளிச்செல்கை விருப்புத்தெரிவுகளைப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைமுறைகளை விதித்துரைத்தல் வேண்டும்.

(5) இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் தற்காலிக நிதியுதவியும் தொடர்புபட்ட செலவுத்தொகைகளும் எதிர்பார்க்கப்பட்ட அறவீடுகளின் தேறிய தொகையும், 15 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின்கீழ் எல்லா வங்கிகளிலிருந்தும் அறவிடப்படலாம்.

(6) அமைச்சர், மத்திய வங்கியின் விதப்புரையின்மீது, இச்சட்டத்தின்கீழ் தற்காலிக நிதியுதவியின் வழங்குகைக்காகவும் அத்தகைய நிதிகளின் ஈடுசெய்கைக்காகவும் விதிகளை விதித்துரைக்கலாம்.

முறைமைசார் தாக்கத்தைக் கொண்ட ஓர் உரிமம்பெற்ற வங்கியை மூலதன மயமாக்குதல்

**34.** (1) முப்பதாம் பிரிவின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, ஓர் உரிமம்பெற்ற வங்கியின் வீழ்ச்சி முறைமைசார் முக்கியமொன்றை அல்லது தாக்கமொன்றைக் கொண்டிருக்கமுடியுமென அரசாங்கம் அபிப்பிராயப்படுமிடத்து, அத்தகைய உரிமம்பெற்ற வங்கியை தீர்மானிப்புச்செய்வதற்கு அது அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் உரிமம்பெற்ற வங்கியொன்றைத் தீர்மானிப்புச்செய்வதில், அரசாங்கம், பின்வருவனவற்றினூடாக அத்தகைய உரிமம்பெற்ற வங்கிக்காக மூலதனத்தை உட்செலுத்தலாம்:-

(அ) அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் மீள்மூலதன மயமாக்குதலில் அரசாங்கம் பங்குபற்றுதல்; அல்லது

(ஆ) அத்தகைய உரிமம்பெற்ற வங்கியைத் தற்காலிகப் பகிரங்கச் சொத்தாண்மையினுட் கையேற்றல்.

(3) முப்பத்திமூன்றாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள நிபந்தனைகள், ஏற்றமாற்றங்களுடன், இப்பிரிவின்கீழ் தீர்மானிப்புக்கமைந்த ஓர் உரிமம்பெற்ற வங்கிக்கு ஏற்புடையன வாதல் வேண்டும்.

*தீர்மானிப்புத் தத்துவங்களைப் பிரயோகித்தல் பற்றி மத்திய வங்கி அறிவித்தல் வேண்டும்*

**35.** (1) மத்திய வங்கியானது, தோதானவிடத்து, இச்சட்டத்தின் கீழ் மத்திய வங்கியினால் அதன் தீர்மானிப்புத் தத்துவங்களைப் பிரயோகிப்பதில் எவரேனும் வெளிநாட்டு மேற்பார்வைசார் அல்லது தீர்மானிப்பு அதிகாரசபைகளுட்பட அமைச்சருக்கும், வேறு இயைபான அதிகாரசபைகளுக்கும் அறிவிக்கலாம்.

(2) மத்தியவங்கி இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் ஏதேனும் உரிமம் பெற்ற வங்கியின்மீது தீர்மானிப்பு தத்துவங்களைப் பிரயோகித்தல் தொடர்பில் இலங்கையில் நன்கு புழக்கத்திலுள்ள சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலான தினசரி செய்தித்தாள்களில் அறிவித்தலொன்றை வெளிவிடுதல் வேண்டும்.

*பங்குதாரர்களுக்கும் கடன்கொடுநர்களுக்கும் நட்டஈடளித்தல்*

**36.** (1) வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், மத்திய வங்கியானது இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும் அல்லது நிறைவேற்றுவதிலும்:-

(அ) பொருளாதாரத்தில் ஓர் உரிமம்பெற்ற வங்கியின் வீழ்ச்சியினாலான ஏதேனும் தாக்கத்தைத் தணிப்பதும் நிதிசார் முறைமை முழுவதிலும் அத்தகைய வீழ்ச்சியின் இடர்பரவும் ஆபத்தைத் தவிர்ப்பதும் ;அல்லது

(ஆ) உரிமம்பெற்ற வங்கியின் எல்லா வைப்பாளர்களினதும் கடன்கொடுநர்களினதும் நன்மைக்காகப் பெறுமதியை அதிகபட்சமாக்குவதும்,

அவசியமாகவுள்ளதெனக் கருதுமிடத்து, தீர்மானிப்புக்கமைந்த ஓர் உரிமம்பெற்ற வங்கியின் கடன்கொடுநர்களிடையே ஒரு வகுப்பினரான அல்லது வகுப்பினர்களான ஆட்களுக்கு, முழுமையாக அத்தகைய கடன்கொடுநர்களினதும் அத்தகைய வகுப்புக்கு அல்லது வகுப்புகளுக்கு ஏற்றிக்கூறப்படற்பாலனவாக இருக்கவேண்டிய நட்டங்களின் தாக்கத்தையும், அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் வைப்பாளர்களினதும் கடன்கொடுநர்களினதும் நலன்கயையும்,

இலங்கையின் நிதிசார் முறைமை நிலையுறுதியையும் கவனத்துட் கொண்டு வெவ்வேறு நடாத்துகைகளை ஏற்புடையனவாக்குதல் மத்திய வங்கிக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) (அ) தீர்மானிப்புக்கமைந்த உரிமம்பெற்ற வங்கி ஒடுக்குதலினூடாக ஒழித்துக்கட்டப்பட்டிருப்பின், பங்குதாரர் அல்லது கடன்கொடுநர் ஒருவர் உற்றிருக்கக்கூடியவற்றைப் பார்க்கிலும் உயர்வான நட்டங்களை உறுகின்ற அப்பங்குதாரருக்கு அல்லது கடன்கொடுநருக்கு அவ்வித்தியாசத்துக்காக நட்ட ஈடளிக்கப்படலாம்.

(ஆ) பந்தி (அ) வின்கீழ் நட்ட ஈடளிக்கப்படவேண்டிய வித்தியாசம், 16 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட அத்தகைய தகைமைகளையும் அனுபவத்தையும் உடைய சுயாதீனமான உயர்தொழில்சார் பெறுமானமதிப்பீட்டாளரொருவரினால் தீர்மானிப்பு பூர்த்திசெய்யப்பட்டபின்னர் நிறைவேற்றப்பட்ட ஒரு பெறுமானமதிப்பீட்டின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட பெறுமானமதிப்பீடு, மத்திய வங்கியினால் அத்தகைய தீர்மானிப்பு தொடக்கிவைப்பதற்கு நேர்முன்னர் அத்தகைய உரிமம்பெற்ற வங்கி ஒடுக்குதலின்கீழ் இடப்படுமென்ற அடிப்படையில் நிறைவேற்றப்படுதல் வேண்டுமென்பதுடன் ஒடுக்கப்பட்ட நேரத்தில் கொடுக்கப்படக்கூடிய பெறுமதியின் அடிப்படையின் மீதாதலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், விடயத்துக்கேற்ப மத்திய வங்கியினால் அல்லது அரசாங்கத்தில் வழங்கப்பட்ட ஏதேனும் பகிரங்க நிதிசார் ஆதரவு அல்லது அவசரகாலத் திரவத்தன்மை உதவியின் விளைவாக அத்தகைய உரிமம்பெற்ற வங்கியில் உருவாக்கப்பட்ட அல்லது பேணிக்காக்கப்பட்ட ஏதேனும் பெறுமதி, வித்தியாசத்தைக் கணக்கிடுவதில் கழிக்கப்படுதல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட நட்டஈடு, 33 ஆம் பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறான தற்காலிக நிதியுதவியினூடாக அரசாங்கத்தினால் வழங்கப்படலாம்.

(5) மத்திய வங்கியானது காலத்துக்குக்காலம் பணிப்புகளை வழங்குவதன் மூலம் இப்பிரிவின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுக்கலாம்.

மத்திய வங்கியும் அமைச்சும் தகவல்களைப் பரிமாற்றுதல்

**37.** (1) இச்சட்டத்தில் அல்லது அப்போதைக்கு வலுவிலுள்ள வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், மத்திய வங்கியும் நிதி அமைச்சும், இச்சட்டத்தின்கீழ் அரசாங்கத்தினால் எந்த உரிமம்பெற்ற வங்கி தொடர்பில் தீர்மானிப்பு வழிமுறைகளின் திட்டமிடுதல், தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் எடுக்கப்படுவதற்குத் தேவைப் படுத்தப்படுகின்றதோ அந்த ஏதேனும் உரிமம்பெற்ற வங்கி தொடர்பான தகவல்களைப் பரிமாற்றுதல் வேண்டும்.

(2) அமைச்சர், அமைச்சரின் அமைச்சுச் செயலாளர், பணிப்பாளர் தலைமையதிபதி, எவரேனும் பணிப்பாளர், அலுவலர் அல்லது பணிகளில் அல்லது அலுவல்களில் ஈடுபட்டுள்ள அல்லது தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ள வேறெவரேனுமாள், (1) ஆம் உட்பிரிவின்கீழ் பரிமாற்றப்பட்ட எல்லாத் தகவல்களும் தொடர்பில் கண்டிப்பான அந்தரங்கத்தன்மையைப் பேணுதல் வேண்டு மென்பதுடன் பின்வரும் சந்தர்ப்பங்களிற்றவிர அத்தகைய எவையே னும் தகவல்களை வெளிக்காட்டுதலுமாகாது:-

(அ) ஒரு சட்ட நீதிமன்றத்தினால் தேவைப்படுத்தப்பட்ட வாறாகத் தவிரவும்;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அவர்களின் கடமைகளைப் புரிகை யிற்றவிரவும்; அல்லது

(இ) இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுள் எவற்றுடனும் இணங்கி யொழுகுவதற்காகத் தவிரவும்.

எல்லைக்கப் பாலான ஒத்துழைப்பு

**38.** (1) இச்சட்டத்தில் அல்லது அவ்போதைக்கு வலுவிலுள்ள வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறி ருப்பினும், மத்திய வங்கியானது, இலங்கைக்கு வெளியேயுள்ள வேறு நியாயாதிக்கங்களிலுள்ள வங்கிகளின் மேற்பார்வைசார் அல்லது ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைகளுட்பட, இலங்கைக்குவெளியே தாபிக்கப்பட்ட இயைபான அதிகாரசபைகளுடன் உடன்படிக்கை களையும், புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும், ஒருங்கிணைப்புக்கான, ஒத்துழைப்புக்கான மற்றும் தகவல்களைப் பரிமாற்றுவதற்கான ஒழுங்கேற்பாடுகளையும் செய்துகொள்வதற்கு அதிகாரமுடைய தாதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், மத்திய வங்கியானது, எவையேனும் அந்தரங்கத் தகவல்கள் பரிமாற்றுதல் அத்தகைய அதிகாரசபை யிலுள்ள நம்பகத்தன்மையினை பேணுவதற்கான கடமை கிடைக்கப்பெறாமை காரணமாக பேணப்படமுடியாது என அபிப்பிராயப்படின், மத்திய வங்கி இலங்கைக்கு வெளியேயுள்ள அத்தகைய ஏதேனும் அதிகாரசபையுடன் அந்தரங்கத்தன்மைக் கான அத்தகைய தகவல்களைப் பரிமாற்றுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட இலங்கைக்கு வெளியேயுள்ள இயைபான அதிகாரசபைகளுடனான உடன் படிக்கைகளும், புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், ஒழுங்கேற்பாடு களும் பின்வருவனவற்றையும் உள்ளடக்குதல் வேண்டும்:-

(அ) கலந்தாலோசனைகள், முன்னறிவிப்புகள், ஒழுங்கு படுத்தும் அல்லது மேற்பார்வைசார் கரிசனைகள், அறவீட்டுத் திட்டங்கள், தீர்மானிப்புத்தன்மையினவான மதிப்பீடுகள், தீர்மானிப்புத் திட்டங்கள், முற்கூட்டிய இடையீட்டு வழிமுறைகள் மற்றும் தீர்மானிப்பு நடவடிக்கைகள் என்பன உட்பட, திறத்தவர்களுக் கிடையே உடன்பட்டுக்கொள்ளப்பட்ட கருமங்கள் உரியநேரத்தில் தகவல்களின் பரிமாற்றத்துக்கான நடவடிக்கைமுறைகள்;

(ஆ) தீர்மானிப்பு வழிமுறைகளின் ஒருங்கிணைப்புக்கான நடவடிக்கைமுறைகள்;

(இ) வெளிநாட்டு ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைகளினா லும் மத்திய வங்கியினாலும் எடுக்கப்பட்ட தீர்மானிப்பு வழிமுறைகளை ஏற்றங்கீகரிப்பதற்கும் வசதிப்படுத்து வதற்குமான நடவடிக்கைமுறைகள்;

(ஈ) தகவல்களானவை எந்நோக்கங்களுக்காகப் பகிரப்படு கின்றனவோ அந்நோக்கங்களல்லாத வேறு நோக்கங் களுக்காகத் தகவல்களின் பாவனைமீதான மட்டுப்பாடு கள்;

(உ) தகவல்கள் அந்தரங்கமானவொரு முறையில் கொள்ளப்படவேண்டுமென்பதற்கும் மத்திய வங்கியின் வெளிப்படையான சம்மதமின்றி மேற்கொண்டு வெளிப்படுத்தப்படலாமென்பதற்குமான ஒப்புடன் படிக்கை; அத்துடன்

(ஊ) இச்சட்டத்தின்கீழான தீர்மானிப்பு வழிமுறைகளின் பயனுள்ள நடைமுறைப்படுத்துகைக்கு அவசியமெனத் திறத்தவர்கள் கருதக்கூடிய வேறேதேனும் கருமம்.

(3) மத்திய வங்கியானது, ஒரு வெளிநாட்டுத் தீர்மானிப்பு அதிகாரசபையின் வேண்டுகோளின்மீது, வெளிநாட்டு அதிகாரசபையின் தீர்மானிப்பு வழிமுறையொன்றின் விளைவுகள் இலங்கையில் முழுமையாக அல்லது பகுதியளவில் ஏற்புடையற் பாலனவாதல் வேண்டுமெனக் கட்டளையொன்றை ஆக்கலாம்:

ஆயின், எவ்வாறாயினும், மத்திய வங்கியானது பின்வருமாறு அபிப்பிராயப்படுமிடத்து, மத்திய வங்கி அத்தகைய கட்டளையை ஆக்குதலாகாது:-

(அ) அதன் குறிக்கோளினதும் எதிர்நோக்கப்பட்ட பெறுபேறு களினதும் நியதிகளின்படி, வெளிநாட்டுத் தீர்மானிப்பு வழிமுறை, இச்சட்டத்தின்கீழான தீர்மானிப்புத் தத்துவங்களின் பிரயோகத்துடன் ஒப்பிடப்படத்தக்க தல்ல;

(ஆ) வெளிநாட்டுத் தீர்மானிப்பு அதிகாரசபையின் நியாயாதிக்கத்தின் இயைபான சட்டங்கள், வேண்டு கோளின்மீது மத்திய வங்கியின் தீர்மானிப்பு வழிமுறை களின் ஏற்றங்கீகாரத்துக்காக அனுமதியளிப்பனவல்ல வென்றும்;

(இ) ஒரு வெளிநாட்டுத் தீர்மானிப்பு வழிமுறையை ஏற்றங்கீ கரித்தல், இச்சட்டத்தின்கீழான தீர்மானிப்புக் குறிக் கோள்களின் எய்துகைக்கும் பங்களிக்கமாட்டாதென்றும்;

(ஈ) இலங்கையிலுள்ள உரிமம்பெற்ற வங்கியின் கடன் கொடுநர்கள், வெளிநாட்டுத் தீர்மானிப்பு நடவடிக்கைகளின் கீழ் ஒப்புரவான முறையில் நடாத்தப்பட மாட்டார்களென்றும்;

(உ) அத்தகைய ஏற்றங்கீகாரம், இலங்கையில் முக்கியமான பாதகமான பணவகையான சிக்கல்களைக் கொண்டிருக்குமென்றும்; அல்லது

(ஊ) அத்தகைய ஏற்றங்கீகாரம் இலங்கையின் பகிரங்கக் கொள்கையை மீறுமென்றும்.

## பாகம் III

## இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம்

வைப்புக் காப்புறுதித் திட்டமொன்றைத் தாபித்தல்

**39.** மத்திய வங்கியானது, நிதிசார் முறைமையில் பொதுமக்களின் நம்பிக்கையைப் போற்றிக்காப்பதற்கென மற்றும் இலங்கையில் நிதிசார் முறைமையின் உறுதிப்பாட்டை மேம்படுத்துத்துவதற்கும், அதற்குப் பங்களிப்பதற்குமென பின்வரும் நோக்கங்களுக்காக, இச்சட்டத்தின் கீழ் (இதனகத்துப்பின்னர், ''திட்டம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம் என அழைக்கப்படும் திட்டமொன்றைத் தாபித்தல் வேண்டும்:-

(அ) (இச்சட்டத்தின் இப்பாகத்தில் ஓர் "உறுப்பு நிறுவனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதும்) திட்டத்தின் உறுப்பினரொன்றாகவுள்ளதுமான ஒரு நிறுவனத்தில் வைப்பாளர்களினால் இடப்பட்ட வைப்புக்களை, அத்தகைய உறுப்பு நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட உரிமம் மத்திய வங்கியினால் இல்லாதாக்கப்படும் பட்சத்தில், **44** ஆம் பிரிவின் (9) ஆம் உட்பிரிவுக்கமைய காலத்துக்குக்காலம் மத்திய வங்கியினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான ஏதேனும் அதிகபட்சத் தொகை வரை அத்தகைய வைப்பாளர்களுக்கு நட்டஈடளிப்பதற்கெனக் காப்புறுதிசெய்தல்; அத்துடன்

(ஆ) காப்புகளுக்கமைய, தீர்மானிப்பு வழிமுறையொன்றாக உறுப்பு நிறுவனமொன்றின் சொத்துக்களையும் பொறுப்புகளையும் கைமாற்றுவதனை வசதிப்படுத்து வதற்குத் தோதான நிதியுதவியை வழங்குவதற்கான ஒரு முறைமையைத் தாபித்தல்.

*திட்டத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும்*

**40.** (1) மத்திய வங்கியானது திட்டத்தின் நிருவாகத்துக்கும் முகாமைக்கும் பொறுப்பாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் திட்டத்தின் பயனுள்ள நடைமுறைப்படுத்துகைக்காக இச்சட்டத்தின் கீழ் அதற்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தளிக்கப்பட்ட எல்லாத் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும் புரிதலும் மற்றும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் திட்டத்தை நிருவகித்தல் மற்றும் முகாமைசெய்தல் தொடர்பாக மத்திய வங்கியானது-

(அ) திட்டத்தின் பொதுவான நிருவாகம் தொடர்பான கொள்கைகளை வகுத்தமைக்கலாம்;

(ஆ) திட்டத்தின் பணிகளுக்கும் மத்தியவங்கியின் வேறு பணிகளுக்குமிடையிலான அக்கறை முரண்பாட்டை அல்லது நிகழ்தகு அக்கறை முரண்பாட்டைத் தடுப்பதற்கான, திட்டம் தொடர்பான தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும், நிறைவேற்றுதலும் தொடர்பாக ஒழுங்கமைப் புச்சார் ஒழுங்கேற்பாடுகளை எடுத்துக்கூறலாம்; அத்துடன்

(இ) நிதியத்தில் கிடைக்கக்கூடிய பணங்களைப் பயன்படுத்து வதன்மூலம் காப்புறுதி செய்யப்பட்ட வைப்புக்களை மீளச்செலுத்துவதற்கான நடவடிக்கைமுறையை எடுத்துக்கூறுகின்ற விதிகளை ஆக்குதல்; அத்துடன்

(ஈ) திட்டத்தின் பயனுள்ள நிருவாகத்தையும் முகாமையையும் உறுதிப்படுத்துவதற்கு அவசியமென மத்திய வங்கி கருதுகின்ற வேறேதேனும் ஒழுங்கேற்பாட்டைச் செய்யலாம்.

(3) மத்திய வங்கியானது, திட்டத்தின் நாளாந்த நிருவாகமும் முகாமையும் தொடர்பான ஏதேனும் தத்துவத்தை, கடமையை மற்றும் பணியை மத்திய வங்கியின் எவரேனும் அலுவலருக்குக் கையளிக்கலாம்.

திட்டத்தின் உறுப்பினர்கள்

**41.** (1) நான்காம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட திணைக்களத்தின் தலைவர் அல்லது மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலர், திட்டத்தின் உறுப்பினர்களாகவுள்ள எல்லா நிறுவனங்களும் பற்றிய நிரலொன்றை இலங்கையில் புழக்கத்திலுள்ள சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில நாளாந்தச் செய்தித்தாள்களில், ஆகக்குறைந்தது வருடாந்தமேனும் வெளியிடுதல் வேண்டும்.

(2) மத்திய வங்கியானது, ஒரு பணிப்பென்றவகையாக, திட்டத்திலுள்ள உறுப்பாண்மைபற்றி உறுப்பு நிறுவனங்களுக்கு அறிவித்தல் வேண்டும்.

இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக, ''உறுப்பு நிறுவனம்'' என்பது, வங்கித்தொழில் சட்டத்திலுள்ள கருத்துக்குட்பட்ட உரிமம்பெற்ற வர்த்தகவங்கி, உரிமம்பெற்ற விசேடித்த வங்கி அல்லது நிதித்தொழில் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட உரிமம்பெற்ற நிதிக்கம்பெனி அல்லது இச்சட்டத்தின் கீழ் உறுப்பு நிறுவனமொன்றாக காலத்துக்குக்காலம் மத்தியவங்கியினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான வேறு ஏதேனும் நிறுவனம் என்று பொருள்படும்.

திட்டத்திலான உறுப்பாண்மை இல்லாதொழிதல்

**42.** (1) விடயத்துக்கேற்ப, வங்கித்தொழிலை அல்லது நிதித்தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு உறுப்பு நிறுவனமொன்றுக்கு மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட உரிமம் இல்லாதாக்கப்படுவதன் மேல் அல்லது ஒடுக்குதல் தொடங்கியதன் மேல், அத்தகைய நிறுவனம் திட்டத்தின் உறுப்பினரொன்றாக இல்லாதொழிதல் வேண்டும்.

(2) மத்திய வங்கியானது, (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப் பட்டவாறான உரிமம் இல்லாதாக்கப்படுவதன்மேல், அத்தகைய நிறுவனம் அத்தகைய இல்லாதாக்குகையின்மேல் திட்டத்தின் உறுப்பினரொன்றாக இல்லாதொழிகின்றதென வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் அல்லது நிதித்தொழில் சட்டத்தின்கீழ் பொது மக்களுக்கு அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

*உறுப்பு நிறுவனங்கள் திட்டத்தின் கீழான வைப்புக்களைக் காப்புறுதி செய்தல்*

**43.** (1) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, உறுப்பு நிறுவனங்கள் திட்டத்தின்கீழ் தகவுடைய எல்லா வைப்புக்களையும் காப்புறுதிசெய்தல் வேண்டும்.

(2) திட்டத்தின்கீழ் காப்புறுதிசெய்யப்படவேண்டிய தகவுடைய வைப்புக்கள், (3) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட வைப்புப் பொறுப்புக்கள்தவிர, உறுப்பு நிறுவனங்களின் கோரிக்கை, கால மற்றும் சேமிப்பு வைப்புப் பொறுப்புக்களையும் மற்றும் ஏதேனும் வாக்குறுதிப்பத்திரம், கலப்பு ஒப்புரவு உட்பட அத்தகைய வேறு தனிசுச் சாதனங்களையும், மத்திய வங்கியினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய வேறு சாதனங்களையும் உள்ளடக்குதல் வேண்டும்.

(3) பின்வரும் வைப்புப் பொறுப்புக்கள் தகவுடைய வைப்புக் களாகக் கருதப்படுதலாகாது:-

(அ) வேறு உறுப்பு நிறுவனங்களுக்கான வைப்புப் பொறுப் புக்கள்;

(ஆ) ஓர் உறுப்பு நிறுவனத்தின் பணிப்பாளர்களினாலும் முக்கியமான முகாமைத்துவ ஆளணியினரினாலும், அத்தகைய பணிப்பாளர்களினதும் முக்கியமான முகாமைத்துவ ஆளணியினரினதும் நெருங்கிய உறவினர்களினாலும், ஓர் உறுப்பு நிறுவனத்தின் துணைநிலைக்கம்பெனியொன்றினாலும் அல்லது இணைக்கம்பெனியொன்றினாலும், ஓர் உறுப்பு நிறுவனத்தின் பணிப் பாளர்களுள் மற்றும் முக்கியமான முகாமைத்துவ ஆளணியினருள் அல்லது அத்தகைய பணிப்பாளர்களின் மற்றும் முக்கியமான முகாமைத்து

ஆளணியினரின் நெருங்கிய உறவினர்களுள் எவரும் எந்த முயற்சியில் ஏதேனும் அக்கறையைக் கொண்டுள்ளாரோ அந்த ஏதேனும் முயற்சியினாலும், வேறெவரேனும் திறத்தவருடன் தனியாக அல்லது கூட்டாகப் பேணப்பட்ட வைப்புப் பொறுப்புக்கள்;

(இ) பின்வருமிடத்து, ஓர் உறுப்பு நிறுவனத்தின் முன்னைநாள் பணிப்பாளர்களின் அல்லது முக்கியமான முகாமைத்துவ ஆளணியினரின் வைப்புப் பொறுப்புக்கள்:-

(i) அத்தகைய பணிப்பாளர்கள் அல்லது முக்கியமான முகாமைத்துவ ஆளணியினர், அத்தகைய உறுப்பு நிறுவனத்தின் தொழிலினது தொழிற்பாடுகளை அல்லது முகாமைத்துவத்தை நிறைவேற்றுவதில், அத்தகைய உறுப்பு நிறுவனத்தின் வைப்பாளர்கள் மற்றும் வேறு கடன்கொடுநர்களின் அக்கறைகளுக்குத் தீங்கு விளைவிக்கின்ற ஏதேனும் திடமற்ற, முறையீனமான, நேர்மையற்ற, ஏமாற்றுத்தன்மையினதான அல்லது மோசடியான நிதிசார் செயல்முறையில் சம்பந்தப்பட்டிருக்கின்றமை அல்லது தொடர்புபட்டிருக்கின்றமை காரணமாக அத்தகைய பணிப்பாளர்கள் அல்லது முக்கியமான முகாமைத்துவ ஆளணியினர் மத்திய வங்கியின் பணிப்பின்மீது அத்தகைய பதவியிலிருந்து அகற்றப்பட்டுள்ளவிடத்து;

(ii) அத்தகைய பணிப்பாளர் அல்லது முக்கியமான முகாமைத்துவ ஆளணியினர், அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் ஓர் உறுப்பு நிறுவனத்தில் அத்தகைய பதவியை வகிப்பதற்குத் தகைதியற்றவரும் தகுந்தவரற்றவரும் என, மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்பட்டுள்ளவிடத்து;

(iii) அத்தகைய பணிப்பாளர்கள் அல்லது முக்கியமான முகாமைத்துவ ஆளணியினர், அத்தகைய உறுப்பு நிறுவனத்தின் வைப்பாளர்களினதும்

ஏனைய கடன்கொடுநர்களினதும் அக்கறைகளுக்குத் தீங்குவிளைவிக்கின்ற ஏதேனும் திடமற்ற, முறையீனமான, நேர்மையற்ற, ஏமாற்றுந் தன்மையினவான அல்லது மோசடியான நிதிசார் செயல்முறைகளில் ஈடுபட்டிருக்கின்றமை அல்லது சம்பந்தப்பட்டிருக்கின்றமை அல்லது அத்தகைய செயல்முறைகளினூடாக அதன் தொழிலினது தொழிற்பாடுகளை அல்லது முகாமைத்துவத்தைக் கொண்டு நடாத்துவதற்குப் பொறுப்பாகவிருக்கின்றமை காரணமாக அத்தகைய பணிப்பாளர்கள் அல்லது முக்கியமான முகாமைத்துவ ஆளணியினர், திட்டத்தின்கீழ் ஏதேனும் நன்மையைப் பெறுவதற்கு உரித்துடையோரல்லரென மத்திய வங்கி, கிடைக்கக்கூடிய விடயங்களின் அடிப்படையில் திருப்திப்படுவதன் மேலும் விடயத்துக்கேற்ப அத்தகைய பணிப்பாளர்களுக்கு அல்லது முக்கியமான முகாமைத்துவ ஆளணியினருக்கு கேட்கப்படுவதற்கான சந்தர்ப்பமொன்றை அளித்தபின்னரும் தன்னியக்கத்தால் தீர்மானிக்குமிடத்து;

(ஈ) காலத்துக்குக்காலம் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின் நியதிகளின்படி மத்திய வங்கிக்குக் கைமாற்றப்பட்டுள்ள, விடயத்துக்கேற்ப, வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் கைவிடப்பட்ட ஆதனம் என்பதன் பொருளினுள் அடங்குகின்ற வைப்புக்களும் நிதித் தொழில் சட்டத்தின்கீழ் செயலற்ற வைப்புக்களும்;

(உ) அமைச்சு, திணைக்களம், மாகாணசபை அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபை உள்ளடங்கலாக ஏதேனும் அரசாங்க நிறுவனத்தினால் வைத்திருக்கப்படும் வைப்புகள்; அத்துடன்

(ஊ) திட்டத்தின் கீழ் தகவுடையதல்லாதென மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஓர் உறுப்பு நிறுவனத்தின் வேறேதேனும் வைப்புப் பொறுப்பு.

(4) மத்திய வங்கி, காலத்துக்காலம், திட்டத்தின் நடைமுறைப் படுத்துகையும் தொழிற்பாடும் தொடர்பாக உறுப்பு நிறுவனங்க ளுக்குத் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை வழங்கலாம்.

வைப்பாளர் களுக்கான நட்டஈடு

**44.** (1) காலத்துக்குக்காலம் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின்படி அல்லது இதனகத்துப்பின்னர் ஏற்பாடுசெய்யப் பட்டவாறாக, காப்புறுதிசெய்யப்பட்ட வைப்புக்கள்மீது வைப்பாளர் களுக்கு நட்டஈடு செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஓர் உறுப்பு நிறுவனத்தின் காப்புறுதிசெய்யப்பட்ட வைப்புக் கள்மீதான நட்டஈட்டு கொடுப்பனவு, அத்தகைய உறுப்பு நிறுவனத் துக்கு வழங்கப்பட்ட உரிமம் இல்லாதாக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் தொடக்கிவைக்கப்படுதல் வேண்டும்.

(3) காப்புறுதிசெய்யப்பட்ட வைப்புக்களின் வைப்பாளரொருவர், உறுப்பு நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட உரிமம் இல்லாதாக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறாண்டுகளினுள் நட்டஈட்டுக்கான உரியமுறையில் பூர்த்திசெய்யப்பட்ட உரிமைக்கோரிக்கையொன்றை அத்தகைய வைப்பாளர் சமர்ப்பிக்கும் அளவுக்கு (1) ஆம் உட்பிரிவின்கீழான நட்டஈட்டைப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழான நட்டஈட்டைச் செலுத்தும் நோக்கத்துக்காக, **49** ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட வைப்புக் காப்பறுதி நிதியம், உறுப்பு நிறுவனத்திடமிருந்து சேர்மதியான காப்புறுதிசெய்யப்பட்ட வைப்புக்களின் தொகைக்குச் சமமான தொகையொன்றில், அத்தகைய தொகைகள் அதன் காப்புறுதி செய்யப்பட்ட வைப்பாளர்களுக்கு உண்மையாகச் செலுத்தப்பட்ட தேதியைப் பொருட்படுத்தாது, அத்தகைய உறுப்பு நிறுவனத்துக் கெதிராக வைப்பாளர்களின் உரிமைகளுக்குத் தன்னியக்கமாகவே கடன்பற்றுரிமைமையை மாற்றியிடுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், 2021, ஓகத்து 6 ஆந்தேதிக்கு முன்னர் எந்த உறுப்பு நிறுவனங்களின் உரிமங்கள் இல்லாதாக்கப் பட்டுள்ளனவோ அல்லது இடைநிறுத்தப்பட்டுள்ளனவோ அந்த உறுப்பு நிறுவுனங்களின் காப்புறுதிசெய்யப்பட்ட வைப்புக்களின் வைப்பாளர்கள், அத்தகைய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட உரிமங்கள் இல்லாதாக்கப்பட்ட அல்லது இடைநிறுத்தப்பட்ட தேதியிலிருந்து நான்காண்டுகளுக்குப் பிந்தாமல் தமது உரிமைக் கோரிக்கைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(5) இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக, உறுப்பு நிறுவனமொன்று, அத்தகைய நிறுவனத்தின் எல்லா வைப்பாளர் களும் பற்றிய பதிவேடுகளை, அத்தகைய ஒவ்வொரு வைப்பாளருக் கும் தனித்துவமான அடையாளங்காண் இலக்கத்துடன் பேணுதல் வேண்டுமென்பதுடன் எல்லா வைப்பாளர்களும்பற்றிய விபரங் களை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் காலாகாலம் மத்திய வங்கிக்குச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(6) ஓர் உறுப்பு நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட உரிமமொன்று மத்தியவங்கியினால் இல்லாதாக்கப்படும் பட்சத்தில், அத்தகைய உறுப்பு நிறுவனம், அத்தகைய இல்லாதாக்கப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களினுள், அத்தகைய நிறுவனத்தின் வைப்பாளர் களின் நிரலொன்றை (5) ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட படிவத்திலும் முறையிலும், திட்டத்தின்கீழ் வைப்பாளர்களுக்கு நட்டஈட்டைக் கொடுப்பனவுசெய்யும் நோக்கத்தக்காக மத்திய வங்கிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(7) ஆறாம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட வைப்பாளர்கள் பற்றிய நிரல், மத்திய வங்கியின் மேற்பார்வைசார் திணைக் களங்களின் அந்தந்தத் தலைவர்களினால் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும். வைப்பாளர்கள் பற்றிய நிரலைச் சான்றுப்படுத்தும் நோக்கத்துக்காக, மேற்பார்வைசார் திணைக்களங்களின் அந்தந்தத் தலைவர்கள், அவசியமாயின் வெளியகக் கணக்காய்வாளரொரு வரின் சேவையைப் பெற்றுக்கொள்ளலாம்.

(8) ஓர் உறுப்பு நிறுவனத்தின் காப்புறுதிசெய்யப்பட்ட வைப்புக்கள் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான நட்டஈடு, அத்தகைய உறுப்பு நிறுவனத்தின் உரிமம் இல்லாதாக்கப்பட்ட தேதியன்றுள்ளவாறு அதன்மீது திரண்டுள்ள ஏதேனும் வட்டியுட்பட, ஒவ்வொரு வைப்பாளருக்காகவும் காப்புறுதிசெய்யப்பட்ட வைப்புப் பொறுப்புக்கள் எல்லாவற்றையும் கூட்டுமொத்தமாக்கி கணிப்பிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அடுத்துவரும் காலப் பகுதிக்கான ஏதேனும் வட்டி செலுத்தப்படுதலுமாகாது.

(9) எட்டாம் உட்பிரிவின்கீழ் வைப்பாளரொருவருக்குச் செலுத்தப்படற்பாலதான அதிபட்ச நட்டஈட்டுத்தொகை, திட்டத்தின்கீழ் காப்புறுதிசெய்யப்பட்ட வைப்பாளர்களுள் பெரும்பான்மையோரின் அக்கறைகளைப் பாதுகாத்தல், வங்கித்தொழில் மற்றும் நிதிசார் முறைமையின் திடமானதன்மை மற்றும் வைப்புக் காப்புறுதி நிதியத்தில் கிடைக்கக்கூடியனவாகவுள்ள பணங்கள் என்பவற்றைக் கவனத்துட்கொண்டு, காலத்துக்குக்காலம் மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(10) எட்டாம் உட்பிரிவின்கீழ் செலுத்தப்படற்பாலதான நட்ட ஈட்டைத் தீர்மானிக்கும்போது, மத்திய வங்கியானது, காப்புறுதி செய்யப்பட்ட வைப்புக்களின் நாணயவகையைக் கவனத்துட் கொள்ளுதல் வேண்டும். அத்தகைய வைப்புக்கள் வெளிநாட்டு நாணயத்திலிருப்பின், (9) ஆம் உட்பிரிவின்கீழ் மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடிய இலங்கை ரூபாக்களில் அத்தகைய பணத் தொகைக்குச் சமமான தொகையொன்று அத்தகைய வைப்பாள ருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(11) நட்டஈட்டுக் கொடுப்பனவானது எப்பட்சத்திலும் மத்திய வங்கிக்குப் பொறுப்பொன்றை ஏற்படுத்துதலாகாது என்பதுடன் மத்திய வங்கியானது, வைப்புக் காப்புறுதி நிதியத்தின் வரவுக்குள்ள மொத்தப் பணத்தொகைகளை விஞ்சுகின்ற ஏதேனும் பொறுப்புக்காகப் பொறுப்பாக்கப்படுதலுமாகாது.

(12) வைப்புக் காப்புறுதி நிதியத்தின் வரவுக்குள்ள பணத்தொகையானது, வைப்பாளர்களுக்கான அதன் பொறுப்புக்களைவிடக் குறைவாகவிருக்குமிடத்து, அரசாங்கத்திடமிருந்தான அல்லது வேறு மூலங்களிலிருந்தான கடன்பெறுகைகளினூடாக மேலதிக நிதியளிப்பு திரட்டப்படலாமென்பதுடன் அத்தகைய நோக்கத்துக்

காக, திட்டமும் நிதி அமைச்சும், அத்தகைய கடன்பெறுகைகளை வசதிப்படுத்துவதற்கான நியதிநிபந்தனைகளையும், நடவடிக்கை முறைகளையும் எடுத்துக்கூறி எல்லா நேரங்களிலும் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றைப் பேணுதலும் வேண்டும்.

(13) நான்காம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட திணைக்களத்தின் தலைவர் அல்லது மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், வைப்பாளர்கள் பற்றிய பதிவேடுகளைப் பேணுதல் தொடர்பாக அல்லது வேறேதேனும் கருமம் தொடர்பாக உறுப்பு நிறுவனங்களுக்குக் காலத்துக்குக்காலம் அறிவுறுத்தல்களை வழங்கலாம்.

*வைப்பாளர்களின் உரிமைகளுக்குத் திட்டத்தின் கடன் பற்றுரிமை*

**45.** (1) நாற்பத்திநான்காம் பிரிவின்கீழான நட்டஈட்டுக் கொடுப்பனவின்மேல், திட்டமானது மொத்தக் காப்புறுதி செய்யப்பட்ட பெறுமதியளவுக்கு எந்த உறுப்பு நிறுவனத்தின் உரிமம் இல்லாதாக்கப்பட்டதோ அந்த உறுப்பு நிறுவனத்துக்கு எதிராக காப்புறுதி செய்யப்பட்ட வைப்பாளர்களின் எல்லா உரிமைகளுக்கும் கடன்பற்றுரிமையை மாற்றியிடுதல் வேண்டும்.

(2) இப்பிரிவில் எடுத்துக்கூறப்பட்ட வைப்பாளர்களின் உரிமைகளுக்கான கடன் பற்றுரிமையானது, வைப்புக் காப்புறுதி நிதியத்தினால் மேவப்படாதிருக்கின்றதான தொகைகளுக்காக உறுப்பு நிறுவனத்திற்கு எதிரான வைப்பாளரின் உரிமைக் கோரிக்கைகளைப் பாதித்தலாகாது.

*நட்டஈடானது உரிமம்பெற்ற வேறு வங்கி ஊடாக செலுத்தப் படலாம*

**46.** மத்தியவங்கியானது கொடுப்பனவு வங்கி ஒன்றாக செயலாற்றுவதற்கு சம்மதிக்கின்றதான மத்தியவங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக நேரடியாக அல்லது உரிமம்பெற்ற வேறு ஏதேனும் வங்கி ஊடான திட்டத்தின் கீழ் வைப்பாளர்களுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவுகளைச் செய்யலாம்.

*நட்டஈட்டுக் கொடுப்பனவு பற்றிய அறிவித்தல்*

**47.** மத்தியவங்கியானது திட்டத்தின் கீழ் நட்டஈட்டுக் கொடுப்பனவினை நடைமுறைப்படுத்தும் தேதிக்கு முன்னர் ஏழு வேலை நாட்களினுள் இலங்கையில் புழக்கத்திலுள்ள ஆகக்குறைந்தது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று நாளாந்த செய்தித்தாள்களில் அத்தகைய கொடுப்பனவினை நடைமுறைப் படுத்துவது பற்றி பின்வருவனவற்றை உள்ளடக்கிய அறிவித்தல் ஒன்றை வெளியிடுதல் வேண்டும்:-

(அ) கொடுப்பனவு வங்கியின் விபரங்கள்;

(ஆ) நட்டஈட்டை பெறுவதற்கு வைப்பாளர்களினால் சமர்ப்பிக்கப்படவேண்டிய விபரங்கள்;

(இ) வைப்பாளர் ஒருவருக்கு செலுத்தப்படவேண்டியதான அதிகபட்ச நட்டஈட்டுத் தொகை ; அத்துடன்

(ஈ) வைப்பாளர்கள் நட்டஈட்டுக்கொடுப்பனவுக்கான அவர்களது உரிமைக்கோரிக்கைகளை எப்படி சமர்ப்பித்தல் வேண்டும் என்பது பற்றிய வைப்பாளர்களுக்கான வேறு அத்தகைய அறிவுறுத்தல்கள்.

உறுப்பு நிறுவனங்களினால் அறிக்கையிடல்

**48.** ஒவ்வொரு உறுப்பினர் நிறுவனமும் மத்திய வங்கிக்கு காலத்துக்குக் காலம் குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் மத்திய வங்கியினால் தேவைப்படுத்தக்கூடியவாறான தகவலை மத்திய வங்கிக்கு அல்லது மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு வழங்குதல் வேண்டும்.

வைப்புக் காப்புறுதி நிதியம்

**49.** (1) மத்திய வங்கி திட்டத்தின் தொழிற்பாட்டின் பாகமொன்றாக வைப்புக் காப்புறுதி நிதியம் ஒன்றைத் தாபித்தல் வேண்டும்; அது மத்திய வங்கியின் ஏனைய சொத்துக்களிலிருந்தும் மத்திய வங்கியினால் முகாமை செய்யப்பட்ட சொத்துக்களிலிருந்தும் தனிவேறாக முகாமை செய்யப்படுதல் வேண்டும்.

(2) மத்தியவங்கி வைப்புக் காப்புறுதி நிதியம் எனும் பெயரில் வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் வழக்குத்தொடுக்கவும் படலாம்.

வைப்புக் காப்புறுதி நிதியம் தொடர்பாக மத்திய வங்கியின் தத்துவங்களும் கடமைகளும் பணிகளும்

**50.** (1) மத்தியவங்கியானது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய வைப்புக் காப்புறுதி நிதியத்தின் அலுவல்களை முகாமைசெய்து, நிர்வகித்து, மேற்பார்வை செய்தல் வேண்டும்.

(2) வைப்புக் காப்புறுதி நிதியத்தின் அலுவல்களை முகாமை செய்வதில், நிருவகிப்பதில் மற்றும் மேற்பார்வைசெய்வதில், மத்தியவங்கியானது பின்வரும் தத்துவங்களையும், கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும் நிறைவேற்றுதலும் மற்றும் புரிதலும் வேண்டும் -

(அ) வைப்புக் காப்புறுதி நிதியத்தின் பொது நிருவாகம் தொடர்பாக கொள்கைகளையும் அதனோடு தொடர்பட்ட வேறு அத்தகைய கருமங்களையும் வகுத்தமைத்தல்;

(ஆ) வைப்புக் காப்புறுதி நிதியத்தின் பயனுள்ள நிருவாகத் தையும் முகாமையையும் உறுதிப்படுத்துவதற்கு வைப்புக் காப்புறுதி நிதியத்தின் பெயரில் ஏதேனும் சர்வதேச நிதிநிறுவனத்துடன் உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளுதல்;

(இ) அது அவசியமெனக் கருதக்கூடியவாறாக, வைப்புக் காப்புறுதி நிதியத்தின் பெயரில் ஏதேனும் மானியக் கொடையை அல்லது உதவியை அல்லது கடன்பெறு கையை அரசாங்கத்திடமிருந்து அல்லது ஏதேனும் சர்வதேச நிதிநிறுவனத்திடமிருந்து ஏற்றுக் கொள்ளு தல்;

(ஈ) வைப்புக்காப்புறுதி நிதியத்தில் கிடைக்கக்கூடிய பணங்க ளைப் பயன்படுத்துவதன் மூலம் காப்புறுதி செய்யப்பட்ட வைப்புக்களை மீளச் செலுத்துவதற்கான நடவடிக்கை முறைகளை வகுத்தமைத்தல்;

(உ) முதலீடுகளை செய்து கொள்ளுதலும் வைப்புக் காப்புறுதி நிதியத்தின் நிதிசார் முகாமைத்துவதற்கு அவசியமாக இருக்கக்கூடியவாறான அல்லது விரும்பக் கூடியவாறான ஏதேனும் கொடுக்கல் வாங்கலை அல்லது உடன்படிக்கையைசெய்து கொள்ளுதலும்;

(ஊ) வைப்புக்காப்புறுதி நிதியத்தினால் அல்லது அதற்கு எதிராக மத்தியவங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் உரிமைக்கோரிக்கையை கொடுத்துத்தீர்த்தல் அல்லது இணக்கித்தீர்த்தல்;

(எ) எந்தக் காலப்பகுதியினுள் நட்டஈடானது **44** ஆம் பிரிவின் கீழ் வைப்பாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டுமோ அக்காலப்பகுதியினைத் தீர்மானித்தல்; அல்லது

(ஏ) மத்தியவங்கி வைப்புக்காப்புறுதி நிதியத்தின் பயனுறுதி வாய்ந்த நிருவாகம் மற்றும் முகாமையை உறுதிப்படுத்து வதற்கு அவசியமாக கருதக்கூடியவாறான அத்தகைய வேறு கருமங்களைச் செய்வித்தல்.

*வைப்புக் காப்புறுதி நிதியத்தின் நிதிமூலங்கள்*

**51.** (1) வைப்புக் காப்புறுதி நிதியத்துக்கு பின்வருவன வரவு வைக்கப்படுதல் வேண்டும்–

(அ) நியமிக்கப்பட்ட தேதியன்றுள்ளவாறு அப்போதைக்கு வலுவிலுள்ள சட்டங்களின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் கீழ் வைப்புக் காப்புறுதி நிதியத்தின் வரவிற்கு இடப்படும் பணத்தொகைகள்;

(ஆ) உறுப்பு நிவனங்களினால் செலுத்தப்பட்ட கட்டுப் பணங்களும் தண்டங்களும்;

(இ) முதலீட்டு வருமானமும் மற்றும் வைப்புக் காப்புறுதி நிதியத்திலுள்ள பண முதலீடுகளிலிருந்து பெறப்படும் ஈட்டுகைகளும்;

(ஈ) அப்போதைக்கு வலுவிலுள்ள சட்டங்களின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் கீழ் எவையேனும் உறுப்பு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட பாதுகாக்கப் பட்ட முற்பணங்களை அல்லது கடன்களை மீளப்பெறு தல்;

(உ) உறுப்பு நிறுவனத்திற்கு எதிராக தொடுக்கப்பட்ட ஒடுக்குதல் நடவடிக்கைகளின் போது அத்தகைய நிறுவனம் ஒன்றின் உறுப்பினரின் சொத்துக்களி லிருந்து வைப்பாளர்களுக்கு செலுத்தப்பட்ட நட்டஈட்டு அறவீட்டிலிருந்தான தொகைகள்;

(ஊ) வங்கித் தொழில் சட்டத்தின்கீழ் மத்திய வங்கிக்கு கைமாற்றப்பட்டுள்ள விடயத்துக்கேற்ப, உறுப்பு நிறுவனங்களின் கைவிடப்பட்ட ஆதனங்களின்அல்லது செயலற்ற வைப்புக்களிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படக் கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள்;

(எ) இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் உறுப்பு நிறுவனங்களி னால் செலுத்தப்பட்ட மேலதிக கட்டுப்பணமாக பெறப் பட்ட பணங்கள் மற்றும் தண்டங்கள்;

(ஏ) மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறாக அரசாங்கத்திடமிருந்தான அல்லது ஏதேனும் சர்வதேச நிதிநிறுவனத்திடமிருந்தான கடன்பெறுகைகள்; அத்து டன்

(ஐ) மத்தியவங்கியினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான வேறு ஏதேனும் வருமான மூலங்களிலிருந்தான வேறு ஏதேனும் பற்றுச்சீட்டு;

(2) வைப்புக் காப்புறுதி நிதியமானது, பின்வருவன தொடர்பில் கொடுப்பனவுகளைச் செய்து கொள்வதற்கு பயன்படுத்தப்படுதல் வேண்டும் -

(அ) உறுப்பு நிறுவனங்களின் காப்புறுதி செய்யப்பட்ட வைப்புகளின் வைப்பாளர்களுக்கான நட்டஈட்டுத் தொகை;

(ஆ) கைவிடப்பட்ட ஆதனம் அல்லது வைப்பு காப்புறுதி நிதியத்தின் வரவிற்கு இடப்படுகின்ற உறுப்பு நிறுவனங் களின் செயலற்ற வைப்புகள்;

(இ) அரசாங்கத்திடமிருந்து அல்லது ஏதேனும் சர்வதேச நிதிநிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட எவையேனும் கடன்பெறுகைகளின் மீள்செலுத்துகை; அத்துடன்

(ஈ) மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான திட்டத்தின் அத்தகைய தொழிற்பாட்டுச் செலவுகள்.

(3) கைமாற்றம் பெறுநர் அல்லது இணைப்பு வங்கிக்கு கைமாற்றப் பட்ட சொத்துக்களுக்கும் பொறுப்புக்களுக்கும் இடையேயான ஏதேனும் வேறுபாட்டைச் செலுத்தும் வகையாக அல்லது கைமாற்றப் பட்ட சொத்துக்களுடனும் பொறுப்புக்களுடனும் தொடர்புபட்ட நட்டங்களுக்காக உத்தரவாதத்தை வழங்குவதன் மூலம் அல்லது நட்டோத்தரவாதத்தை வழங்குவதன்மூலம் அல்லது அத்தகைய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை கைமாற்றுவதனூடாக உரிமம் பெற்ற வங்கி ஒன்றின் தீர்மானத்திற்கு பயனுள்ளவகையில் வசதி யளிப்பதற்கான நிதியளிப்பை வழங்குவதற்கு மத்திய வங்கி யானது திட்டத்தை தேவைப்படுத்தலாம்:

ஆயினும், இவ்வுட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட மொத்த நிதியளிப் பின் தொகையானது 44 ஆம் பிரிவின் கீழ் அத்தகைய வங்கியின் வைப்பாளர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய மொத்த நட்டஈட்டுத் தொகையை விஞ்சுதலாகாது, என்பதுடன் அத்தகைய நிதியளித்தல் ஆனது சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் கைமாற்றுத லுடன் காப்புறுதிசெய்யப்பட்ட வைப்புகள் ஒப்பேறக்கூடிய வங்கி ஒன்றினால் சேர்மதியாக இருத்தல் வேண்டும் என மத்திய வங்கி யினலான உறுதிப்படுத்தல் ஒன்றிற்கு அமைந்ததாதல் வேண்டும்:

ஆயினும் மேலும், அனைத்து வகையினதான பங்குமூலதனத்தினை வைத்திருப்பவர்கள் மற்றும் துணைநிலைப்படுத்தப்பட்ட தனிசு வைத்திருப்பவர்கள் நட்டங்களை உறிஞ்சி இருத்தல் வேண்டும் அல்லது உறிஞ்சுவார்கள்.

(4) (அ) மத்திய வங்கி (3) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய வங்கிக்கு திட்டத்தினால் வழங்கப்பட்ட நிதியளிப்பின் மொத்தத் தொகையை தீர்மானத்துக்கமைய உரிமம்பெற்ற வங்கியிடமிருந்து அறவிடுவதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) இவ்வுட் பிரிவின்கீழ் திட்டத்துக்கு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை 45 ஆம் பிரிவின்கீழ் காப்புறுதி செய்யப்பட்ட வைப்பாளர்களின் உரிமைகளை கடன் பற்றுரிமையிலிருந்து எழுகின்ற வைப்புக் காப்புறுதி நிதியத்தின் காப்புறுதி செய்யப்பட்ட வைப்புகளுடனும் மற்றும் உரிமைக் கோரிக்கைகளுடனும் இணையாகவிருத்தல் வேண்டும்.

வைப்புக் காப்புறுதி நிதியத்தின் பணங்களை முதலீடு செய்தல்

**52**. வைப்புக் காப்புறுதி நிதியத்தின் வரவுக் இருக்கும் எல்லாப் பணங்களும், வைப்புக் காப்புறுதி நிதியத்தின் பணங்களை முதலீடு செய்வது தொடர்பாக காலத்திற்குக்காலம் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிகாட்டு நெறிகள் என்பவற்றுக்கு இணங்க அத்தகைய முதலீடுகளின் பாதுகாப்பு, திரவத்தன்மை மற்றும் வருவாய் ஆகியவற்றை கருத்திற்கொண்டு திறைசேரி உண்டியல்களில், திறைசேரி முறிகளில், வேறு ஏதேனும் சந்தைப்படுத்தக்கூடிய பிணையங்களில் மத்தியவங்கியினால் முதலீடு செய்யப்படுதல் வேண்டும்.

வைப்புக் காப்புறுதி நிதியத்திற்கு மத்திய வங்கியிட மிருந்து நிதிகளைக் கைமாற்றுதல்

**53**. ஏதேனும் நேரத்தில், வைப்புக்காப்புறுதி நிதியத்தில் கிடைக்கக்கூடிய திரவத்தன்மை வாய்ந்த நிதியங்கள், திட்டத்தின் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு போதாதென கருதப்படின், மத்தியவங்கி வைப்புக் காப்புறுதி நிதியத்தின் விடயத்திலுள்ள ஏலவேயுள்ள இணைவுறுகளுக்கெதிராக அல்லது நிதி அமைச்சரினால் வழங்கப்படும் உத்தரவாதமொன்றுக்கெதிரான அவசியமானதென கருதக்கூடியவாறான அத்தகைய நியதிகள் நிபந்தனைகள் மீதும் அத்தகைய காலப்பகுதிக்காகவும் அத்தகைய திரவத்தன்மைவாய்ந்த வைப்புக் காப்புறுதி நிதியத்திற்கு அளிக்கலாம்.

வைப்புக் காப்புறுதி நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள்

**54.** (1) வைப்புக் காப்புறுதி நிதியத்திற்கு நிதிக்கூற்றுக்கள் ஏற்றுக்கொள்ளப்படற்பாலதான கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்படுதல் வேண்டும். வைப்புக் காப்புறுதி நிதியத்தின் கணக்குகள் காலத்திற்குக்காலம் மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் பேணப்படுதல் வேண்டும். அத்தகைய நிதிக்கூற்றுக்கள் தனிவேறாகப் பேணப்படுதல் வேண்டும் என்பதுடன் மத்திய வங்கியின் நிதிக் கூற்றுக்களின் பாகமாக கருதப்படுதலாகாது.

(2) மத்திய வங்கியானது ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலிருந்தும் மூன்று மாதங்களினுள் வைப்புக் காப்புறுதி நிதியத்தின் நிதிக்கூற்றுகளைத் தயாரிப்பதற்கு பொறுப்புடையதாயிருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் கணக்காய்வு செய்யப்படுதலும் வேண்டும்.

(3) மத்திய வங்கியானது இலங்கையில் புழக்கத்திலுள்ள ஆகக்குறைந்தது சிங்களம் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று நாளாந்தப் பத்திரிகைகளிலும் மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு முறையிலும் நிதி ஆண்டின் முடிவிலிருந்து நான்கு மாதங்களினுள் வைப்புக் காப்புறுதி நிதியத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை வெளியிடுதல் வேண்டும்.

உறுப்பு நிறுவனங்கள் வைப்புக் காப்புறுதி நிதியத்திற்கான கட்டுப்பணம் ஒன்றைச் செலுத்துதல்

**55.** (1) ஒவ்வொரு உறுப்பு நிறுவனமும் மத்திய வங்கியினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதத்தில், அத்தகைய நேரங்களில் மற்றும் அத்தகைய முறையில் அத்தகைய காலப்பகுதிகளுக்கு செல்லுபடியாகும் வைப்புகளின் மொத்த தொகை மீது கணக்கீடுசெய்யப்பட்ட கட்டுப்பணம் ஒன்றை வைப்புக் காப்புறுதி நிதியத்திற்கு செலுத்துதல் வேண்டும்.

(2) ஏதேனும் உறுப்பு நிறுவனம் (1) ஆம் உட்பிரிவின்கீழ் செலுத்த வேண்டிய கட்டுப்பணக் கொடுப்பனவுகளில் ஏதேனும் தவணை தவறும் பட்சத்தில் அத்தகைய உறுப்பு நிறுவனம் மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதத்தில் அத்தகைய தவணை தவறுகைக் காலப்பகுதிக்கான தண்டத்தை மத்திய வங்கிக்குச் செலுத்துவதற்கு ஆளாதலும் வேண்டும்.

(3) விதிவிலக்கான சூழ்நிலைகளில், மத்திய வங்கியானது, அதனால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் வைப்புக் காப்புறுதி நிதியத்திற்கு அத்தகைய மேலதிகக் கட்டுப்பணத்தை செலுத்துவதற்கு உறுப்பு நிறுவனங்களினை தேவைப்படுத்துவதற்கான அதிகாரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட மேலதிக கட்டுப்பணத்தை ஏதேனும் உறுப்பு நிறுவனம் செலுத்துவதற்கு தவறுகின்ற பட்சத்தில், மத்திய வங்கியானது விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையில் –

(அ) அத்தகைய நிறுவனத்தினால் விளங்கப்படுத்தப்பட்ட காரணங்களைக் கருத்திற் கொண்டு அத்தகைய மேலதிக கட்டுப்பணத்தைச் செலுத்துவதற்கு அத்தகைய உறுப்பு நிறுவனத்திற்கு மேலதிக நேரத்தை வழங்கலாம்; அல்லது

(ஆ) மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதத்தில் தவணை தவறவிடப்பட்ட கட்டுப் பணத்தின் மீது பிந்திய கொடுப்பனவுக் கட்டணம் ஒன்றை அத்தகைய உறுப்பு நிறுவனம் விதிக்கலாம்.

(5) உறுப்பு நிறுவனம் ஒன்று தவிர ஆளெவரும், அத்தகைய ஆள் திட்டத்தின் உறுப்பினர் ஒருவராக உள்ளார் என்றும் அதனது வைப்புப் பொறுப்புக்கள் இச்சட்டத்தின் கீழ் காப்புறுதி செய்யப்பட்டுள்ளது என்றும் பொதுமக்களிற்கு எடுத்துக்கூறுதல் ஆகாது.

(6) ஐந்தாம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனும் ஆள், தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டதன்மேல் பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பண மொன்றிற்கு அல்லது மூன்று ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதி ஒன்றிற்கான மறியற்றண்டனைக்கு அல்லது குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும் என்பதுடன் அத்தகைய மீறுகை தொடர்கின்ற ஒவ்வொரு நாளுக்கும் மேலதிகமாக ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றிற்கும் ஆளாதலும் வேண்டும்.

*உறுப்பு நிறுவனங்களின் பரிசோதனையும் மேற்பார்வையும்*

**56.** இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக, 4 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட திணைக்களத்தின் தலைவர் அல்லது மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் அலுவலர் ஏதேனும் உறுப்பு நிறுவனத்தின் செயற்பாடுகளை பரிசோதித்து மேற்பார்வை செய்வதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

வங்கிசாரா நிதி நிறுவனங்களுக்கு இச்சட்டத்தின் குறித்த சில ஏற்பாடுகளின் ஏற்புடமை

**57.** (1) மத்திய வங்கியானது காலத்துக்குக்காலம், கட்டளை ஒன்றின் மூலம் பின்வருவனவற்றுக்கு அவசியமாக இருக்கின்றதென மத்திய வங்கி திருப்திப்படுகின்றவிடத்து, உரிமம்பெற்ற வங்கிகளின் தீர்மானம் தொடர்பாக இச்சட்டத்தின் பாகம் I மற்றும் பாகம் II இன் ஏற்பாடுகள் (இதனகத்துப்பின்னர் "வங்கிசாரா நிதி நிறுவனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மத்திய வங்கியினால் உரிமம் அளிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட மற்றும் மேற்பார்வை செய்யப்பட்ட வங்கிசாரா நிதி நிறுவனங் களின் ஏதேனும் வகுப்பு அல்லது வகுதிக்கு ஏற்புடையதாதல் வேண்டும் என வெளிப்படுத்தலாம்.

(அ) பண மற்றும் நிதி முறைமையின் உறுதிப்பாட்டை மேம்படுத்தும்; அல்லது

(ஆ) வங்கிசாரா நிதி நிறுவனங்களின் அத்தகைய வகுப்பு அல்லது வகுதிமூலம் கொண்டுநடாத்தப்படும் தொழில் அல்லது செயற்பாடுகள் தொடர்பில் பொதுமக்கள் நலன்கள் கருதிப் பாதுகாத்தல்.

(2) மத்தியவங்கியினால் இப்பிரிவின்கீழ் கட்டளை ஒன்று ஆக்கப்படுகின்றவிடத்து, வங்கி மேற்பார்வை பணிப்பாளருக்கு இச்சட்டத்தில் ஆக்கப்பட்ட ஏதேனும் குறிப்பீடு தோதானவிடத்து, மத்திய வங்கியின் வங்கிசாரா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளருக்கு ஆக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் IV

## நிதித்துறை நெருக்கடி முகாமைத்துவக் குழு

நிதித்துறை நெருக்கடி முகாமைத்துவக் குழு

**58.** (1) பயனுறுதிவாய்ந்த முறையில் முகாமை செய்வதற்கும் இயற்கையில் முறையாக இருக்கின்றதான நிதி நெருக்கடிகள் தாக்கத்தைக் குறைப்பதற்குமான நோக்கத்திற்காக நிதித்துறை நெருக்கடி முகாமைத்துவக் குழு என அழைக்கப்படும் குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) நிதித் துறை நெருக்கடி முகாமைத்துவக் குழுவானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) மத்திய வங்கியின் ஆளுநர், அவர் நிதித்துறை நெருக்கடி முகாமைத்துவக் குழுவின் தவிசாளராக இருத்தல் வேண்டும்;

(ஆ) திறைசேரிச் செயலாளர்; அவர் நிதித்துறை நெருக்கடி முகாமைத்துவக் குழுவின் பிரதி தவிசாளராக இருத்தல் வேண்டும்;

(இ) நிதித்துறையில் நிபுணத்துவம் கொண்ட மத்திய வங்கியின் ஆளும் சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்;

(ஈ) நிதித்துறை முறைமைசார் உறுதிப்பாட்டுக்கு பொறுப்பாகவுள்ள மத்திய வங்கியின் பிரதி ஆளுநர்; அத்துடன்

(உ) பிஸ்கல் தொழிற்பாடுகளுக்குப் பொறுப்பாகவுள்ள திறைசேரிக்கான பிரதிச் செயலாளர்;

நிதித்துறை நெருக்கடி முகாமைத்துவக் குழுவின் கடமைகளும் பணிகளும்

**59.** (1) நிதித்துறை நெருக்கடி முகாமைத்துவக் குழுவானது நிதித்துறை நெருக்கடி முகாமைத்துவக் குழுவின் தொழிற்பாட்டு மயமாக்கல் நோக்கத்திற்கு பின்வருவற்றுக்கான நடவடிக்கை முறைகள் உட்பட நடவடிக்கைமுறைகளைத் தயாரித்து அங்கீகரித்தல் வேண்டும்-

(அ) நெருக்கடியான நேரங்களை அடையாளங் காணல்;

(ஆ) நெருக்கடி தயார்நிலை மற்றும் முகாமைத்துவம் பற்றிய நிதித்துறை நெருக்கடி முகாமைத்துவக் குழுவின் தத்துவங்களையும், கடமைகளையும் மற்றும் பணிகளையும் தீர்மானித்தல்;

(இ) 60 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட நிதித்துறை நெருக்கடி முகாமைத்துவம் பற்றிய தொழில்நுட்பக் குழுவிற்கான உறுப்பினர்களை நியமித்தல்;

(ஈ) நெருக்கடியான மற்றும் நெருக்கடியல்லாத நேரங்களின் போது நிதித்துறை நெருக்கடி முகாமை பற்றிய தொழில்நுட்பக்குழுவின் கடமைகள் மற்றும் பணிகளை தீர்மானித்தல்; அத்துடன்

(உ) செயலகத்தின் கடமைகளையும், பணிகளையும் தீர்மானித்தல்.

(2) நெருக்கடி இல்லாத நேரங்களின்போது, நிதித்துறை நெருக்கடி முகாமைத்துவக்குழுவானது நிதிசார் முறைமைக்கு நிலையற்ற தன்மையை விளைவிக்கக்கூடிய எதிர்கால நெருக்கடியின் ஆபத்தைத் தவிர்ப்பதற்கு, கட்டுப்படுத்துவதற்கு அல்லது முகாமை செய்வதற்கு அதன் நெருக்கடி முகாமைத்துவ தத்துவங்கள், நிபுணத் துவம் மற்றும் ஆயத்தநிலை, நெகிழ்வுத்தன்மையையும் பலப்படுத்து வதற்கான வளங்களையும், வலுப்படுத்தலையும் இலக்காகக் கொண்டு நடைபெற்றுக்கொண்டிருக்கும் அடிப்படையின் மீது முடிபுகளை எடுத்தல் அதற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(3) நெருக்கடியான நேரங்களின்போது, நிதித்துறை நெருக்கடி முகாமைத்துவக்குழு நிதிசார்துறையின் ஏனைய அதிகாரிகளுட னான கலந்தாலோசனையுடன், ஒட்டுமொத்த நெருக்கடி முகாமைத் துவ மூலோபாயத்தை அங்கீகரிப்பதும் ஒருங்கிணைத்தலும் அத்த கைய அதிகாரிகளின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் மற்றும் சுயாதீனம் என்பற்றுக்கும் பங்கமின்றி அத்தகைய நெருக்கடியை முகாமைத்துவம் செய்து கட்டுப்படுத்துவதற்கு முடிபுகளை எடுத்தல் சட்டமுறையானதாதல் வேண்டும்.

நிதித்துறை நெருக்கடி முகாமைத் துவம் பற்றிய தொழில் நுட்பக்குழு

**60.** (1) நெருக்கடியான மற்றும் நெருக்கடி அல்லாத நேரங்களில் தொழிற்படவேண்டியதான நிதித்துறை நெருக்கடி முகாமைத்துவக் குழுவிற்கு உதவுவதற்கு நிதித்துறை நெருக்கடி முகாமைத்துவம் பற்றிய தொழில்நுட்பக் குழு என அழைக்கப்படும் தொழில் நுட்பக்குழு ஒன்று இருத்தல் வேண்டும்.

(2) நிதித்துறை நெருக்கடி முகாமைத்துவம் பற்றிய தொழில் நுட்பக்குழு ஆனது மத்திய வங்கி மற்றும் அமைச்சரின் அமைச்சினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிதித்துறை நெருக்கடி முகாமைத்துவக்குழுவினால் நியமிக்கப்பட்ட அத்தகைய உறுப்பி னர்களின் எண்ணிக்கையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) ஐம்பத்தொன்பதாம் பிரிவின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, நிதித்துறை நெருக்கடி முகாமைத்துவம் பற்றிய தொழில்நுட்பக்குழு நிதி முறைமை உறுதிப்பாட்டிற்கு பொறுப்பாகவுள்ள மத்திய வங்கியின் பிரதி ஆளுநரினால் தலைமைதாங்கப்படுதல் வேண்டும்.

குழுக்களின் செயலகம்

**61.** மத்திய வங்கி நிதித்துறை நெருக்கடி முகாமைத்துவக் குழுவினதும், நிதித்துறை நெருக்கடி முகாமைத்துவம் பற்றிய தொழில் நுட்பக் குழுவினதும் செயலகமாகப் பணியாற்றுதல் வேண்டும்.

நிதித்துறை நெருக்கடி முகாமைத் துவக் குழுவின் கூட்டங்கள்

**62.** (1) நிதித்துறை நெருக்கடி முகாமைத்துவக் குழுவானது அவசியமானவாறு மற்றும் அவசியமானபோது, ஆனால் நெருக்கடியான நேரங்களில் அது தொழிற்படுகின்ற போது ஆகக்குறைந்தது மாதத்திற்கு ஒருதடவையாவது மற்றும் நெருக்கடி அல்லாத நேரங்களில் ஆகக்குறைந்தது காலாண்டுக்கு ஒருதடவையாவது கூட்டங்களை நடாத்துதல் வேண்டும்.

(2) நிதித்துறை நெருக்கடி முகாமைத்துவக் குழுவின் தவிசாளர் சூழ்நிலைகளையும் தேவைகளையும் கருத்திற்கொண்டு அதிவிசேட கூட்டங்களுக்கு அழைக்கலாம்.

(3) நிதிதுறை நெருக்கடி முகாமைத்துவக் குழுவின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்ட நடப்பெண், தவிசாளரின் அல்லது தவிசாளராக செயலாற்றும் ஆளின் முன்னிலையில் மற்றும் எஞ்சிய உறுப்பினர்களின் சாதாரண பெரும்பான்மை கொண்டு அமைத்துருவாக்கப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் கூட்டத்திற்கு தவிசாளர் சமூகமளிக்காத பட்சத்தில், பிரதித் தவிசாளர் அத்தகைய கூட்டங்களில் தலைமைதாங்குதல் வேண்டும். ஏதேனும் கூட்டத்திற்கு தவிசாளர் மற்றும் பிரதித் தவிசாளர் ஆகிய இருவரும் சமூகமளிக்காத பட்சத்தில், அத்தகைய கூட்டத்திற்கு சமூகமாயிருந்த உறுப்பினர்களிடையேயிருந்து அத்தகைய கூட்டத்திற்கு தலைமை தாங்குவதற்கென வேறு எவரேனும் உறுப்பினர் தேர்தெடுக்கப்படுதல் வேண்டும்.

**63**. நிதித்துறை நெருக்கடி முகாமைத்துவக்குழு மற்றும் நிதித்துறை நெருக்கடி முகாமைத்துவம் பற்றிய தொழில்நுட்பக்குழு ஆகியவற்றுக்கான தவிசாளர்கள் அவசியமானவாறு மற்றும் அவசியமானபோது சூழ்நிலைகள் மற்றும் தேவைகளைப் பொறுத்து இயைபான பிரச்சனைகளைக் கலந்துரையாடுவதற்கு அவதானிப் பாளர்களாக அத்தகைய குழுக்களின் கூட்டங்களுக்கு சமூகமளிப்ப தற்கு அத்தகைய குழுக்கள் தீர்மானிக்ககூடியவாறு பகிரங்க மற்றும் தனியார் துறைகளிலிருந்து அத்தகைய இயைபான அக்கறை கொண்டுள்ளோர்களை அழைக்கலாம்.

குழுக்களானவை பகிரங்க மற்றும் தனியார் துறையில் அக்கறை கொண்டுள்ளோரை கூட்டங்களுக்கு அழைக்கலாம்

**64**. நிதித்துறை நெருக்கடி முகாமைத்துவக் குழு மற்றும் நிதித்துறை நெருக்கடி முகாமைத்துவம் பற்றிய தொழிநுட்பக்குழு என்பவற்றின் ஒவ்வொரு உறுப்பினர் மற்றும் செயலகத்தின் அலுவலர்களும் வேறு ஊழியர்களும் அத்தகைய குழுக்களின் கடமைகளையும் பணி களையும் நிறைவேற்றுவதிலும் புரிவதிலும் அத்தகைய குழுக்களின் உறுப்பினர்களால் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் உள்ளடங்க லாக, அத்தகைய குழுக்களினால் பெறப்பட்டு சேகரிக்கப் பட்ட தகவல் தொடர்பாக கடுமையான இரகசியத் தன்மையை பேணுதல் வேண்டு மென்பதுடன் அந்தந்தக் குழுக்களின் செயற்பாடுகளின் நோக்கத் துக்காக மட்டுமே அவர்களைப் பயன்படுத்துதலும் வேண்டும்.

குழுக்கள் பற்றிய தகவலின் இரகசியத் தன்மை

## பாகம் V

### உரிமம் பெற்ற வங்கியை ஒடுக்குதல்

**65**. இச்சட்டத்தின் இப்பாகம் வேறுவகையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலன்றி, இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடு கள் மற்றும் வங்கித்தொழில்சட்டம், பணச்சட்டம், நிதித்தொழில் சட்டம், கம்பெனிகள் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகள் அல்லது அப்போதைக்கு வலுவிலுள்ள கம்பெனிகளின் கடனிறுக்கவகையற்ற தன்மை தொடர்பாக வேறு ஏதேனும் எழுத்திலான சட்டம் என்ப வற்றிற்கிடையே ஏதேனும் முரண்பாடு அல்லது ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில், இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகள் வேறு ஏதேனும் சட்டத்தைவிட மேலோங்குதல்

**66**. *(1)* உரிமம்பெற்ற வங்கியொன்று பின்வரும் சூழ்நிலைகளின் ஏதேனும் ஒன்றில் மத்திய வங்கியினால் ஒடுக்கப்படலாம்:-

உரிமம் பெற்ற வங்கியொன்றை ஒடுக்குதல்

(அ) மத்திய வங்கி இச்சட்டத்தின் பாகம் II இல் குறிப்பீடு செய்யப்படும் தீர்மானிப்பு வழிமுறைகள் பிரிவு 8 இல் தரப்பட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குறிக்கோள்களை எய்துவதற்கு சாத்தியமில்லாதாவை எனத் திருப்திப்படுகின்றவிடத்து;

(ஆ) நிருவாகி 21 ஆம் பிரிவின்கீழ் உரிமம் பெற்ற வங்கி ஒடுக்கப்பட வேண்டுமென விதந்துரைத்தல்;

(இ) இச்சட்டத்தின் பாகம் II இன் ஏற்பாடுகளின்கீழ் இணைப்பு வங்கியொன்று உள்ளடங்கலாக, உரிமம் பெற்ற வங்கியின் சொத்துக்களும் பொறுப்புக்களும் கைமாற்றம் பெறுநருக்கு பகுதியளவில் கைமாற்றப் பட்டுள்ளவிடத்து; அல்லது

(ஈ) மத்திய வங்கி தீர்மானிக்கும் செயல்முறையில், வெற்றி கரமான தீர்மானிப்பின் விளைவு இச்சட்டத்தின் பாகம் II இன் ஏற்பாடுகளின்கீழ் சாத்தியமில்லையென முடிவுசெய்கின்றவிடத்து.

(2) மத்திய வங்கி உரிமம்பெற்ற வங்கியானது (1) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் ஏதுக்கள் காரணமாக ஒடுக்கப் படுமிடத்து, மத்திய வங்கி அத்தகைய உரிமம் பெற்ற வங்கிக்கு கேட்கப்படுவதற்கான சந்தர்ப்பமொன்றை அளித்தல் வேண்டு மென்பதுடன் அத்தகைய உரிமம்பெற்ற வங்கிக்கு வழங்கப்பட்ட உரிமத்தை இல்லாதாக்குவதற்கு நடவடிக்கைளை எடுத்தல் வேண்டும். அத்துடன் இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளுக் கிணங்க அதன் ஒடுக்குதலுக்கான நடவடிக்கைகளை தொடங்கு தலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் மத்திய வங்கியினால் உரிமத்தை இல்லாதாக்குவதன் மேல், உரிமம்பெற்ற வங்கி இலங்கையினுள்ளும் இலங்கைக்கு வெளியேயும் அதன் தொழிலை கொண்டு நடாத்துவதனை உடனடியாக இல்லாதொழிதலும் வேண்டும்.

ஒடுக்குதல் கட்டளை ஒன்றிற்காக நீதிமன்றத்திற்கு விண்ணப்பத்தை செய்தல்

**67**. (1) உரிமம்பெற்ற வங்கி ஒன்றிற்கு வழங்கப்பட்ட உரிமமானது 66 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் மத்திய வங்கியினால் இல்லாதாக்கப் படுகின்றவிடத்து, 4 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட திணைக்களத் தலைவர் உரிமம்பெற்ற வங்கி ஒன்றிற்கு எதிராக ஒடுக்குதல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் ஒன்றைச் செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் ஒன்றைச் செய்தல் ஆனது இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செய்யப்பட்ட மனு என்றவகையாக இருத்தல் வேண்டும். அத்தகைய மனு ஒடுக்குதலுக்கான ஏதுக்களை எண்பிப்பதற்கான ஆவணச் சான்று மூலம் ஆதாரப்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) நீதிமன்றம் (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்டவாறான விண்ணப்பத்தை கவனத்துட்கொண்டதன் பின்னர், (2) ஆம் உட்பிரிவின்கீழ் கோப்பிடப்பட்ட ஒடுக்குதல் தேதியிலிருந்து இரண்டு மாதங்களை விஞ்சாது ஒடுக்குதல் மனுவை ஆதாரப்படுத்துவதற்கு தேதியை நிர்ணயித்தல் வேண்டும்.

(4) நான்காம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட திணைக்களத் தலைவர், ஒடுக்குதலுக்கமைந்ததாகவுள்ள உரிமம்பெற்ற வங்கியின் கடன் கொடுநர்களை அல்லது வேறெவரேனும் அக்கறை கொண்டுள்ள திறத்தவரை, வர்த்தமானியில் வெளியிடப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் அத்தகைய காலப்பகுதியினுள்ளளும், (இச்சட்டத்தில் “இடையீடு செய்கின்ற திறத்தவர்கள்” என குறிப்பீடு செய்யப்படும்) திறத்தவர்களாக (1) ஆம் உட்பிரிவின்கீழ் கோப்பிடப்பட்ட ஒடுக்குதல் விண்ணப்பத்தினுள் அவர்கள் இடையீடுசெய்கின்றனராவென அவருக்கு அறிவிக்கும்படி, தேவைப்படுத்தி, ஆதரிப்பதற்கான தேதியை நிர்ணயிப்பதற்கு அழைக்கப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு வேலை நாட்களைக் கொண்ட காலப்பகுதியினுள் (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஒடுக்குதல் மனுவை ஆதரிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட தேதியை வர்த்தமானியில் வெளியிடுதல் வேண்டும். இடையீடு செய்கின்ற திறத்தவர்களுக்கு

கொடுக்கப்பட்ட அறிவித்தற் காலப் பகுதி அத்தகைய வர்த்தமானித் தேதியிலிருந்து பதினான்கு நாட்களை விஞ்சுதலாகாது. இப்பிரிவின் கீழ் அறிவிக்கப்பட்ட இடையீடுசெய்கின்ற திறத்தவர்களின் விபரங்கள் ஒடுக்குதல் மனுவை ஆதரிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட தேதியன்று நீதிமன்றத் துக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(5) நான்காம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஆளெவரும், அத்தகைய மனு ஆதாரப்படுத்தப்பட்ட தேதிக்கு முன்னர் ஒடுக்குதல் நடவடிக்கைமுறைகளில் இடையீடு செய்தலாகாது.

(6) நீதிமன்றம் ஓராம் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்ட விண்ணப்பத்தை மற்றும் இடையீடுகின்ற திறத்தவர்களின் சமர்ப்பணங்களைக் கவனத்துட்கொண்ட பின்னர் (இச்சட்டத்தில் “ஒடுக்குதற் கட்டளை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய உரிமம்பெற்ற வங்கிக்கெதிராக ஒடுக்குதல் நடவடிக்கைகளை தொடங்குவதற்கான கட்டளையை ஆக்கலாம்.

(7) ஒடுக்குதல் கட்டளையானது அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுக்கு வருதல் வேண் டும்.

(8) நீதிமன்றம், உரிமம்பெற்ற வங்கி வங்கிமுறிந்தவர் அல்ல என (4) ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட திணைக்களத் தலைவர் மற்றும் இடையீட்டு திறத்தவர்களின் சமர்ப்பணங்களை கவனத்துட்கொண்ட தன் பின்னர், அபிப்பிராயப்படின், அது பொது நலனில் அல்லது வைப்பாளர்களின் நலனில் அல்லது உரிமம்பெற்ற வங்கியின் ஏனைய கடன்கொடுத்தோர்களின் நலன்களில் நீதிமன்றம் அவசியமெனக் கருதக்கூடியவாறான ஒன்றில் நிபந்தனையின்றி அல்லது அத்தகைய நிபந்தனைகளுக்கமைய உரிமம் பெற்ற வங்கியை தொழிலை ஆரம்பிப்பதற்கு அனுமதிக் கின்ற கட்டளையை ஆக்கலாம்.

(9) ஒடுக்குதல் கட்டளை வலுவிற்கு வருவதன் மேல், உரிமம்பெற்ற வங்கியின் புத்தகங்கள் அல்லது பதிவேடுகளில் பதியப்பட்ட எவரேனும் வைப்பாளர், கடன்கொடுநர், அல்லது எவரேனும் ஒப்பந்தம் செய்யும் எதிர்த்திறத்தவர், அவர்களின் உரிமைகளையும்

உரித்துக்களையும் மற்றும் அக்கறைகளையும் அணுகுவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு அவர்களுக்குள்ள உரிமை உடனடியாக இடைநிறுத்தப்படுதல் வேண்டும்.

(10) இச்சட்டத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக ஒடுக்குதலுக்கு உட்பட்டதான உரிமம்பெற்ற வங்கி ஒன்றின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் பெறுமதி ஏற்புடையற்பாலதான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(11) இப்பிரிவின்கீழ் நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றும், உயர்நீதிமன்றத்துக்கான மேன்முறையீட்டுக்கு அமைந்ததாதல் வேண்டுமென்பதுடன் மேன்முறையீடு தொடர்பில் 1996 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, மேல்மாகாணசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய மேன்முறையீட்டுக்கும் அது தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடைமையாதல் வேண்டும்.

ஒழிப்போன் ஒருவரை நியமித்தல்

**68.** (1) ஒடுக்குதல் கட்டளையைப் பின்பற்றி, நீதிமன்றம் உரிமம்பெற்ற வங்கியின் தொழிற்பாடுகளை ஒடுக்கும் நோக்கங்களுக்காக அதன்சார்பாக செயலாற்றுவதற்கு மத்தியவங்கியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆளொருவரை ஒழிப்போனாக நியமித்தல் வேண்டும்.

(2) மத்திய வங்கியானது (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஒழிப்போனின் நியமனத்தை உடனடுத்துப்பின்னர், உரிமம்பெற்ற வங்கிக்கு ஒடுக்குதல் கட்டளை பற்றிய அறிவித்தலையும், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஒழிப்போனின் நியமனத்தையும் வழங்குதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய அறிவித்தலை வர்த்தமானியிலும் இலங்கையில் புழக்கத்திலுள்ள ஆகக்குறைந்தது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலுள்ள நாளந்த செய்தித்தாள்களிலும் வெளியிடுதலும் வேண்டும்.

ஒழிப்போனின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள்

**69.** (1) பிரிவு 68 இன் கீழ் நியமிக்கப்பட்ட ஒழிப்போன், ஒடுக்குதலுக்கமைவாக உரிமம் பெற்ற வங்கியின் ஒரே சட்டப் பிரதிநிதியாக இருத்தல் வேண்டும் என்பதுடன் உரிமம் பெற்ற வங்கியை முகாமை செய்வதற்கு, கட்டுப்படுத்துவதற்கு, தொழிற் படுத்துவதற்கு மற்றும் ஒடுக்குவதற்கு அவசியமான அல்லது உசிதமான எல்லாத் தத்துவங்களும் உட்பட அத்தகைய உரிமம் பெற்றவங்கியின் பங்குதாரர்கள், பணிப்பாளர்கள் சபை, முக்கிய மான முகாமைத்துவ ஆளணியினர் மற்றும் அத்தகைய வேறு அலு வலர்கள் ஆகியோரின் எல்லா உரிமைகளையும் தத்துவங்களையும் தொடருதலும் வேண்டும்:

ஆயின் எவ்வாறாயினும், மத்திய வங்கியின் ஒருப்பாட்டுடன் இன்னொரு உரிமம் பெற்ற வங்கியில் ஒடுக்குதலுக்கு அமைய உரிமம் பெற்ற வங்கியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அனைத்தையும் அல்லது அதன் ஒரு பகுதியை உரித்தாக்குவதற்கு ஒழிப்போன் நீதிமன்றத்தைக் கோரலாம்.

(2) ஒழிப்போன் நீதிமன்றத்தினதும் மத்திய வங்கியினதும் பணிப்பு மற்றும் மேற்பார்வையின் கீழான ஒடுக்குதல் தொடர்பாக தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகித்தலும், புரிதலும் மற்றும் நிறைவேற்றுதலும் வேண்டும்:

ஆயினும், எவ்வாறாயினும் மத்தியவங்கி ஒழிப்போனுக்கு வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்பு ஒடுக்குதல் செயல்முறையின் போது, நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட பணிப்புகள், கட்டளைகள், தீர்ப்புகள் மற்றும் அறிவுறுத்தல்கள் என்பவற்றை மீறவில்லை என உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(3) ஒழிப்போன் மத்திய வங்கியின் பணிப்பு மற்றும் மேற்பார்வைக்கு அமைய ஒடுக்குதலுக்கு உட்பட்ட உரிமம் பெற்ற வங்கியின் அலுவலகங்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய தகவல்கள் மற்றும் சொத்துக்களை பொறுப்பெடுத்தல் வேண்டும்.

(4) ஒரு ஒழிப்போன், உரிமம் பெற்ற வங்கியின் ஒடுக்குதல் தொடர்பாக தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிக்கும், புரியும் மற்றும் நிறைவேற்றும் நோக்கத்திற்காக, சுயாதீன சட்டத்தரணிகள், கணக்காளர்கள், கணக்காய்வாளர்கள், ஆலோசகர்கள், மதிப்பீட்டாளர்கள் அல்லது அத்தகைய வேறு ஆட்களுடன் எழுத்தில் உடன்படக்கூடியவாறு அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மீது அத்தகைய ஆட்களின் சேவைகளைப் பெறலாம்.

(5) ஒழிப்போன், இச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழ் அவரது தனிப்பட்ட பொறுப்புகள் தொடர்பில் ஒடுக்குதலுக்கமைய உரிமம் பெற்ற வங்கியின் ஆதனத்தில் இருந்தான நட்டோத்தரவாதத்திற்கு உரித் துடையவராதல் வேண்டும்.

ஒழிப்போனின் ஊதியம்

**70.** (1) ஒடுக்குதலுக்கு அமைய அல்லது நீதிமன்றம் வேறு வகையில் குறித்துரைக்கக்கூடிவாறு உரிமம்பெற்ற வங்கியின் சொத்துக்களின் பெறுமதியின் நூற்றுவீதமாக நீதிமன்றத்தால் குறித்துரைக்கப்படக்கூடியவாறு அத்தகைய ஊதியம் ஒழிப் போனுக்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நீதிமன்றத்தினால் குறித்துரைக்கப்பட்ட ஊதியமும் மற்றும் உரிமம் பெற்ற வங்கியின் ஒடுக்குதல் செயல்முறையில் ஒழிப்போனால் உறப்பட்ட அத்தகைய நியாயமான மற்றும் இடைநேர்விளைவான செலவுகளும் அத்தகைய உரிமம் பெற்ற வங்கியின் ஏலவேயுள்ள சொத்துக்களிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

ஒழிப்போனை அகற்றுதல்

**71.** (1) நீதிமன்றமானது பின்வருமாறு ஒழிப்போன் உள்ள விடத்து -

(அ) ஒழிப்போன் இறந்துள்ளவிடத்து அல்லது ஒழிப் போனாக செயலற்றுவதற்கு இயலாமையிலுள்ளவிடத்து;

(ஆ) பதவிவிலகல் கடிதத்தை சமர்பித்துள்ளவிடத்து;

(இ) மத்தியவங்கியின் அபிப்பிராயப்படி, அத்தகைய ஒழிப்போன் ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு அல்லது இச்சட்டத்தின் இப்பாகத்தின் கீழ் அத்தகைய ஒழிப்போன் மீது விதிக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுடன் இணங்கியொழுகுவதற்கு தவறியுள்ளவிடத்து; அல்லது

(ஈ) வேறு ஏதேனும் முறையில் அத் தகைமையில் சேவை யாற்றுவதற்கு தகுதியற்றவராகுமிடத்து,

4 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட திணைக்களத் தலைவரினால் அவர்சார்பில் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மேல் ஒழிப்போனை அகற்றுதல் வேண்டும்.

(2) நீதிமன்றமானது (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் ஒழிப்போனை அகற்றுவதன்மேல் மத்திய வங்கியினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வேறொரு ஆளை நியமித்தல் வேண்டும்.

(3) மத்திய வங்கியானது (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஒழிப்போனின் நியமனத்தை உடனடுத்து உரிமம்பெற்ற வங்கிக்கான புதிய ஒழிப்போனின் நியமனம் பற்றிய அறிவித்தலை கொடுத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய அறிவித்தலை வர்த்தமானியிலும் இலங்கையில் புழக்கத்திலுள்ள ஆகக்குறைந்தது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில ஆகிய மூன்று மொழிகளில் நாளந்த செய்தித்தாள்களிலும் வெளியிடுதலும் வேண்டும்.

(4) அறுபத்தொன்பதாம் மற்றும் 70 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் (2) ஆம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஒழிப்போனுக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

ஒழிப்போன் ஒடுக்குதல் திட்டம் ஒன்றைத் தயாரித்தல்

**72.** (1) பிரிவு 67 இன் கீழ் ஆக்கப்பட்ட ஒடுக்குதல் கட்டளைத் தேதியிலிருந்து மூன்று மாதங்கள் காலப்பகுதி ஒன்றினுள், ஒழிப்போன் ஆனவர் ஒடுக்குதலுக்கு அமைய உரிமம் பெற்ற வங்கிக்கு விபரமான ஒடுக்குதல் திட்டம் ஒன்றைத் தயாரித்து அதனது அங்கீகாரத்துக்காக மத்திய வங்கிக்கு சமர்ப்பித்தலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒடுக்குதல் திட்டமானது பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்-

(அ) உரிமம் பெற்ற வங்கியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களைக் காட்டுகின்ற நடைமுறையிலுள்ள படிவமுறை நிதிநிலைமைக் கூற்றையும்;

(ஆ) உரிமம் பெற்ற வங்கியின் முற்போந்த இரண்டு ஆண்டு காலப்பகுதியின் வருமானம் மற்றும் செலவினம் பற்றிய காலாண்டுக் கூற்றுக்களையும் மற்றும் அதன் அடுத்துறும் இரண்டு ஆண்டு காலப்பகுதிக்கான எதிர்பார்க்கப்பட்ட வருமானம் மற்றும் செலவினத்தையும்;

(இ) உரிமம் பெற்ற வங்கியின் பாரிய சொத்துக்களினதும் அல்லது சொத்துக்களின் தொகுதிகளினதும் விற்பனை மற்றும் விற்பனைக்கான திட்டங்கள் பற்றிய முன்னேற்ற அறிக்கை ஒன்றையும்;

(ஈ) மோசடியான உறுதிவரைதலை இல்லாதாக்குதல் அல்லது அதன் செல்லுபடியற்ற தன்மையை வெளிப்படுத்துதல் அத்துடன் அவற்றினால் செய்யப்பட்ட கைமாற்றுதல்கள் மற்றும் உருவாக்கப்பட்ட உரிமைகள் உட்பட உரிமம்பெற்ற வங்கியின் உரிமைக் கோரிக்கைகளின் நீதிமுறையான அல்லது நீதிமுறைக்கு புறம்பான பின்தொடர்பை பற்றிய அறிக்கை ஒன்றையும்;

(உ) உரிமம் பெற்ற வங்கியின் பணிப்பாளர்கள் அல்லது அலுவலர்களின் தவறுகள் மற்றும் வேறு சட்டவிரோத செயற்பாடுகள் பற்றியதும் அத்துடன் அத்தகைய பணிப்பாளர்கள் மற்றும் அலுவலர்களிடமிருந்தான உரிமம்பெற்ற வங்கிக்கான நட்டஈட்டைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை பற்றிய அறிக்கை ஒன்றையும்;

(ஊ) உரிமம் பெற்ற வங்கியின் ஊழியர்களுக்கான நிதி ஏற்பாடுகளின் விபரமான பகுப்பாய்வு ஒன்று உட்பட அதனது காப்புறுதி, தொழில் மற்றும் சேவை ஒப்பந்தங்கள் போன்ற நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒப்பந்தங்களை தொடருதல் அல்லது முடிவுறுத்தல் பற்றிய அறிக்கை ஒன்றையும்;

(எ) உரிமம்பெற்ற வங்கியின் பொறுப்புகள் பற்றிய அறிக்கை ஒன்றையும் மற்றும் அடுத்துறும் மூன்று மாத காலப்பகுதியின் போது உரிமம் பெற்ற வங்கியின் கடன்கொடுநர்களுக்கான எதிர்பார்க்கப்பட்ட கொடுப்பனவுகளின் அட்டவணை ஒன்றையும்;

(ஏ) முறையே முற்போந்த மற்றும் அடுத்துறும் இரண்டு ஆண்டு காலப்பகுதிக்கான கடந்தகால உண்மைச் செலவையும் மற்றும் எதிர்கால மதிப்பீடுசெய்யப்பட்ட செலவையும் மற்றும் ஒடுக்குதல் செலவுகள் பற்றியதுமான அறிக்கை ஒன்றையும்.

(3) மத்திய வங்கியானது, (1) ஆம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட ஒடுக்குதல் திட்டத்தின் உள்ளடக்கத்துடன் திருப்திப்படின், அத்தகைய திட்டத்தை அங்கீகரிக்கலாம் என்பதுடன் அத்தகைய அங்கீகாரத்தை எழுத்தில் ஒழிப்போனுக்கு அறிவிக்கலாம்.

(4) ஒடுக்குதல் திட்டம் (3) ஆம் உட்பிரிவின் கீழ் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர், ஒழிப்போன் அத்தகைய ஒடுக்குதல் திட்டத்தை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட அங்கீகாரத்துடன் சேர்த்து அங்கீகாரத்துக்கென நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(5) ஒழிப்போன், ஒடுக்குதல் திட்டத்திற்காக நீதிமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் வாரத்திற்கு ஒருமுறை தொடர்ச்சியாக மூன்று வாரங்களுக்கு இலங்கையில் புழக்கத்திலுள்ள மூன்று சிங்கள், தமிழ் மற்றும் ஆங்கில நாளாந்த பத்திரிகைகளில் ஒரு அறிவிப்பை வெளியிடுதல் வேண்டும்; இது

79 ஆம் பிரிவின்கீழ் அவர்களது உரிமைக் கோரிக்கைகளை பதிவுசெய்த ஒடுக்குதலுக்கு உட்பட்ட உரிமம் பெற்ற வங்கியின் உரிமைக் கோரிக்கைகளைப் பரிசோதனைக்காக, ஒடுக்குதல் திட்டம் மற்றும் அத்தகைய திட்டத்தின் பெறப்படுதல் எந்த தேதியில் எந்த இடத்தில் கிடைக்கக் கூடியதாக இருக்கும் என்னும் தகவலைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(6) நீதிமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒடுக்குதல் திட்டம் ஒழிப்போனால் காலாண்டுக்கு ஒருமுறை நாளாது வரையாக்கப் படுதல் வேண்டும்.

(7) ஒழிப்போன் ஒடுக்குதல் திட்டத்தினால் நடைமுறைப்படுத்து வதில் செலவு - நன்மை பகுப்பாய்வு உள்ளடங்கலாக முறையான புத்தகங்களையும் பதிவேடுகளையும் பேணுதல் வேண்டும் என்பதுடன் 4 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட திணைக்களத் தலைவரினது அல்லது மத்திய வங்கியினால் அதன் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினதும் சோத்தனைக் காக அதையே சமர்ப்பித்தல் வேண்டும்.

உரிமம்பெற்ற வங்கிக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பான தடை ஒடுக்குதலுக்கு உட்பட்டது

**73.** (1) உரிமம் பெற்ற வங்கி ஒன்றின் மீதான ஒடுக்குதல் நடவடிக்கைகள் ஒடுக்குதல் கட்டளை ஒன்றினைப் பின்பற்றி தொடங்கப்படுகின்றவிடத்து, அத்தகைய உரிமம்பெற்ற வங்கிக்கு எதிரான ஏதேனும் நீதிமன்ற நடவடிக்கை தொடங்கப்படுதலாகாது என்பதுடன் அத்தகைய உரிமம் பெற்ற வங்கிக்கு எதிரான முடிவுறாதுள்ள எல்லா நீதிமன்ற நடவடிக்கைகளும் நீதிமன்றத்தின் விடுமுறையுடன் நீதிமன்றம் விதிக்கக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு அமையவும் உடனடியாக நிறுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஒடுக்குதல் கட்டளையினைப் பின்பற்றி, உரிமம்பெற்ற வங்கியின் பாதுகாக்கப்பட்ட கடன்கொடுநர்கள் அல்லதாக எவரே னும் கடன்கொடுநர், உரிமம் பெற்ற வங்கி ஒடுக்குதலுக்கு அமைய அல்லது அதன் சொத்துக்கள் மீதான மட்டுப்பாடுகளை விதிப்பது தவிர உரிமம் பெற்றவங்கிக்கு எதிராக ஏதேனும் அவருடைய ஏதேனும் தனிப்பட்ட உரிமை, உரித்து அல்லது அக்கறையை நிறைவேற்றுவதற்கான உரிமைகளைக் கொண்டிருத்தலாகாது.

(3) ஒடுக்குதல் கட்டளை பயனுக்கு வரும் தேதியின் பின்னரான ஒடுக்குதலுக்கு அமைய உரிமம் பெற்ற வங்கியின் சொத்துக்கள் மீது இடப்பட்ட எல்லா பற்றுக்களும் அத்துடன் புரியப்பட்ட நிறைவேற்றச் செயல் நிறைவேற்றங்களும் ஈடொன்றினால் அல்லது சோந்தை யினால் வில்லங்கத்திற்கு உட்பட்ட சொத்துக்களின் தேறிப்பெறுகை தவிர, அத்தகைய சொத்துக்களினால் பிணைப் பொறுப்பளிக் கப்பட்ட தனிசுகளின் அளவிற்கு வறிதானதாதல் வேண்டும்.

(4) ஏதேனும் வட்டி அல்லது வேறு கட்டணம் ஒடுக்குதல் கட்டளை பயனுறும் தேதியன்று அல்லது அதன் பின்னர் உரிமம் பெற்ற வங்கியின் பொறுப்புகள் மீது அட்டுறுவாதல் ஆகாது.

ஒழிப்போன் குறித்தசில செயல்களை வெற்றாக்குவ தற்கான கட்டளை யொன்றுக்கு நீதிமன்றத்துக்கு விண்ணப்பித்தல்

**74.** (1) ஒழிப்போன், மத்திய வங்கியுடனான கலந்தாலோசனை யுடனும் ஒடுக்குதலுக்கு அமைந்த உரிமம்பெற்ற வங்கிக்கு அறிவித்தல் கொடுத்த பின்னரும், ஒடுக்குதல் கட்டளை பயனுறும் தேதிக்கு முன்னர் தொண்ணூறு நாட்காலப்பகுதியினுள் நிறைவேற் றப்பட்டுள்ளதான அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் ஏதேனும் செயல் உட்பட ஆனால், வரையறுக்கப்படாத ஏதேனும் செயல் வெற்றானதும் வறிதானதுமென வெளிப்படுத்தப்படுதல் வேண்டும் என வேண்டி, நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

(2) நீதிமன்றம் ஓராம் உட்பிரிவின் கீழான விண்ணப்பமொன்று கிடைக்கப்பெற்றதன்மேல் மற்றும் அத்தகைய விண்ணப்பத்தில் பெயரிடப்பட்ட திறத்தவர்களின் விசாரிப்பதன்மீது அத்தகைய உரிமம் பெற்ற வங்கியின் வைப்பாளர்கள் அல்லது ஏனைய கடன் கொடுநர்களின் நலன்களுக்கு சேதமேற்படும் சாத்தியமுள்ள அத்தகைய செயலை நிறைவேற்றும் நேரத்தில் அறிவைக் கொண்டுள்ளார் அல்லது அறிவைக் கொண்டுள்ளார்கள் என திருப்திப்படின், ஒடுக்குதல் கட்டளை பயனுக்குவரும் தேதிக்கு முன்னரான தொண்ணூறு நாட் காலப்பகுதியினுள் நிறைவேற்றப் பட்ட ஒடுக்குதலுக்கு அமைய உரிமம் பெற்ற வங்கியின் ஏதேனும்

கொடுக்கல் வாங்கலுக்கு மட்டுப்படுத்தப்படாதவை உட்பட ஏதேனும் செயல் வெற்றானதும் வெறிதானதுமாகும் என வெளிப்படுத்தப் படுகின்றது.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிவு ஆனது, அத்தகைய செயல் பின்வருவனவற்றைக் கொண்டிருக்கும் போதெல்லாம் ஊகிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) பிரதிபயன் இன்றி எவரேனும் ஆளுக்கான கொடை அல்லது வேறு கைமாற்றுதல்;

(ஆ) பின்வருவன பற்றி மத்திய வங்கியின் கருத்துக்களைக் கவனத்துட்கொண்டு, உரிமம்பெற்ற வங்கி, பங்குதாரர், பணிப்பாளர், நிருவாகியொருவர், முக்கியமான முகாமைத்துவ ஆளணியினர் ஒருவர் அல்லது ஊழியர் ஒருவர் நீதிமன்றத்தின் திருப்திக்கு எண்பித்தாலொழிய, அத்தகைய உரிமம் பெற்ற வங்கியின், பங்குதாரர் ஒருவரின், பணிப் பாளரின், நிருவாகியின் முக்கியமான முகாமைத்துவ ஆளணியினர் ஒருவரின் அல்லது ஊழியர் ஒருவரின் பணக்கொடுப்பனவு அல்லது சொத்துக்களின் அல்லது உரிமம்பெற்ற வங்கியின் வேறு ஏதேனும் அக்கறையின் கைமாற்றம்;

(i) நல்லெண்ணத்துடனான எதிர்த்தரப்பினர் ஒருவராக உரிமம்பெற்ற வங்கியின் பணக் கொடுப்பனவில் அல்லது சொத்துக்களின் அல்லது அக்கறைகளின் கைமாற்றத்தில் அத்தகைய ஆள் ஈடுபட்டுள்ளார்;

(ii) விடயத்திற்கேற்ப, உரிமம் பெற்ற வங்கியின் பணக்கொடுப்பனவு அல்லது சொத்துக்களின் அல்லது அக்கறைகளின் கைமாற்றம் அது தொடர்பில் உரிமம் பெற்ற வங்கியினால் செய்யப்பட்ட முறையீடுகளை அடிப்படையாகக்

கொண்டு நேர்மையாக இருக்கின்றதென நம்புவதற்கு நியாயமான ஏதுக்களை அத்தகைய ஆள் கொண்டுள்ளார்; அத்துடன்

(iii) உரிமம் பெற்ற வங்கியின் பணக்கொடுப்பனவு அல்லது சொத்துக்களின் அல்லது அக்கறையின் கைமாற்றம் அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் வைப்பாளர்களின் மற்றும் கடன் கொடுநர்களின் அக்கறைகளை சேதப்படுத்தி இருக்ககூடும் என அத்தகைய ஆள் அறிந்திருக்கவில்லை;

(இ) உரிய தேதிக்கு முன்னர் செய்யப்பட்ட கொடுப்பனவு ஒன்று அல்லது கைமாற்றம் அல்லது எந்தத் தேதியன்று தனிசு செலுத்தப்படற்பாலதாக வருகின்றதோ அந்தத் தேதிக்கு முன்னர் அத்தகைய தனிசு ஒன்றுக்கான இணையுறு கைமாற்றம்;

(ஈ) ஒப்பந்தத்துக்கான வேறு திறத்தவர் அல்லது திறத்தவர்கள் மீது விதிக்கப்பட்ட கடப்பாடுகள் தவிர, முக்கியமான மிகவும் பொறுப்புவாய்ந்ததான உரிமம் பெற்ற வங்கி மீது கடப்பாடுகளை விதிக்கின்ற ஒப்பந்தம் ஒன்றை முடிவுக்கு கொண்டு வருதல் அல்லது நிறைவேற்றுதல்;

(உ) ஒடுக்குதல் கட்டளை வழங்கப்படுவதன் முன்னர் உரிமம் பெற்ற வங்கியின் எதிரீட்டு உரிமைகள் மற்றும் கடப்பாடுகளை அனுமதிக்கின்ற நிதி ஒப்பந்தம் தவிர்ந்த, உரிமம் பெற்ற வங்கி மற்றும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வேறு ஆட்களுக்கு இடையேயான ஒழுங்கேற்பாடு;

(ஊ) வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் உரிமம் ஒன்று இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட எந்த வங்கிக்கு உரிமம் ஒன்று வழங்கப்பட்டுள்ளதோ மற்றும் எந்த வங்கியினால் தலைமை அலுவலகம், அதனது

கிளைகள் மற்றும் துணைநிலை வங்கியின் இலங்கைக்கு வெளியே தாபிக்கப்பட்டுள்ளதோ அந்த வங்கி ஒன்றிற்கு இடையே வங்கிகளுக்கு இடையேயான கைமாற்றல்;

(எ) உரிமம் பெற்ற வங்கி மற்றும் அதனோடு தொடர்புபட்ட திறத்தவர்களுக்கு இடையேயான கைமாற்றம் ஒன்று;

**75.** ஒழிப்போன், செயல்முறைக்கு உகந்தவரை பின்வருவன வற்றிற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும் - நம்பகப் பணிகளை முடிவுறுத்தல்

(அ) நம்பகத்தன்மை ஒன்றில் உரிமம் பெற்ற வங்கியினால் நிறைவேற்றப்பட்ட எல்லாப் பணிகளையும் இல்லா தொழித்தலும் மற்றும் முடிவுறுத்தலும்;

(ஆ) நம்பகத் தன்மையில் அல்லது ஒப்படைவின் கீழ் அல்லது காப்பு வைப்பு பெட்டி ஒன்றின் பிணை எடுப்பவர் என்ற வகையாக உரிமம்பெற்ற வங்கியினால் வைத்திருக் கப்பட்ட எல்லா நிதிகளையும் மற்றும் வேறு ஆதனத் தையும் விடயத்திற்கேற்ப அத்தகைய நிதிகளின் அல்லது ஆதனத்தின் சொத்தாண்மைக்கு சட்டரீதியாக உரித்து டையதான ஆட்களிற்கு அல்லது அவர்களின் சட்ட மரபுரிமை யாளர்களுக்கு அல்லது பிரதிநிதிகளுக்கு திருப்பிக் கொடுத்தல்; அத்துடன்

(இ) உரிமம் பெற்ற வங்கியின் நம்பகக் கணக்குகளை கொடுத்துத் தீர்த்தல் வேண்டும்.

**76.** (1) ஒடுக்குதல் கட்டளைத் தேதியிலிருந்து ஆறு மாத காலப் பகுதி ஒன்றினுள் ஒழிப்போன் தொண்ணூறு நாட்களுக்கு முன்ன ரான எழுத்திலான அறிவித்தலின் வழங்குகைக்கு அமையவும் அத்துடன் நீதிமன்றத்தின் அங்கீகாரத்துக்கு அமையவும் பின்வரு வனவற்றை முடிவுறுத்தலாம் - ஏலவேயுள்ள ஒப்பந்தங்களை முடிவுறுத்தல்

(அ) உரிமம்பெற்ற வங்கியுடன் செய்து கொள்ளப்பட்ட ஏதேனும் தொழில் ஒப்பந்தம்;

(ஆ) எந்த சேவைகளுக்கு உரிமம் பெற்ற வங்கி திறத்தவர் ஒருவராக இருக்கின்றதோ அந்த சேவைகளுக்கான ஏதேனும் ஒப்பந்தம்; அல்லது

(இ) உரிமம்பெற்ற வங்கியின் கடப்பாடுகள் எவையேனும் இருப்பின், அவை உட்பட ஆனால் வரையறுக்கப் படாமல் அதன் எவையேனும் கடப்பாடுகள் -

(i) உரிமம்பெற்ற வங்கியினால் வழங்கப்பட்ட ஏதேனும் கடன் வசதியின்கீழ்;

(ii) குத்தகைக்காரர் ஒருவராக;

(iii) பிணையங்களை, கொடுப்பனவு சாதனங்களை அல்லது வெளிநாட்டு நாணயத்தை வழங்குதல் அல்லது வழங்குவதற்கு எடுத்தல்;

(iv) கடன் பத்திரங்களின் கீழ்; அல்லது

(v) உத்தரவாதங்கள், விருப்பத்தெரிவுகள் மற்றும் வேறு நிகழத்தக்க பொறுப்புகளின்கீழ்.

(2) ஓராம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் குத்தகை ஒன்றின் முடிவுறுத்தல் பற்றிய தொண்ணூறு நாட்களுக்கு முன்னரான அறிவித்தல் கிடைக்கப் பெற்றுள்ள குத்தகை பெறுநர் ஒருவர் குத்தகை முடிவுறும் தேதியன்று திரண்டுள்ள வாடகை தவிர்ந்த வாடகைக்கு அல்லது அத்தகைய முடிவுறுத்துகை காரணமாக சேதவீடுகளுக்காக உரிமைக் கோரிக்கை எதனையும் கொண்டிருத்தல் ஆகாது.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் அங்கீகாரம் வழங்குவதற்கு நீதிமன்றத்தின் முடிபினால் இன்னலுற்ற எவரேனும் ஆள், அவ்வுட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தல் தேதியிலிருந்து நாற்பத்தைந்து நாட்களினுள் அத்தகைய முடிபுக்கெதிராக உயர்நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலாம் என்பதுடன், 1996 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, மாகாணங்களின் மேல் நீதிமன்றம் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய மேன்முறையீட்டுக்கும் அது தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

**77.** (1) இச்சட்டத்தின் அல்லது அப்போதைக்கு வலுவிலுள் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளில் அடங்கியுள்ள எதற்கும் முரணாக எது எவ்வாறிருப்பினும் - கொடுப்பனவு, தீர்த்துவைத்தல் மற்றும் கொடுத்து தீர்த்தல் முறைமை களின் இறுதித் தன்மை

(அ) மத்திய வங்கியினால் அத்தகையவாறான கொடுப்பனவு அல்லது பிணையங்களை கொடுத்துத் தீர்த்தல் முறைமையானது அங்கீகரிக்கப்படும் உரிமம் பெற்ற வங்கி ஒன்றினால் பதியப்பட்டுள்ளமையானது ஏதேனும் இல்லாதொழிக்கப்பட முடியாத பணம் அல்லது பிணையங்கள் கைமாற்றல் கட்டளை, உரிமம் பெற்ற வங்கிக்கு எதிராக ஒடுக்குதல் கட்டளை ஒன்றின் வழங்குகையை பொருட்படுத்தாது சட்டமுறையாக வலுவுறுத்தப்படற்பாலதாகவும் மூன்றாந்திறத்தவர் மீது பணிப்பதாகவும் இருத்தல் வேண்டும், ஆயின் அத்தகைய கைமாற்றல் கட்டளையானது ஒடுக்குதல் கட்டளை பயனுக்கு வருவதற்கு முன்னர் இல்லாதொழிக்கப்பட்டதாக வந்திருத்தல் வேண்டும்; அல்லது

(ஆ) உரிமம் பெற்ற வங்கிக்கு எதிராக வழங்கப்பட்ட ஒடுக்குதல் கட்டளை பயனுக்கு வந்த பின்னர், கொடுப்பனவு அல்லது பிணையங்கள் கொடுத்துத் தீர்த்தல் முறைமை ஒன்றினுள் உரிமம் பெற்ற வங்கியானது ஏதேனும் இல்லாதொழிக்கப்பட முடியாத பணம் அல்லது பிணையங்களைப் பதிகின்றவிடத்தும் அத்தகைய கைமாற்றல் கட்டளையானது ஒடுக்குதல் கட்டளை பயனுக்கு வரும் நாளன்று நிறைவேற்றப்படுகின்றவிடத்தும், அத்தகைய கைமாற்றுதல் கட்டளை சட்ட ரீதியாக வலுவுறுத்தப்படற்பாலதாகவும் எவரேனும் மூன்றாம் திறத்தவர் மீது பணிப்பதாகவும் இருத்தல் வேண்டும்.

(2) ஒடுக்குதல் கட்டளை பயனுக்கு வருவதற்கு முன்னர் செய்துகொள்ளப்பட்ட அல்லது செய்யப்பட்ட ஒப்பந்தங்களையும் கொடுக்கல்வாங்கல்களையும் புறத்தொதுக்குதல்மீது அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டம், மத்திய வங்கியினால்

ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒரு கொடுப்பனவு அல்லது கொடுத்துத் தீர்த்தல் முறைமை மூலம் தேறுகையொன்றை ஒடுக்காமலிருப்பதன் மீது பயனைக்கொண்டிருத்தலாகாது.

(3) இப்பிரிவின் நோக்கங்களுக்காக -

(அ) கொடுப்பனவுகள் அல்லது பிணையங்கள் கொடுத்துத் தீர்த்தல் முறைமையொன்றினுள் பதியப்பட்ட ஒரு கைமாற்றற் கட்டளை, அம்முறைமைக்கு ஏற்புடையற் பாலனவான சட்டங்களினால், ஒழுங்குவிதிகளினால் அல்லது விதிகளினால் வரைவிலக்கணம் கூறப்பட்ட நேரத்தில் இல்லாதொழிக்கப்படற் பாலனவல்லாததாக வருகின்றது; அத்துடன்

(ஆ) "தேறுகை" என்பது, கொடுத்துத்தீர்த்தல் முறைமை யொன்றில் உள்ள ஒரு பங்குபற்றுநர் அல்லது பங்கு பற்றுநர்கள் ஒரு தேறிய உரிமைக் கோரிக்கை அல்லது ஒரு தேறிய கடப்பாடு மட்டுமே எஞ்சியிருக்கும் என்ற விளைவுடன் அம்முறைமையில் உள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வேறு பங்குபற்றுநர்களுக்கு ஒன்றில் வழங்குகின்ற அல்லது அவர்களிடமிருந்து பெறுகின்ற, கைமாற்றற் கட்டளைகளிலிருந்து விளைவாக வருகின்ற எல்லா உரிமைக் கோரிக்கைகளை அல்லது கடப்பாடு களை ஒரு தேறிய உரிமைக்கோரிக்கையாக அல்லது ஒரு தேறிய கடப்பாடாக மாற்றுதல் எனப் பொருள்படும்.

ஒழிப்போனினால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகள்

**78.** (1) ஒழிப்போன், 69 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் சொத்துக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் எவ்வடிவத்திலுமான வேறு தகவல்களைப் பொறுப்பேற்கும் தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள், அவர் ஒடுக்குதலுக்கு அமைந்த உரிமம்பெற்ற வங்கியின் எல்லாச் சொத்துக்களும், உரிமைக் கோரிக்கைகளும், ஒப்பந்தங்களும் மற்றும் பாரிய கொடுக்கல் வாங்கல்களும் அடங்கிய இடைக்கால அறிக்கையொன்றை மத்திய வங்கிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) உரிமம்பெற்ற வங்கியின் சொத்துக்களையும் பொறுப்புக் களையும் ஏற்றங்கீகரிப்பதற்கு தேவைப்படுத்தக்கூடியவாறான, மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரின் கட்டுக்காப்பில் கிடைக்கக்கூடியதாகவுள்ள, ஒடுக்கு தலுக்கு அமைந்த அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் சொத்துக்க ளும் பொறுப்புக்களும் பற்றிய அத்தகைய தகவல்களை ஒழிப்போனுக்குச் சமர்ப்பிப்பது அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு சட்டமுறையாததாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட இடைக்கால அறிக்கைத் தேதியிலிருந்து இரண்டு மாதங்களினுள், பின்வருவன பற்றிய இறுதி அறிக்கையொன்றை ஒழிப்போன் மத்திய வங்கிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும் -

(அ) உரிமம்பெற்ற வங்கியின் எல்லாச் சொத்துக்களினதும் புத்தகப்பெறுமதிகள் மற்றும் மதிப்பிடப்பட்ட ஒழித்துக் கட்டுதல் பெறுமதிகளுடன் சேர்த்து, உரிமம்பெற்ற வங்கியின் பங்கு மூலதனத்தின் செலுத்தப்படாத ஒப்பப்பணங்கள் கணக்கில் உரிமம்பெற்ற வங்கியின் உரிமைக் கோரிக்கைகள், கடன் மற்றும் உத்தரவாத உடன்படிக்கைகள் மற்றும் கொள்வனவு அல்லது விற்பனை உடன்படிக்கைகள் உட்பட அத்தகைய எல்லாச் சொத்துக்களும்;

(ஆ) ஒடுக்குதல் கட்டளைத் தேதிக்கு நேர்முற்போந்த தொண்ணூறு நாட்காலப்பகுதியினுள் உரிமம்பெற்ற வங்கியினால் செய்துகொள்ளப்பட்ட பாரிய கொடுக்கல் வாங்கல்கள்;

(இ) விற்பனைகள், வாடகை, குத்தகை மற்றும் அத்தகைய வேறு இணையுறு உடன்படிக்கைகள் உட்பட எந்த ஒப்பந்தங்களைப் பின்பற்றி உரிமம்பெற்ற வங்கியின் ஏதேனும் ஆதனம் வேறு திறத்தவர்களினால் வைத்திருக்கப்படுகின்றதோ அல்லது வைத்திருக்கப் படுமோ அந்த ஒப்பந்தங்கள்; அத்துடன்

(ஈ) எந்த ஒப்பந்தங்களைப் பின்பற்றி உரிமம்பெற்ற வங்கி மூன்றாம் திறத்தவர்களிடமிருந்து சேவைகளைப் பெறுகின்றதோ அந்த ஒப்பந்தங்கள்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் இறுதி அறிக்கையை சமர்ப்பிப்ப திலிருந்து பதினான்கு நாட்களினுள், மத்திய வங்கி, ஒழிப்போனு டனான கலந்தாலோசனையுடன் அதற்கு அங்கீகாரம் அளிக்கலாம் அல்லது மேலும் அபிவிருத்தி செய்யலாம்.

(5) ஒழிப்போன், (4) ஆம் உட்பிரிவின்கீழ் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இறுதி அறிக்கையின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றை நீதிமன்றத்துக்கு அளித்தல் வேண்டும்.

(6) ஒழிப்போன், மத்திய வங்கியினால் தேவைப்படுத்தக் கூடியவாறாக (5) ஆம் உட்பிரிவின்கீழ் நீதிமன்றத்துக்கு அளிக்கப் பட்ட அறிக்கையை காலாகாலம் இற்றைப்படுத்துதல் வேண்டும் என்பதுடன், அதனை மத்திய வங்கிக்கு சமர்ப்பித்தலும் வேண்டும். (4) ஆம் மற்றும் (5) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் அத்தகைய இற்றைப்படுத்தப்பட்ட அறிக்கைக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

*உரிமைக் கோரிக்கை களைப் பதிவுசெய்தல்*

**79.** (1) ஒடுக்குதலுக்கு அமைந்த உரிமம்பெற்ற வங்கியொன்றின் மீதான ஏதேனும் உரிமைக்கோரிக்கை ஒடுக்குதல் கட்டளைத் தேதியிலிருந்து நான்கு மாதங்களினுள் எழுத்தில் ஒழிப்போனுக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான ஏதேனும் உரிமைக் கோரிக்கை யுடன், குறைந்தபட்சம் பின்வரும் தகவல்கள் உட்பட அத்தகைய உரிமைக்கோரிக்கை தொடர்பான ஆவணச்சான்று சேர்த்தனுப்பப் படுதல் வேண்டும்:-

(அ) கடன்கொடுநரின் பெயர் மற்றும் முகவரி;

(ஆ) உரிமைக்கோரிக்கையின் பிரதானதொகையில் உள்ளடக்கப்பட்ட வட்டித்தொகைகள் மற்றும் வேறு விதிப்பனவுகள், தண்டங்கள் மற்றும் வரிகள் உட்பட உரிமைக்கோரிக்கையின் தன்மை; அத்துடன்

(இ) எவரேனும் உத்தரவாதமளிப்பவரின் பெயர் மற்றும் முகவரி உட்பட உரிமைக் கோரிக்கைக்குப் பிணைப்பொறுப்பளிக்கின்ற ஏதேனும் ஈடு, சோந்தை அல்லது உத்தரவாதம் சம்பந்தமான விபரங்கள்.

(3) எண்பதாம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, ஒழிப்போன் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்குச் செய்யப்பட்ட அத்தகைய உரிமைக் கோரிக்கை ஒவ்வொன்றையும் பதிவுசெய்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய பதிவுக்கான எண்பிப்பாக மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய படிவத்தில் பற்றுச்சீட்டொன்றை வழங்குதலும் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பற்றுச்சீட்டு, உரிமைக்கோரிக்கையொன்றின் பதிவின் முதற்தோற்றளவிலான சான்றாகவிருத்தல் வேண்டும்.

(5) இப்பிரிவில் அடங்கியுள்ள எதுவும் ஒடுக்குதலுக்கமைந்த உரிமம்பெற்ற வங்கியொன்றின் புத்தகங்களில் அல்லது பதிவேடுகளில் பதியப்பட்ட ஒரு வைப்பு தொடர்பில் வைப்பாளர் ஒருவரினால் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் உரிமைக்கோரிக்கைக்கு ஏற்புடையதாதலாகாது என்பதுடன், அத்தகைய உரிமைக்கோரிக்கை ஒடுக்குதல் கட்டளைக்கு பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக, அவ்வாறு பதியப்பட்ட தொகைக்கு ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

உரிமைக் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரித்தல்

**80.** (1) நான்காம் மற்றும் (5) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, ஒழிப்போனிடத்தில் பதிவுசெய்யப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் மட்டும், அப்பயன்பட மேலதிகச் சான்றின்றி உரிமம்பெற்ற வங்கியொன்றின் ஒடுக்குதல் வழக்கு நடவடிக்கைகளுக்கு பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக ஒழிப்போனினால் கவனத்துட்கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) உரிமம்பெற்ற வங்கியின் எந்தக் கடன்கொடுநரின் உரிமைக்கோரிக்கை ஒரு ஈடு அல்லது சோந்தை மூலம் பிணைப்பொறுப்பளிக்கப்படுகின்றதோ அந்த எவரேனும் கடன்கொடுநர் பகிரங்க ஏல விற்பனையொன்றில் அல்லது 16 ஆம்

பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய தகைமைகளையும் அனுபவத்தையும் கொண்டுள்ள சுயாதீன உயர்தொழில்சார் பெறுமான மதிப்பீட்டாளர் ஒருவரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான சந்தைப்பெறுமதியில் விற்கப்படக்கூடியவாறான அடிப்படைச் சொத்தின் எதிர்பார்க்கப் படும் பெறுமதியை விஞ்சுகின்ற தொகையொன்றிற்கு அத்தகைய உரிமைக் கோரிக்கையை பதிவுசெய்யலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் உரிமைக்கோரிக்கை, பகிரங்க ஏல விற்பனை இடம்பெற்றதன் பின்னர், ஒழிப்போனினால் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(4) எந்த உரிமைக்கோரிக்கையின் பெறுமதி நிச்சயமற்றதாக வுள்ளதோ அந்த ஏதேனும் உரிமைக்கோரிக்கை, 16 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய தகைமை களையும் அனுபவத்தையும் கொண்டுள்ள சுயாதீன உயர்தொழில் சார் பெறுமான மதிப்பீட்டாளருடனான கலந்தாலோசனையுடன் ஒழிப்போனினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான பெறுமதி யொன்றுக்கு ஒழிப்போனினால் ஏற்றுக்கொள்ளப்படலாம்.

(5) ஒழிப்போன், 79 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு உரிமைக்கோரிக்கையையும் பரிசோதனைசெய்ததன் பின்னர், அத்தகைய உரிமைக்கோரிக்கை களை பின்வருமாறு வகுப்பாக்கம் செய்தல் வேண்டும் –

(அ) ஒழிப்போனினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிமைக் கோரிக்கைகள்; அத்துடன்

(ஆ) ஒழிப்போனினால் நிராகரிக்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகள்.

(6) ஒழிப்போன், (5) ஆம் உட்பிரிவின்கீழ் வகுப்பாக்கம் செய்யப்பட்ட உரிமைக்கோரிக்கைகளை பதிவுசெய்யும் நோக்கத்துக்காக, இரு தனிவேறான நிரல்களைப் பேணுதல் வேண்டும். (5) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ்

நிராகரிக்கப்பட்ட உரிமைக்கோரிக்கைகளாக வகுப்பாக்கம் செய்யப்பட்ட உரிமைக்கோரிக்கைகளின் விடயத்தில், ஒழிப்போன் அத்தகைய நிரலில் நிராகரிக்கப்பட்ட உரிமைக்கோரிக்கைகளாக அத்தகைய உரிமைக்கோரிக்கைகளை வகுப்பாக்கம் செய்வதற்கான காரணங்களைப் பதிதல் வேண்டும்.

(7) ஆறாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நிரல்கள் இரண்டிலும் -

(அ) பெயர் மற்றும் முகவரி, உரிமைக்கோரிக்கைத் தொகை மற்றும் உரிமைக்கோரிக்கை இணையுறுவினால் பிணைப்பொறுப்பளிக்கப்படுகின்றதா என்பது ஒவ்வொரு உரிமைக்கோரிக்கையாளர் தொடர்பிலும் குறித்துரைக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) சமமான வரிசைப்படுத்தலில் உள்ள உரிமைக்கோரிக்கைகள் அவற்றின் கொடுப்பனவு முன்னுரிமை ஒழுங்கில் ஒன்றாக நிரற்படுத்தப்படுதல் வேண்டும்.

(8) ஆறாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நிரல்கள் இரண்டும் நிரப்பப்படுதல் வேண்டும் என்பதுடன் உரிமைக்கோரிக்கைகளின் பதிவுக்காக குறித்துரைக்கப்பட்ட இறுதித்தேதியிலிருந்து முப்பது வேலைநாட்கள் காலப்பகுதியொன்றினுள் நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(9) ஒழிப்போன், (6) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு நிரல்களின் முதற்றொகுதியை சமர்ப்பித்ததன்பின்னர், அத்தகைய அறிக்கைகளை காலாகாலம் இற்றைப்படுத்தப்பட்ட வேண்டும் என்பதுடன் இற்றைப்படுத்தப்பட்ட நிரல்களை நீதிமன்றத்தினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நேரங்களில் நீதிமன்றத்துக்கு சமர்ப்பித்தலும் வேண்டும்.

(10) ஒழிப்போன் எந்த உரிமைக்கோரிக்கையாளரின் உரிமைக்கோரிக்கை (5) ஆம் உட்பிரிவின்கீழ் நிராகரிக்கப்பட்டவாறு வகுப்பாக்கஞ்செய்யப்பட்டுள்ளதோ அந்த ஒவ்வொரு

உரிமைக்கோரிக்கையாளருக்கும் அத்தகைய நிராகரிப்பு பற்றிய நிகழ்வை, 79 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் பற்றுச்சீட்டை வழங்கிய தேதியிலிருந்து ஒரு மாத காலப்பகுதியொன்றினுள் எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

*நிராகரிக்கப் பட்ட உரிமைக் கோரிக்கை களுக்கு எதிரான மேன்முறை யீடுகள்*

**81.** (1) எண்பதாம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் உரிமைக் கோரிக்கையொன்றை நிராகரிப்பதன் மூலம் இன்னலுற்ற எவரேனும் உரிமைக்கோரிக்கையாளர், 80 ஆம் பிரிவின் (10) ஆம் உட்பிரிவின்கீழ் அறிவிப்பைப் பெற்ற தேதியிலிருந்து ஒரு மாத காலப்பகுதியினுள், அத்தகைய உரிமைக்கோரிக்கையை ஏற்றுக் கொள்வதற்கான கட்டளையொன்றுக்காக நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

(2) நீதிமன்றம், (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப் பத்தை கவனத்துட்கொண்டதன் பின்னர், அத்தகைய உரிமைக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் கட்டளையை ஆக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் நீதிமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்படும் ஏதேனும் உரிமைக்கோரிக்கை, 80 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நிராகரிக்கப்பட்ட உரிமைக்கோரிக்கைகளின் நிரலிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும் என்பதுடன் நீதிமன்றத்தினாலும் ஒழிப்போனினாலும் கூட்டாக பேணப்படும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிமைக்கோரிக்கைகளின் தனிவேறான நிரலொன்றில் பதியப்படுதலும் வேண்டும்.

(4) நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்படுகின்ற உரிமைக் கோரிக்கைகள் என்ற கணக்கால் ஒழிப்போனினால் ஏதேனும் கொடுப்பனவு செய்யப்படுதலாகாது.

(5) எந்த உரிமைக்கோரிக்கையாளரின் ஏதேனும் உரிமைக் கோரிக்கை நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளதோ அந்த எவரேனும் உரிமைக்கோரிக்கையாளர், அத்தகைய முடிபுக்கு எதிராக அத்தகைய முடிபுத் தேதியிலிருந்து நாற்பத்தைந்து நாட்களினுள் உயர் நீதிமன்றத்துக்கு மேன்முறையீடு செய்யலா

மென்பதுடன் மேன்முறையீடுகள் தொடர்பில் 1996 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, மாகாணங்களின் மேல்நீதிமன்ற (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் அத்தகைய மேன்முறையீட்டிற்கும் அது தொடர்பிலும் ஏற்புடயனவாதல் வேண்டும்.

கட்டாய ஒடுக்குதல் ஒன்றில் சொத்துக்கள், பொறுப்புக்கள் அல்லது பங்குகள் முதலியனவற்றை கையுதிர்த்தல்

**82.** எண்பத்திநான்காம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, ஒழிப்போன், மத்திய வங்கியின் ஒருப்பாட்டுடனும் நீதிமன்றத்தின் அங்கீகாரத்துடனும், இச்சட்டத்தின் இப்பாகத்தின்கீழ் ஒடுக்குதல் தொடங்கிய பின்னர் உரிமம்பெற்ற வங்கியின் எவையேனும் சொத்துக்கள், பொறுப்புக்கள், சட்ட உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் அல்லது ஏதேனும் ஆதனம் எல்லாவற்றையும் அல்லது அதன் பாகத்தைக் கையுதிர்க்கலாம்.

எதிரீடு செய்தலும் தேறுகையும்

**83.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளில் அடங்கியுள்ள எதுவும் மற்றும் அதன்கீழ் எடுக்கப்பட்ட ஏதேனும் முடிபும், ஒடுக்குதலுக்கு அமைந்த உரிமம்பெற்ற வங்கியொன்றுக்கும் அதன் ஒப்பந்தஞ்சார் எதிர்த்திறத்தவர்களுக்குமிடையிலான கடப்பாடுகளை சட்டத்தின் தொழிற்பாட்டின் எதிரீடு செய்தலை தடுத்தலோ அல்லது தடை செய்தலோ ஆகாது.

(2) ஒடுக்குதலுக்கு அமைந்த உரிமம்பெற்ற வங்கியொன்றுக்கும் அதன் ஒப்பந்தஞ்சார் எதிர்த்திறத்தவர்களுக்குமிடையிலான உரிமைகளையும் கடப்பாடுகளையும் தீர்மானிப்பதில், அத்தகைய உரிமம்பெற்ற வங்கிக்கும் முறையான ஒப்பந்தஞ்சார் எதிர்த் திறத்தவர்களுக்குமிடையிலான நிதிசார் ஒப்பந்தங்களில் அடங்கியுள்ள முடித்துக்காட்டும் தேறுகை மற்றும் எதிரீட்டு ஏற்பாடுகள் கவனத்துட்கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) ஒடுக்குதலுக்கு அமைந்த உரிமம்பெற்ற வங்கிக்கும் முறையான ஒப்பந்தஞ்சார் எதிர்த்திறத்தவருக்குமிடையிலான நிதிசார் ஒப்பந்தமொன்றுக்கு இணங்க தீர்மானிக்கப்பட்ட தேறிய முடிவுறுத்துகைப் பெறுமதி, அவ்வெதிர்த்திறத்தவரின் மீது அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் உரிமைக்கோரிக்கையொன்றாகவிருத்தல் வேண்டும் அல்லது 79 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் உரிமம் பெற்ற வங்கியின் மீது எதிர்த்திறத்தவரின் உரிமைக்கோரிக்கையொன்றாக அது பதிவுசெய்யப்பட்டதன் பின்னர் ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக "தேறிய முடிவுறுத்துகைப் பெறுமதி" என்பது, நிதிசார் ஒப்பந்தமொன்றின் அதன் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கிணங்க திறத்தவர்களுக்கிடையேயான பரஸ்பர கடப்பாடுகளை எதிரீடு செய்வதன் பின்னர் பெறப்பட்ட தேறிய தொகை எனப்பொருள் படும்.

(5) மத்திய வங்கி, காலத்துக்குக் காலம் பணிப்புக்கள் வழங்குவதன் மூலம், நிதிசார் ஒப்பந்தங்கள் உட்பட எதிரீடுசெய்தல் மற்றும் தேறுகை தொடர்பான கருமங்களைக் குறித்துரைத்தல் வேண்டும்.

ஒடுக்குதலில் சொத்துக்களை விற்பனை செய்தல்

**84.** (1) ஒடுக்குதலுக்கு அமைந்த உரிமம்பெற்ற வங்கியொன்றுக்கெதிராக பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடன்கொடுநர்களின் அங்கீகரிக்கப்பட்ட உரிமைக்கோரிக்கைகளுக்கு பிணைப்பொறுப்பளிக்கும் சொத்துக்கள் தவிர்ந்த, அத்தகைய உரிமம் பெற்ற வங்கியின் எல்லாச் சொத்துக்களும் மற்றும் அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் உரிமைக்கோரிக்கைகளுக்கு பிணைப் பொறுப்பளிக்கும் எல்லாச் சொத்துக்களும் வர்த்தகரீதியில் நியாயமான முறையொன்றில் ஒழிப்போனினால் விற்கப்படுதல் வேண்டும்.

(2) இணையுறுக்கள் உட்பட சொத்துக்கள், அத்தகைய சொத்துக்கள் பின்வருமாறு கையுதிர்க்கப்படும்போது, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டவாறு வர்த்தக ரீதியில் நியாயமானமுறையொன்றில் விற்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்:-

(அ) உடனடியாக விற்பனைசெய்யப்படமுடியுமான பிணையங்கள், வெளிநாட்டு நாணயங்கள் மற்றும் வேறு சொத்துக்கள், அவை வியாபாரம் செய்யப்படுகின்ற சந்தைகளில் சந்தை விலையில் விற்கப்படுகின்றபோது; அத்துடன்

(ஆ) அத்தகைய சொத்துக்கள் பகிரங்க ஏலவிற்பனையில் விற்கப்படும்போது:

ஆயின் எவ்வாறாயினும், பகிரங்க ஏலவிற்பனையொன்றில் சொத்துக்களுக்கு நியாயமான விலை பெற்றுக்கொள்ளப்பட முடியாது என ஒழிப்போன் தீர்மானிப்பின், ஒழிப்போன் அச்சொத்துக்களை தனிப்பட்ட முறையில் விற்பதற்கு நீதிமன்றத்தின் அங்கீகாரத்துக்காக நாடுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள் தவிர்ந்த ஒடுக்குதலுக்கு அமைந்த உரிமம்பெற்ற வங்கியொன்றின் சொத்துக்கள், ஒழிப்போனின் கோரிக்கையொன்றின் மேல், உடனடியாக ஒழிப்போனின் கையுதிர்ப்புக்காக இடப்படுதல் வேண்டும்.

(4) உரிமைக்கோரிக்கையொன்றுக்கு பிணைப் பொறுப்பளிக்கின்ற சொத்தொன்றின் பெறுமதி பற்றி ஒழிப்போனுக்கும் பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கடன்கொடுநர் ஒருவருக்கும் இடையிலான ஏதேனும் பிணக்கு, அச்சொத்து விடயத்துக்கேற்ப 16 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய தகைமைகளையும் அனுபவத்தையும் கொண்டுள்ள சுயாதீன உயர்தொழில்சார் பெறுமான மதிப்பீட்டாளரினால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான சந்தைப்பெறுமதியில் அல்லது பகிரங்க ஏலவிற்பனையில் விற்கப்பட்டாலொழிய, மத்திய வங்கியினால் தீர்க்கப்படுதல் வேண்டும்; அப்பட்சத்தில் சந்தைப்பெறுமதியிலான அல்லது ஏல விற்பனையிலான விற்பனை விலை சொத்தின் பெறுமதிபற்றி முடிவானதாகவிருத்தல் வேண்டும்.

ஒடுக்குதலில் சொத்துக்களைப் பகிர்வதற்கான உரிமைக் கோரிக்கை களின் முன்னுரிமை

**85.** (1) ஒழிப்போன், ஒடுக்குதலுக்கு அமைந்த உரிமம்பெற்ற வங்கியொன்றின் சொத்துக்களை (2) ஆம் உட்பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்ட உரிமைக்கோரிக்கைகளின் முன்னுரிமைக்கு இணங்க பகிர்தல் வேண்டும்.

(2) ஒடுக்குதலுக்கு அமைந்த உரிமம்பெற்ற வங்கியொன்றின் சொத்துக்கள் பின்வரும் முன்னுரிமை ஒழுங்கில் பகிரப்படுதல் வேண்டும்:–

(அ) கடனிறுக்க வகையறவின் நிருவாகத்தின் கணக்கால் ஒழிப்போனினால் உறப்பட்ட எல்லா நியாயமான ஆகுசெலவுகளும் செலவுகளும்;

(ஆ) வைப்புக்காப்புறுதி நிதியத்துக்கு வருமதியாகவுள்ள செலுத்தப்படாத கட்டுப்பணம்;

(இ) ஐம்பத்தோராம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட நட்டஈடு அல்லது தீர்மானிப்பு நிதியளித்தலின் விளைவாக 45 ஆம் பிரிவின்கீழ் காப்புறுதி செய்யப்பட்ட வைப்பாளர்களின் உரிமைகளின் கடன்பற்றுரிமையிலிருந்து எழுகின்ற வைப்புக் காப்புறுதி நிதியத்தின் காப்புறுதி செய்யப்பட்ட வைப்புக்கள் மற்றும் உரிமைக்கோரிக்கைகள்;

(ஈ) 44 ஆம் பிரிவின்கீழ் மத்தியவங்கியினால் தீர்மானிக்கப்படும் காப்புறுதி செய்யப்பட்ட எல்லைக்கு மேற்பட்ட வைப்புக்கள்;

(உ) 67 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒடுக்குதல் கட்டளைத் தேதிக்கு ஒன்றுதிரண்டவாறான உரிமம்பெற்ற வங்கியின் அலுவலர்களினதும் ஊழியர்களினதும் சம்பளங்கள் மற்றும் வேதனங்கள்;

(ஊ) இச்சட்டத்தின்கீழ் தீர்மானிப்பு நிதியளித்தலுக்காக அரசாங்கத்துக்கு சேர்மதியாகவுள்ள தொகைகள்;

(எ) 67 ஆம் பிரிவின் (6) உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒடுக்குதல் கட்டளைத் தேதிக்கு முற்போந்த ஓராண்டுக்கு மேற்படாத காலப்பகுதியொன்றின்போது வருமதியாக வுள்ள, உரிமம்பெற்ற வங்கியினால் அரசாங்கத்துக்கும் உள்ளூரதிகாரசபைகளுக்கும் சேர்மதியாகவுள்ள வரிகள், வீத வரிகள் மற்றும் வைப்புக்கள்;

(ஏ) கைத்தொழில் நீதிமன்ற அளிப்புக்கள் மற்றும் உரிமம்பெற்ற வங்கியின் எவரேனும் அலுவலருக்கு

அல்லது ஊழியருக்கு அல்லது அவர் கணக்கால் செலுத்தப்படற்பாலனவான வேறு எவையேனும் நியதிச்சட்ட வருமதிகள்;

(ஐ) தீர்மானத்தின் காரணமாக உரிமம்பெற்ற வங்கியின் பொறுப்புக்கள் மற்றும் மத்திய வங்கிக்கும் வைப்புக் காப்புறுதி நிதியத்துக்கும் வருமதியாகவுள்ளனவும் சேர்மதியாகவுள்ளனவுமான வேறு எவையேனும் பொறுப்புக்கள்;

(ஒ) வைப்பாளர்கள் தவிர்ந்த பிணைப்பொறுப்பளிக் கப்படாத கடன்கொடுநர்களின் உரிமைக்கோரிக்கைகள்;

(ஓ) இவ்வுட்பிரிவின் (அ) இலிருந்து (ஒ) வரையான பந்திகளின்கீழ் செலுத்தப்படாத வேறு ஏதேனும் உரிமைக்கோரிக்கை.

ஒடுக்குதலில் கொடுப்பனவுகளின் பகிர்வு அட்டவணை

**86.** (1) ஒடுக்குதலுக்கு அமைந்த உரிமம்பெற்ற வங்கியொன்றின் வைப்பாளர்களுக்கான அல்லது வேறு கடன்கொடுநர்களுக்கான உரிமைக்கோரிக்கைகளின் கொடுப்பனவு, மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்படும் பகிர்வு அட்டவணையொன்றில் நிரற்படுத்தப் பட்ட தொகைகளுக்காக மட்டும் செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கத்துக்காக, 80 ஆம் மற்றும் 81 ஆம் பிரிவுகளின்கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிமைக்கோரிக்கைகள் உட்பட, ஒடுக்குதலுக்கு அமைந்த உரிமம்பெற்ற வங்கியின் வைப்பாளர்களுக்கும் வேறு கடன் கொடுநர்களுக்கும் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகளின் பகிர்வு அட்டவணையொன்றை ஒழிப்போன் தயாரித்தல் வேண்டும் என்பதுடன் மத்திய வங்கியின் அங்கீகாரத்துக்காக அதனை சமர்ப்பித்தலும் வேண்டும்.

(3) கொடுப்பனவுகள் பற்றிய ஒவ்வொரு பகிர்வு அட்டவணையும், பின்வருமாறு இருப்பின் மட்டும் 85 ஆம் பிரிவின் ஏற்பாடுகளில் குறித்துரைக்கப்பட்டவாறு அங்கீகரிக்கப்பட்ட உரிமைக்கோரிக்கை

களின் கொடுப்பனவு முன்னுரிமைக்கு இணங்க அவற்றின் மீது செய்யப்படவேண்டிய கொடுப்பனவுகளை வரிசைப்படுத்துதலும் இணைத்தலும் வேண்டும் –

(அ) உள்ளடக்கப்படவேண்டிய உரிமைக் கோரிக்கைகள் தவிர உயர்வான முன்னுரிமை வரிசைப்படுத்தலொன்றைக் கொண்ட அங்கீகரிக்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் மீது வருமதியாகவுள்ள எல்லாக் கொடுப்பனவுகளும், கொடுப்பனவுகள் பற்றிய முன்னைய பகிர்வு அட்டவணையொன்றின்கீழ் முழுமையாகச் செய்யப்பட்டிருப்பின் அல்லது கொடுப்பனவுகள் பற்றிய இப்பகிர்வு அட்டவணையின்கீழ் முழுமையாகச் செய்யப்படமுடியுமாகவிருப்பின்; அத்துடன்

(ஆ) உள்ளடக்கப்படவேண்டிய உரிமைக் கோரிக்கைகள் தவிர உயர்வான முன்னுரிமை வரிசைப்படுத்தலொன்றைக் கொண்டுள்ளனவும் இன்னும் அங்கீகரிக்கப்படாதனவுமான எல்லா உரிமைக்கோரிக்கைகளையும் முழுமையாகச் செலுத்துவதற்கும் உள்ளடக்கப்படவேண்டிய உரிமைக்கோரிக்கைகளின் வரிசைப்படுத்தலுக்குச் சமமான முன்னுரிமை வரிசைப்படுத்தலொன்றைக் கொண்டுள்ளனவும் இன்னும் அங்கீகரிக்கப்படாதனவுமான உரிமைக்கோரிக்கைகளின் சமமான நடாத்துகையை உறுதிப்படுத்துவதற்கும் போதிய நிதிகள் ஒதுக்கப்பட்டிருப்பின்.

(4) கிடைக்கக்கூடியதாகவுள்ள நிதிகள் குறித்தவொரு முன்னுரிமை வரிசைப்படுத்தலின் எல்லா உரிமைக்கோரிக்கைகளையும் முழுமையாக கொடுத்துத்தீர்ப்பதற்கு போதியதாகவிராதிருப்பின், நிதிகள் அவ்வுரிமைக்கோரிக்கைகள் மீதான கொடுப்பனவுகளுக்கிடையே தகவுக்கேற்ப பகிரப்படுதல் வேண்டும் என்பதுடன் எவையேனும் நிதிகள், அத்தகைய கொடுப்பனவு முதலாவது குறிப்பிடப்பட்ட உரிமைக்கோரிக்கைகளின் மீது முழுமையாகச் செய்யப்படமுடியுமாகவிருந்தாலொழிய, கீழ் முன்னுரிமை வரிசைப்படுத்தலொன்றின் உரிமைக்கோரிக்கைகள் மீதான கொடுப்பனவுகளுக்கு குறித்தொதுக்கப்படுதலுமாகாது.

(5) இரண்டாம் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட கொடுப்பனவுகள் பற்றிய பகிர்வு அட்டவணையொன்று மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதனை உடனடுத்துப் பின்னர், ஒழிப்போன், அங்கீகரிக்கப்பட்ட உரிமைக்கோரிக்கைகளுக்கு உரித்தாகவுள்ள ஆட்கள் எத்தேதியிலும் எந்த இடத்திலும் கொடுப்பனவுகளைப் பெறமுடியும் என்பது பற்றியும் உரித்தாகவுள்ள ஆட்கள் அப்பகிர்வு அட்டவணையில் நிரற்படுத்தப்பட்ட கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ள முடியுமான அத்தகைய வேறு ஏதேனும் முறை பற்றியுமான தகவல்களை அடக்கி, இலங்கையில் புழக்கத்தில் உள்ள ஆகக்குறைந்தது மூன்று சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில நாளாந்த செய்தித்தாள்களில் மூன்று தொடர்ச்சியான வாரங்களுக்கு, வாரத்துக்கு ஒரு முறை அறிவித்தலொன்றை வெளியிடுதல் வேண்டும்.

(6) இயைபான வைப்பாளர்கள் மற்றும் கடன்கொடுநர்களை அடையாளம் காணுவதற்கு அல்லது தொடர்புகொள்வதற்கு இயலாமை காரணமாக செலுத்தப்படமுடியாத பகிர்வு அட்டவணையில் உள்ளடக்கப்பட்ட ஏதேனும் தொகை, மத்திய வங்கியில் அந்நோக்கத்துக்காக பேணப்படும் விசேட கணக்கொன்றில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(7) இப்பிரிவின்கீழ் உரிமம்பெற்ற வங்கியின் வைப்பாளர்களுக்கான அல்லது கடன்கொடுநர்களுக்கான இறுதிப் பகிர்வுத் தேதியின் பின்னரான பத்து ஆண்டு காலப்பகுதியொன்றினுள் சொந்தக்காரரினால் உரிமை கோரப்படாத (6) ஆம் உட்பிரிவின்கீழ் வைப்பிலிடப்பட்ட எவையேனும் நிதிகள், வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் கைவிடப்பட்ட ஆதனமாகக் கருதப்படுதல் வேண்டும்.

(8) பிணக்கிலுள்ள எல்லா உரிமைக்கோரிக்கைகளும் நீதிமன்றத்தினால் ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட அல்லது நிராகரிக்கப்பட்ட பின்னரும் அங்கீகரிக்கப்பட்ட உரிமைக்கோரிக்கைகள் மீதான எல்லா இயன்றனவாகவுள்ள கொடுப்பனவுகளும் செய்யப்பட்டதன் பின்னரும் செலுத்தப்படமுடியாத எல்லாப் பணத்தொகைகளும் (6) ஆம் உட்பிரிவின்கீழ் வைப்பிலிடப்பட்டதன் பின்வரும், ஒடுக்குதலின் எவையேனும் எஞ்சியுள்ள தேறிய வரும்படிகள் -

(அ) பங்குதாரர்களின் வகுப்பினர்களிடையேயான முந்துரிமைகளுக்கு மட்டும் அமைய, ஒடுக்குதலுக்கு அமைந்த உரிமம்பெற்ற வங்கியின் எல்லாப் பங்குதாரர்களினதும் முறையான பங்குவைத்திருக்கைகளின் பெயரளவிலான பெறுமதியின் தகவுக்கேற்ப அவர்களுக்கிடையே பகிரப்படுதல் வேண்டும்;

(ஆ) ஒடுக்குதலுக்கு அமைந்த உரிமம்பெற்ற வங்கி பகிரங்க கூட்டுத்தாபனமொன்றாகவிருக்கின்றவிடத்து, அரசாங்கத்துக்கு செலுத்தப்படுதல் வேண்டும்; அல்லது

(இ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட, ஒடுக்குதலுக்கு அமைந்த உரிமம்பெற்ற வங்கியின் தலைமை அலுவலகமொன்றுக்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட உரிமம்பெற்ற வங்கியொன்று சம்பந்தமான ஒடுக்குதல் வழக்கு நடவடிக்கைகள்

**87.** (1) பின்வருமாறு இருப்பின், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட உரிமம்பெற்ற வங்கியொன்றுக்கெதிராக ஒடுக்குதல் வழக்குநடவடிக்கைகள் தொடங்கப்படலாம் –

(அ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட உரிமம்பெற்ற வங்கி, மத்தியவங்கியொன்றாக குறித்துரைக்கின்றவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமைய, மத்திய வங்கியின் எழுத்திலான முன்னங்கீகாரத்துடன் இலங்கையில் உள்ள அதன் தொழிலை மூடுவதற்கு விரும்பினால்;

(ஆ) 66 ஆம் பிரிவில் நிரற்படுத்தப்பட்ட ஏதுக்களுள் எவையும் அத்தகைய உரிமம்பெற்ற வங்கி தனிவேறான சட்ட ஆளொன்றாகவிருந்தது என்றாற்போன்று அதற்கு ஏற்புடையதாகவிருப்பின்; அல்லது

(இ) மத்திய வங்கியினாலான மனுவின் மீது, எந்த நாட்டில் உரிமம்பெற்ற வங்கி கூட்டிணைக்கப்படுகின்றதோ அல்லது தாபிக்கப்படுகின்றதோ அல்லது அத்தகைய

உரிமம்பெற்ற வங்கி அதன் தொழிலை பிரதானமாக கொண்டு நடாத்துகின்றதோ அந்த நாட்டில் அத்தகைய வங்கிக்கெதிராக ஒடுக்குதல் வழக்கு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டிருப்பின்.

(2) உரிமம்பெற்ற வங்கியொன்றின் ஒடுக்குதல் தொடர்பான இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகள், அவை இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட உரிமம்பெற்ற வங்கியொன்றுக்கு ஏற்புடையனவாகின்றவாறு இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப் பட்ட அல்லது தாபிக்கப்பட்ட உரிமம்பெற்ற வங்கியொன்றின் ஒடுக்குதலுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஒடுக்குதலுக்கு அமைந்த உரிமம்பெற்ற வங்கியின் இலங்கையில் நிறைவேற்றப்பட்ட தொழிலிலிருந்து விளைகின்ற அல்லது வேறு வகையாக தொழிலுடன் தொடர்பான அத்தகைய வங்கியின் எல்லாச் சொத்துக்களும், பொறுப்புக்களும் செயல்களும் மற்றும் செய்யாமைகளும் இப்பிரிவின் ஏற்பாடுகளை ஏற்புடையன வாக்கும் போது அவ்வுரிமம்பெற்ற வங்கிக்கு ஏற்றிக் கூறப்படுதல் வேண்டும்.

(4) அத்தகைய உரிமம்பெற்ற வங்கி இலங்கையில் உரிமம்பெற்ற வங்கியொன்றாக கூட்டிணைக்கப்பட்டிருந்தது என்றாற்போன்று, அத்தகைய உரிமம்பெற்ற வங்கி தொடர்பாக எடுக்கப்பட முடியுமானவாறான எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு ஒழிப்போனுக்கு அதிகாரமளிக்கப்படுதல் வேண்டும்.

(5) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட உரிமம்பெற்ற வங்கியொன்றுக்கு எதிராக ஒடுக்குதல் வழக்குநடவடிக்கைகளைத் தொடங்குவதற்கான நீதிமன்றத்தின் கட்டளை சேர்ப்பிக்கப்படுகின்ற நேரத்தில், அத்தகைய உரிமம்பெற்ற வங்கி, ஒழிப்போனின் எழுத்திலான முன்னங்கீகாரத்துடன் அதனால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் தவிர, இலங்கையில் நிறைவேற்றப்பட்ட அதன் அனுமதிக்கத்தக்க செயற்பாடுகள் எல்லாவற்றையும் புரிவதிலிருந்து இல்லாதொழித்தல் வேண்டும்.

(6) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட உரிமம்பெற்ற வங்கியொன்றுக்கெதிராக ஒடுக்குதல் வழக்குநடவடிக்கைகளில் இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளை ஏற்புடையதாக்குவதில், 83 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் மட்டும், இலங்கையில் உள்ள அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் தொழிலிருந்து விளைகின்ற அல்லது வேறுவகையாக தொடர்பான கடப்பாடுகளை எதிரீடுசெய்தலுக்கும் அவற்றின் தேறுகைக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(7) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட ஒடுக்குதலுக்கு அமைந்த உரிமம்பெற்ற வங்கியினால் சொந்தமாக வைத்திருக்கப்படும் எந்தச் சொத்துக்களும், அத்தகைய உரிமம்பெற்ற வங்கியினால் உறப்பட்ட எந்த கடப்பாடுகளுக்கும் பொறுப்புகளுக்கும், வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் வங்கித் தொழிலை கொண்டுநடாத்துவதற்கு உரிமத்தைப் பெற்றுக்கொள்ளும் நேரத்தில் அத்தகைய உரிமம்பெற்ற வங்கியினால் மத்திய வங்கிக்கு பொறுப்பேற்பு வழங்கப்பட்டதோ அந்த எல்லா கடப்பாடுகளும் பொறுப்புக்களும், அத்தகைய பொறுப்பேற்புக்கு இணங்க எதிர்கொள்ளப்பட்டிருக்கும்வரை, அத்தகைய உரிமம்பெற்ற வங்கியினால் சொந்தமாக வைத்திருக்கப்படும் சொத்துக்கள் எவையும் இலங்கையிலிருந்து அகற்றப்படவில்லை என உறுதிப்படுத்துவதற்கு அவசியமான எல்லா வழிமுறைகளும் ஒழிப்போன் எடுத்தல் வேண்டும்.

ஒடுக்குதல் வழக்கு நடவடிக்கைகளை முடிவுறுத்துதலும் உரிமத்தை இல்லா தொழித்தலும்

**88.** (1) ஒடுக்குதல் நிறைவுபெறுவதன்மேல், ஒழிப்போன், வெளியக கணக்காய்வாளர் ஒருவரின் அபிப்பிராயமொன்றுடன் சேர்த்து, உரிமம்பெற்ற வங்கியின் கணக்காய்வுசெய்யப்பட்ட கணக்குகள் பற்றிய கூற்றொன்றையும் ஒடுக்குதல் பற்றிய அறிக்கையொன்றையும் தயாரித்து நீதிமன்றத்திற்கு அதன் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட கணக்காய்வு, கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கலந்தாலோசனையுடன் மத்திய வங்கியினால் நியமிக்கப்படும் வெளியக கணக்காய்வாளர் ஒருவரினால் நடாத்தப்படுதல் வேண்டும்.

(3) வெளியக கணக்காய்வாளருக்கு உரிமம்பெற்ற வங்கியின் சொத்துக்களிலிருந்து ஊதியமொன்று செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வெளியக கணக்காய்வாளரின் அபிப்பிராயம் பின்வருவனவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும் -

(அ) ஒழிப்போனின் கணக்குகள் பற்றிய கூற்று உண்மையானதும் நியாயமானதும் தகுந்தமுறையில் தயாரிக்கப்பட்டதுமானதா என்பது பற்றி;

(ஆ) ஒழிப்போனின் கணக்குகள் பற்றியகூற்று உரிமம்பெற்ற வங்கியின் சொத்துக்களுடன் ஒழிப்போனின் கையாளுகைகள் பற்றிய உண்மையானதும் சரியானதுமான கூற்றொன்றைக் காண்பிக்கின்றதா என்பது பற்றி;

(இ) அத்தகைய வெளியக கணக்காய்வாளர் ஏதேனும் விளக்கம் அல்லது தகவலைக் கோரியுள்ளவிடத்து, ஒழிப்போனினால் வழங்கப்பட்ட விளக்கம் அல்லது தகவல் திருப்திகரமாகவுள்ளதா என்பது பற்றி; அத்துடன்

(ஈ) ஒழிப்போன் மத்தியவங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளுக்கிணங்க செயலாற்றியுள்ளாரா என்பது பற்றி.

(5) நீதிமன்றம் கணக்காய்வுசெய்யப்பட்ட கணக்குகள் பற்றிய கூற்றையும் ஒடுக்குதல் பற்றிய அறிக்கையையும் அங்கீகரிக்கலாம் என்பதுடன், உரிமம்பெற்ற வங்கியின் புத்தகங்களையும் பதிவேடுகளையும் ஒடுக்குதலுடன் தொடர்பான வேறு ஆவணங்களையும் நீதிமன்றம் தோதானதெனக் கருதுகின்றவாறான ஒரு இடத்தில் வைப்பிலிடுவதற்கு ஒழிப்போனைப் பணிக்கலாம்.

(6) ஐந்தாம் உட்பிரிவின்கீழ் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதன் மேல் ஒழிப்போன், இலங்கையில் புழக்கத்திலுள்ள ஆகக்குறைந்தது மூன்று சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில நாளாந்த செய்தித்தாள்களில் பொதுமக்களின் தகவலுக்காக அங்கீகார அறிவித்தலொன்றை வெளியிடுதல் வேண்டும்.

(7) (அ) ஆறாம் உட்பிரிவின்கீழ் அங்கீகார அறிவித்தலை வெளியிடுவதன்மேல், அத்தகைய அறிவித்தல் கம்பெனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் பதிவுசெய்யப்பட்ட கம்பெனியொன்றுடன் தொடர்புபட்டதாவிருப்பின், ஒழிப்போன், கம்பெனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதியினால் பேணப்படும் இடாப்பிலிருந்து கம்பெனியின் பெயரை கீறிவிடுவதற்கு கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டும்.

(ஆ) அதன்மேல், கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதி இடாப்பிலிருந்து அத்தகைய கம்பெனியின் பெயரைக் கீறிவிடுதல் வேண்டுமென்பதுடன், இலங்கையில் புழக்கத்திலுள்ள ஆகக் குறைந்தது மூன்று சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில நாளாந்த செய்தித்தாள்களில் அப்பயன்பட அறிவித்தலொன்றை வெளியிடுதலும் வேண்டும்.

(8) ஏழாம் உட்பிரிவின்கீழ் கம்பெனியொன்றின் பெயரை கீறிவிடும் அறிவித்தலொன்றை வெளியிடும் தேதியிலிருந்து உரிமம்பெற்ற வங்கிக்கெதிரான ஒடுக்குதல் பற்றிய வழக்கு நடவடிக்கைகள் முடிவுறுதல் வேண்டும் என்பதுடன் கம்பெனி கலைக்கப்பட்டதாகவிருத்தலும் வேண்டும்.

(9) கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் பற்றிய கூற்று மற்றும் ஒடுக்குதல் பற்றிய அறிக்கை நீதிமன்றத்தினால் அங்கீகரிக்கப்படுதல், உரிமம்பெற்ற வங்கியை ஒடுக்குதலுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் பொறுப்பிலிருந்து பொறுப்புவிடுவிக்கின்றதுடன் விட்டுவிடுகின்றது.

(10) எட்டாம் உட்பிரிவின்கீழான கம்பெனியொன்றின் கலைப்பு, கம்பெனியின் எவரேனும் பணிப்பாளர், பிரதான நிறைவேற்று அலுவலர், வேறு அலுவலர் அல்லது சொந்தக்காரரின் இச்சட்டத்தின்கீழான அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழான பொறுப்பைப் பாதித்தலாகாது என்பதுடன் அத்தகைய பொறுப்பு தொடருதல் வேண்டும். அத்துடன் அக்கம்பெனி கலைக்கப்பட்டிருக்கவில்லை என்றாற்போன்று வலுவுறுத்தவும்படலாம்.

வங்கியின் பணிப்பாளர் களினால் அல்லது அலுவலர் களினாலான தவறுகள்

**89.** (1) தற்போது அல்லது கடந்தகாலத்தில் ஒடுக்குதலுக்கு அமைந்த உரிமம்பெற்ற வங்கியொன்றின் பணிப்பாளர் ஒருவராக அல்லது அலுவலர் ஒருவராக இருந்துகொண்டு -

(அ) அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் எல்லா அசையும் மற்றும் அசையா ஆதனங்கள் தொடர்பான தகவல்களை, உரிமம்பெற்ற வங்கியின் தொழிலின் சாதாரண நெறியின்போது கையுதிர்க்கப்பட்டவாறான அத்தகைய ஆதனம் அல்லது அதன் பாகம் தவிர, அத்தகைய ஆதனம் அல்லது அதன்பாகம் எவ்வாறு மற்றும் யாருக்கு மற்றும் எப்பிரதிபயனுக்காக கையுதிர்க்கப் பட்டுள்ளது என்பன உட்பட தனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் ஒழிப்போனுக்கு வெளிவிடுவதற்கு தவறுகின்ற;

(ஆ) ஒழிப்போனுக்கு அல்லது ஒழிப்போன் பணிக்கின்ற வாறு பின்வருவனவற்றை ஒப்படைப்பதற்கு தவறு கின்ற-

(i) அத்தகைய பணிப்பாளரின் அல்லது அலுவல ரின் கட்டுக்காப்பில் உள்ள அல்லது அத்தகைய பணிப்பாளரின் அல்லது அலுவலரின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள அத்தகைய உரிமம் பெற்ற வங்கியின் எல்லா அசையும் மற்றும் அசையா ஆதனங்கள்; அல்லது

(ii) அத்தகைய பணிப்பாளரின் அல்லது அலுவல ரின் கட்டுக்காப்பில் உள்ள அல்லது அத்தகைய பணிப்பாளரின் அல்லது அலுவலரின் கட்டுப் பாட்டின்கீழ் உள்ள அத்தகைய உரிமம்பெற்ற வங்கிக்குச் சொந்தமான எல்லாப் புத்தகங் களும், பதிவேடுகளும், இடாப்புகளும் மற்றும் ஆவணங்களும்;

(இ) அத்தகைய உரிமம்பெற்றவங்கியின் ஒடுக்குதல் தொடங்குவதற்கு நேர்முற்போந்த பன்னிரெண்டு மாதங்களினுள் அல்லது அதன் பின்னரான ஏதேனும் நேரத்தில் -

(i) பத்தாயிரம் ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமதியுடைய உரிமம்பெற்ற வங்கியின் ஆதனத்தின் ஏதேனும் பாகத்தை மறைத்து வைத்துள்ள அல்லது அத்தகைய உரிமம்பெற்ற வங்கிக்கு அல்லது அவ்வங்கியிலிருந்து வரு மதியாகவுள்ள ஏதேனும் தனிசை மறைத்து வைத்துள்ள;

(ii) பத்தாயிரம் ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமதியுடைய அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் ஆதனத்தின் ஏதேனும் பாகத்தை மோசடியாக அகற்றியுள்ள;

(iii) அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் ஆதனம் அல்லது அலுவல்கள் சம்பந்தமான அல்லது தொடர்பான ஏதேனும் புத்தகத்தை, இடாப்பை, பதிவேட்டை அல்லது ஆவணத்தை மறைத்து வைத்துள்ள, அழித்துள்ள, சிதைந்துள்ள அல்லது பொய்யாக்கியுள்ள அல்லது அவற்றின் மறைத்துவைத்தல், அழித்தல், சிதைத்தல் அல்லது பொய்யாக்குதலுக்கு உட்கையாக விருந்துள்ள;

(iv) அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் ஆதனம் அல்லது அலுவல்கள் சம்பந்தமான அல்லது தொடர்பான ஏதேனும் புத்தகத்தில், இடாப்பில், பதிவேட்டில் அல்லது ஆவணத்தில் ஏதேனும் பொய்யான பதிவைச்செய்துள்ள அல்லது செய்வதில் உட்கையாகவிருந்துள்ள;

(v) அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் ஆதனம் அல்லது அலுவல்கள் சம்பந்தமான அல்லது தொடர்பான ஏதேனும் புத்தகத்தில், இடாப்பில், பதிவேட்டில் அல்லது ஆவணத்தில் மோசடியாக வேறுபடுத்தியுள்ள, மாற்றியுள்ள அல்லது ஏதேனும் விட்டுவிடுகையைச் செய்துள்ள அல்லது அவற்றில் மோசடியான வேறுபடுத்துகை, மாற்றுதல் அல்லது ஏதேனும் விட்டுவிடுகையைச் செய்தலுக்கு உட்கையாக விருந்துள்ள;

(vi) உரிமம்பெற்ற வங்கி அடுத்துப்பின்னர் செலுத்தியிராதுள்ள கடன்மீது அத்தகைய உரிமம்பெற்ற வங்கிக்காக அல்லது அதன்சார்பாக ஏதேனும் ஆதனத்தை ஏதேனும் பொய்யான பிரதிநிதித்துவம் அல்லது வேறு மோசடி மூலம் பெற்றுள்ள;

(vii) உரிமம்பெற்ற வங்கி எந்த ஆதனத்துக்கு அடுத்துப்பின்னர் செலுத்தியிராதுள்ளதோ அந்த ஏதேனும் ஆதனத்தை, அத்தகைய உரிமம் பெற்ற வங்கி அதன் தொழிலை கொண்டு நடாத்துகின்றது என்ற பொய்யான பாசாங்கின் கீழ் அத்தகைய உரிமம்பெற்ற வங்கிக்காக அல்லது அதன்சார்பாக கடன்மீது பெற்றுக் கொண்ட; அல்லது

(viii) அடகு வைத்தல், அடைமானம் வைத்தல் அல்லது கையுதிர்த்தல் என்பன உரிமம்பெற்ற வங்கியின் தொழிலின் சாதாரண முறையில் இருந்தாலொழிய, கடன்மீது பெறப்பட்டு அதற்கான கொடுப்பனவு செய்யப்பட்டிராத அத்தகைய உரிமம் பெற்ற வங்கியின் ஏதேனும் ஆதனத்தை அடகு வைத்துள்ள, அடைமானம் வைத்துள்ள அல்லது கையுதிர்த்துள்ள;

(ஈ) அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் அலுவல்கள் தொடர்பான ஏதேனும் கூற்றில் ஏதேனும் முக்கியமான விட்டுவிடுகையைச் செய்துள்ள;

(உ) எவரேனும் ஆளினால் பொய்யான தனிசொன்று எண்பிக்கப்பட்டுள்ளதென அறிந்துகொண்டு அல்லது நம்புவதற்கான காரணங்களைக் கொண்டு ஒரு மாத காலப்பகுதியொன்றிற்கு அத்தகைய நிகழ்வு பற்றி ஒழிப்போனுக்கு அறிவிப்பதற்கு தவறுகின்ற;

(ஊ) அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் ஆதனம் அல்லது அலுவல்கள் சம்பந்தமான அல்லது தொடர்பான ஏதேனும் புத்தகம், இடாப்பு, பதிவேடு அல்லது ஆவணம் காண்பிக்கப்படுவதனைத் தடுக்கின்ற;

(எ) ஒடுக்குதல் தொடங்குவதற்கு நேர்முற்போந்த பன்னிரெண்டு மாதங்களினுள் அல்லது அதன்பின்னரான ஏதேனும் நேரத்தில், உரிமம்பெற்ற வங்கியின் ஆதனத்தின் ஏதேனும் பாகத்துக்கு புனைந்த நட்டங்களினால் அல்லது செலவுகளினால் கணக்குக்கூற எத்தனித்துள்ள; அல்லது

(ஏ) ஒடுக்குதல் தொடங்குவதற்கு நேர்முற்போந்த பன்னிரெண்டு மாதங்களினுள் அல்லது அதன்பின்னரான ஏதேனும் நேரத்தில், உரிமம்பெற்ற வங்கியின் அலுவல்கள் அல்லது ஒடுக்குதல் தொடர்பிலான உடன்படிக்கையொன்றுக்கு உரிமம்பெற்ற வங்கியின் கடன்கொடுநர்களின் அல்லது அவர்களுள் எவரினதும் சம்மதத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காக வேறு ஏதேனும் பொய்யான பிரதிநிதித்துவத்தைச் செய்துள்ளதாக அல்லது வேறு ஏதேனும் மோசடியான செயற்பாட்டைப் புரிந்துள்ளதாக அல்லது அதனைப் புரிவதில் சம்பந்தப்பட்டுள்ளதாக காணப்பட்டுள்ள,

ஒவ்வொரு ஆளும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றார்.

(2) எவரேனும் ஆள் (1) ஆம் உட்பிரிவின்கீழ் தவறொன்றாக அமைகின்ற சூழ்நிலைகளில் ஏதேனும் ஆதனத்தை அடகு வைக்கின்றவிடத்து, அடைமானம் வைக்கின்றவிடத்து அல்லது கையுதிர்க்கின்றவிடத்து, அச்சூழ்நிலைகளில் அடகுவைக்கப்பட்டது, அடைமானம் வைக்கப்பட்டது அல்லது கையுதிர்க்கப்பட்டது என அறிந்துகொண்டு அவ்வாதனத்தை அடகாக அல்லது அடைமானமாக அல்லது வேறுவகையில் பெற்றுக்கொள்கின்ற ஒவ்வொரு ஆளும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றார்.

(3) எவரேனும் ஆளுக்கு மோசடிசெய்யும் அல்லது ஏமாற்றும் உளக்கருத்துடன் ஏதேனும் உரிமம்பெற்ற வங்கிக்குச் சொந்தமான ஏதேனும் புத்தகம், இடாப்பு, பதிவேடு, ஆவணம் அல்லது பிணைப்பொறுப்பை அழிக்கின்ற, சிதைக்கின்ற, மாற்றுகின்ற அல்லது பொய்யாக்குகின்ற அல்லது ஏதேனும் புத்தகத்தில், இடாப்பில், பதிவேட்டில் அல்லது ஆவணத்தில் அல்லது கணக்கில் ஏதேனும் பொய்யான அல்லது மோசடியான பதிவைச் செய்கின்ற அல்லது செய்வதில் உட்கையாகவிருக்கின்ற ஒடுக்குதலுக்கு அமைந்த உரிமம்பெற்ற வங்கியின் ஒவ்வொரு பணிப்பாளரும், அலுவலரும், ஊழியரும் அல்லது சேவையாளரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றார்.

*கூட்டிணைக்கப்பட்ட குழுக்களிலானாலான தவறுகள்*

**90.** இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளொருவர் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருக்கின்ற விடத்து, அத்தவறு புரியப்படும் நேரத்தில் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளர் ஒருவராக அல்லது நிறைவேற்றுப்பணிகளைப் புரியும் அலுவலர் ஒருவராக அல்லது செயலாளராகவுள்ள ஒவ்வொரு ஆளும், அத்தகைய பணிப்பாளர், அலுவலர் அல்லது செயலாளர் அத்தவறு அவரை அறியாமல் புரியப்பட்டது என அல்லது அத்தகைய தவறு புரியப்படுவதனைத் தடுப்பதற்கு அத்தகைய பணிப்பாளர், அலுவலர் அல்லது செயலாளர் எல்லா உரிய விழிப்புக்கவனத்தையும் பிரயோகித்தார் என நீதிமன்றத்தின் திருப்திக்கு எண்பித்தாலொழிய, அத்தவறுக்கு குற்றவாளியாதல் வேண்டும்.

*தண்டங்கள்*

**91**. இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியை, விதியை, கட்டளையை அல்லது பணிப்பை அல்லது தேவைப்பாட்டை மீறுவதன் காரணமாக அல்லது அவற்றுடன் இணங்கியொழுகுவதற்கு தவறுவதன் காரணமாக தவறொன்றுக்கு குற்றவாளியாகக் காணப்படும் ஒவ்வொரு ஆளும் நீதிவான் ஒருவரின் முன்னராக சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது, ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்று ஆண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்காக இருவகையி லொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப் பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

*மத்திய வங்கி அதன் தீர்மானிப்பு அதிகார சபையின் அம்சங்கள் எவற்றின்மீதும் பணிப்புகளை வழங்குதல்*

**92**. இச்சட்டத்தின் வேறு எவையேனும் ஏற்பாடுகளுக்கு அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்துக்குப் பங்கமின்றி, மத்திய வங்கியானது அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் தீர்மானிப்பு பற்றிய ஏதேனும் அம்சம் நடாத்தப்படவேண்டியமுறை சம்பந்தமாக உரிமம்பெற்ற வங்கியொன்றுக்கு பணிப்புக்களை வழங்கலாம்.

*பொருள் கோடல்*

**93**. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாக தேவைப்படுத்தி னாலொழிய, -

“கைவிடப்பட்ட ஆதனம்” என்பது, வங்கித்தொழில் சட்டத்தின் பாகம் IX இல் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறான ஆதனம் மற்றும் நிதித்தொழில் சட்டத்தின் 23 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவறான செயலற்ற வைப்புகள் எனப் பொருள்படும்;

“இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம்” என்பது, (397 ஆம் அத்தியாயமான) இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் எனப் பொருள்படும்;

"வங்கித்தொழில் சட்டம்" என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டம் எனப் பொருள்படும்;

''இணைப்பு வங்கி'' என்பது, குறித்தசில முக்கியமான பணிகளின் தொழிற்பாடுகளையும் ஒப்பேற்றக்கூடிய தொழிற்பாடுகளையும் கையேற்று தொடர்வதற்கும் மத்திய வங்கியின் அபிப்பிராயத்தில் முறைமைசார் முக்கியத்து வத்தை அல்லது தாக்கத்தைக் கொண்டுள்ள, தீர்மானிப் புக்கு அமைந்த உரிமம்பெற்ற வங்கியொன்றினால் சொந்தமாக வைத்திருக்கப்படும் அல்லது வழங்கப்படும் பங்குகள், சொத்துக்கள், பொறுப்புக்கள், சட்ட உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் அல்லது வேறு ஆதனச் சாதனங் களுள் ஏதேனும் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்ட வற்றை கைமாற்றுவதற்கு மத்திய வங்கியினால் தாபிக்கப் பட்ட ஒரு நிறுவனம் எனப் பொருள்படும்;

"மத்திய வங்கி" என்பது, 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கையின் மத்திய வங்கி எனப் பொருள்படும்;

''முடித்துக்காட்டும் தேறுகை'' என்பது, இணையுறு ஒழுங்கேற்பாடொன்றிலான ஒரு ஏற்பாடு உட்பட ஒரு ஒப்பந்தம்சார் ஏற்பாடு அல்லது அத்தகைய ஏதேனும் ஏற்பாடு இல்லாமையின்போது ஏதேனும் நியதிச்சட்ட விதி எனப் பொருள்படும்; இதனடிப்படையில், ஒப்பந்தத் துக்கான திறத்தவர் ஒருவர் தொடர்பாக முன்னர் வரைவிலக்கணம் கூறப்படாத நிகழ்வொன்று இடம்பெறு வதன்மேல், ஏற்பாட்டினால் மேவப்படுகின்றனவும் ஒப்பந்தத்துக்கான திறத்தவர்களினால் ஒவ்வொரு வருக்கும் சேர்பெறுமதியாகவுள்ளனவுமான கடப்பாடுகள், அவை அந்நேரத்தில் வருமதியாகவும் செலுத்தப்படற் பாலனவாகவும் இருப்பினும்சரி அல்லது இல்லை யாயினும்சரி, தன்னியக்கமாக அல்லது திறத்தவர்களுள் ஒருவரின் தெரிவின்பேரில், ஒரு திறத்தவரினால் இன்னொருவருக்கு வருமதியாகவும் செலுத்தப்படற்

பாலதாகவும் உள்ள இணைந்த கடப்பாடுகளின் கூட்டுமொத்தப் பெறுமதியைக் குறிக்கின்ற, புத்தாக்கம், முடிவுறுத்துகை, எதிரீடு என்ற வகையாக அல்லது வேறு வகையாக, தனி தேறிய கடப்பாடொன்றினால் உடனடியாக வருமதியாகவிக்கவேண்டியதும் அதற்கு குறைக்கப்படவேண்டியதும் அல்லது அதனால் மாற்றீடு செய்யப்படவேண்டியதும் ஆகும்;

"கம்பெனிகள் சட்டம்" என்பது, 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டம் எனப் பொருள்படும்;

"நீதிமன்றம்" என்பது, 1996 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, மாகாணங்களின் மேல்நீதிமன்ற (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் குடியியல் நியாயாதிக்கம் தத்துவமளிக்கப்பட்ட அரசியலமைப்பின் 154ஒ என்னும் உறுப்புரையின்கீழ் மாகாணமொன்றுக்காக தாபிக்கப் படும் மேல் நீதிமன்றம் எந்த மாகாணத்துக்காக தாபிக்கப்படுகின்றதோ அந்த மாகாணத்தினுள் உள்ள அத்தகைய மேல் நீதிமன்றம் அல்லது குடியியல் நியாயாதிக்கம் உரித்தாக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் மேல் நீதிமன்றம் ஏதேனும் மாகாணத்துக்கு தாபிக்கப் படாதவிடத்து, மேல் மாகாணத்துக்காக தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றம் எனப் பொருள்படும்;

"நெருக்கடி நேரங்கள்" என்பது, நிதிசார் நிதிகளின் இடைத் தரகு நிலை, ஆபத்துக்களை முகாமை செய்தல் மற்றும் கொடுப்பனவுகளை வினைத்திறனாகக் கொடுத்துத் தீர்த்தல் என்பவுட்பட, நிதிசார் முறைமை அதன் முக்கியமான பணிகளைப் புரிவதற்கு இயலாதுள்ளவொரு காலப்பகுதி என்று பொருளாகுமென்பதுடன் நெருக்கடி யற்ற நேரங்கள் அதற்கிணங்கப் பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டும்;

''முக்கியமான பணிகள்'' என்பது, ஓர் உரிமம்பெற்ற வங்கி தவிர்ந்த மூன்றாந் திறத்தவர்களுக்காகவும் அவர்கள் சார்பிலும் உரிமம்பெற்ற வங்கியினால் புரியப்பட்ட செயற்பாடுகளைப் புரிவதற்குத் தவறுதலானது அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் அளவு அல்லது சந்தைப் பங்கு, வெளிப்புற, உள்ளக இடைத்தொடர்பு, அத்தகைய உரிமம் பெற்ற வங்கியின் சிக்கலானதன்மை அல்லது எல்லைக் கப்பாலான செயற்பாடுகள் என்பன காரணமாக, உள்ள படியான பொருளாதாரத்தின் பணியாற்றுகைக்காக அல்லது நிதிசார் முறைமை நிலையுறுதியை உறுதிப் படுத்துவதற்காக அத்தியாவசியமாகவுள்ள வங்கித் தொழிற் சேவைகளைக் குழப்புவதற்கு இட்டுச்செல்லும் அத்தகைய எவையேனும் செயற்பாடுகள் என்று பொருளாகும்;

''முக்கியமான பகிரப்பட்ட சேவைகள்'' என்பது, ஓர் உரிமம் பெற்ற வங்கியினாலேயே புரியப்பட்ட அல்லது எவரேனும் மூன்றாந் திறத்தவரான சேவை வழங்குநரினால் புரியப் படுவதற்காகவுள்ள அல்லது வெளியிலிருந்து பணி யாற்றுவோரினால் புரியப்படுவதற்காகவுள்ள செயற் பாடுகளைப் புரியத்தவறுதல் முக்கியமான பணிகளைப் புரிவதற்கு உரிமம்பெற்ற வங்கியின்பாலான இயலா மைக்கு இட்டுச்செல்வதுடன் அதன்மூலம் உள்ளபடியான பொருளாதாரத்தின் பணியாற்றுகைக்காக அல்லது நிதி சார் முறைமை நிலையுறுதியை உறுதிப்படுத்துவதற்காக அத்தியாவசியமாகவுள்ள சேவைகளைக் குழப்புகின்ற அத்தகைய எவையேனும் செயற்பாடுகள் என்று பொருளாகும்;

''அதிவிசேட பகிரங்க நிதிசார் ஆதரவு'' என்பது, மத்திய வங்கியின் நிதிகள் தவிர்ந்த நிதிகளினூடாக முறைமைசார் முக்கியத்துவத்தை அல்லது தாக்கமொன்றைக் கொண்ட உரிமம்பெற்ற வங்கியொன்றுக்கு மூலதனத்தை உட்செலுத்துதல் எனப் பொருள்படும்;

''நிதித் தொழில் சட்டம்'' என்பது, 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நிதித்தொழில் சட்டம் எனப் பொருள்படும்;

''நிதிசார் துறை'' என்பது, ஒன்றிணைப்பொன்றாக அல்லது சில்லறையாக அல்லது பொருளாதாரத்தில் நிதிக்கான கைமாற்றுவதற்கும் ஒதுக்கீடு செய்வதற்குமான நிதிசார் இடைக்கால சேவைகளை வழங்குகின்ற வாடிக்கையாளர்களின் சார்பில் நிதிகளை முகாமைசெய்யும் நிறுவனங்களை உள்ளடக்கியுள்ளதான பொருளாதாரத்தின் துணைத்துறையென்று எனப் பொருள்படுகின்றது;

''வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிச் சட்டம்'' என்பது, 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிச் சட்டம் எனப் பொருள்படும்;

''கடனிறுக்க வகையறவு'' என்பது, உரிமம்பெற்ற வங்கியொன்றின் பொறுப்புக்கள் அதன் ஐந்தொகையில் பிரதிபலிக்கப்பட்டவாறு அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் சொத்துக்களை விட உயர்வானவையாக விருக்கின்றவிடத்தான ஒரு நிலை எனப் பொருள்படும்;

''காப்புறுதி செய்யப்பட்ட வைப்புக்கள்'' என்பது, 44 ஆம் பிரிவின்கீழ் வைப்பாளர் ஒருவருக்குச் செலுத்தப்படற்பாலதான அதிகபட்ச நட்டஈட்டுக்கு அமைய தகவுடையனவாகவுள்ள எல்லா வைப்புக்களும் எனப் பொருள்படும்;

''காப்புறுதி செய்யப்பட்ட வைப்பாளர்கள்'' என்பது, 44 ஆம் பிரிவின்கீழ் வைப்பாளர் ஒருவருக்குச் செலுத்தப்படற்பாலதான அதிகபட்ச நட்டஈட்டுக்கு அமைய தகவுடையனவாகவுள்ள வைப்புக்களை வைத்திருப்பவர்கள் எனப் பொருள்படும்;

''சர்வதேச நிதி நிறுவனங்கள்'' என்பது, ஆசிய அபிவிருத்தி வங்கி, புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி, சர்வதேச அபிவிருத்திக் கழகம், சர்வதேச நாணய நிதியம் அல்லது ஒத்த நிறுவனங்கள் என்பவற்றை உள்ளடக்கும்;

''முக்கியமான முகாமைத்துவ ஆளணியினர்'' என்பது, மத்தியவங்கியினால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப் படக்கூடியவாறான கடன், நிதி, திறைசேரி, தொழிற் பாடுகள், இணக்கம், கணக்காய்வு, இடர் முகாமைத்துவம், கம்பனிச்செயலகம், தகவல் தொழில்நுட்பம், தகவல் பாதுகாப்பு மற்றும் பணியகம் தகவல் பாதுகாப்பு என்னும் பணிகள் மற்றும் அத்தகைய வேறு பணிகளின் தலைவர்கள் உள்ளடங்கலாக அத்தகைய உரிமம் பெற்ற வங்கியின் ஒட்டுமொத்த முகாமைத்துவம் மற்றும் தொழிற்பாட்டுக்கு பிரதானமாக பொறுப்பாகவுள்ள வர்களான உரிமம் பெற்ற வங்கியொன்றின் ஊழியர்கள் எனப் பொருள்படும்;

''உரிமம்பெற்ற வங்கி'' என்பது, வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் மத்திய வங்கியின் பணச்சபையினால் உரிமமளிக்கப்பட்ட ஒரு வர்த்தக வங்கி அல்லது ஒரு விசேடித்த வங்கி எனப்பொருள்படும் என்பதுடன் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட வெளிநாட்டு வங்கியொன்றின் ஒரு கிளையையும் உள்ளடக்கும்;

''உரிமம்பெற்ற பரிமாற்றம்'' என்பது 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் ஏற்பாடுகளின்கீழ் உரிமம்பெற்ற பரிமாற்றம் எனப் பொருள்படும்;

''அமைச்சர்'' என்பது, அரசியலமைப்பின் உறுப்புரை 44 அல்லது 45 இன் நியதிகளின்பிரகாரம் நிதி என்னும் விடயத்துக்கு குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் எனப் பொருள்படும்;

''பணச் சபை'' என்பது, (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பணச்சபை எனப் பொருள்படும்;

''தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம்'' என்பது, 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் எனப் பொருள்படும்;

''தேறுகை'' என்பது, ஒப்பந்தமொன்றின் திறத்தவர்களிடையே யான பரஸ்பர கையாளுகைகளை அடிப்படையாகக் கொண்டு அல்லது அவற்றிலிருந்து எழுகின்ற எல்லா உரிமைக் கோரிக்கைகளையும் அல்லது கடப்பாடுகளையும் எதிரீடுசெய்ததன் பின்னர் அல்லது சரிக்கட்டியதன் பின்னர் தேறிய உரிமைக்கோரிக்கைகளை அல்லது கடப்பாடுகளைத் தீர்மானித்தல் எனப் பொருள்படும்;

''வங்கியல்லா நிதி நிறுவனங்கள்'' என்பது, நிதித்தொழில் சட்டத்தின்கீழ் பணச் சபையினால் உரிமமளிக்கப்படும் நிதிக் கம்பெனிகள் எனப் பொருள்படும்;

''மக்கள் வங்கிச் சட்டம்'' என்பது, 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டம் எனப் பொருள்படும்;

''பிரதேசிய சங்வர்தன வங்கிச் சட்டம்'' என்பது, 2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, பிரதேசிய சங்வர்தன வங்கிச் சட்டம் எனப் பொருள்படும்;

''அறவீட்டுத் திட்டம்'' என்பது, உரிமம்பெற்ற வங்கியொன் றின்மீது மத்திய வங்கி தீர்மானிப்பு நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் அத்தகைய வங்கியின் நிதி நிலைமை குறிப்பிடத்தக்க சீர்குலைவொன்றில் இருக்கின்ற பட்சத்தில் அதனால் எடுக்கப்படவேண்டிய வழிமுறை களை ஏற்பாடுசெய்கின்ற ஒரு திட்டம்;

''கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதி'' என்பது, கம்பெனி கள் சட்டத்தின்கீழ் கம்பெனிகள் பதிவாளர் தலைமை யதிபதி அல்லது கம்பெனிகள் பதிவுக் கடமையைப் புரியும் வேறு அலுவலர் எனப் பொருள்படும்;

''தீர்மானிப்பு'' என்பது நிதிசார் உறுதிப்பாட்டை பாதுகாப்ப தற்கும் வரிசெலுத்துநர்களுக்கு ஆகக்குறைந்த ஆகு செலவுகளை உறுதிப்படுத்துவதற்கும் அத்தகைய உரிமம்பெற்ற வங்கியின் முக்கிய பணிகளின் தொடர்ச்சி

*உட்பட பொதுநலனை பேணிக்காப்பதற்கென மத்திய வங்கியின் தீர்மானிப்பு தத்துவங்களை பிரயோகிப்பதி னூடாக மத்தியவங்கியினால் உரிமம்பெற்ற வங்கி யொன்றினை மீளக்கட்டமைத்தல் எனப்பொருள்படும்;*

*"தீர்மானிப்புத்திட்டம்" என்பது, வங்கிகளின் தீர்மானிப்புக்காக கிடைக்கக்கூடியதாகவுள்ள சர்வதேச நியமங்களுக்கும் மிகச்சிறந்த செயல்முறைகளுக்கும் இணங்க முறைமைசார் முக்கியத்துவம் அல்லது தாக்கத்தைக் கொண்டுள்ள ஒவ்வொரு உரிமம்பெற்ற வங்கிக்காக மத்திய வங்கியினால் வடிவமைக்கப்பட்ட ஒரு திட்டம் எனப் பொருள்படும்;*

*"அரச ஈட்டு, முதலீட்டு வங்கிச் சட்டம்" என்பது, 1975 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, அரச ஈட்டு முதலீட்டு வங்கிச் சட்டம் எனப் பொருள்படும்;*

*"துணைநிலைப்படுத்தப்பட்ட தனிசு வைத்திருப்பவர்" என்பது, உரிமம்பெற்ற வங்கியொன்றின் வேறு எல்லாக் கடப்பாடுகளுக்கும் குறைந்த தரவரிசையில் அல்லது கனிட்ட நிலைமையிலுள்ளதான காப்புறுதியாளரின் சொத்துக்களுக்கு எதிரான உரிமைக்கோரிக்கை யொன்றைக் கொண்டுள்ள தனிசு வைத்திருப்பவர் எனப் பொருள்படும்;*

*"தற்காலிக நிதிசார் உதவி" என்பது, தற்காலிக காலப் பகுதியொன்றிற்கு அரசாங்கத்தினால் உரிமம்பெற்ற வங்கியொன்றின் அல்லது இணைப்பு வங்கியொன் றிற்கான தீர்மானிப்புக்கான நிதியளிப்புக்கு உதவுதொகை செலுத்துவதற்கான நிதிசார் உதவி எனப் பொருள்படும்;*

*"மூடிவிடுதல்" என்பது, தொழிலை படிப்படியாக குறைத்தல் அல்லது மூடுதல் எனப் பொருள்படும்; அத்துடன்*

*"குறைத்தல்" என்பது, நட்டம் அல்லது செலவொன்றை எதிரீடு செய்வதற்கு சொத்தொன்றின் பெறுமதியைக் குறைத்தல் எனப் பொருள்படும்.*

வழக்கி லிருந்தான பாதுகாப்பு

**94.** *(1) இச்சட்டத்தின்கீழ் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுதலின் போது அல்லது அத்தகைய தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகித்தல், புரிதல் மற்றும் நிறைவேற்றுவதலைப் பின்பற்றிச் செய்யப்பட்ட ஏதேனும் சேதம் அல்லது செயல் அல்லது செய்யாமை நன்னோக்கின்றிச் செய்யப்பட்டுள்ளதென அல்லது உளக்கருத்துடனான பிழையான தவறான நடத்தை அல்லது வேண்டுமென்ற தவறுகையை உருவமைத்துள்ளது என அது எண்பிக்கப்பட்டாலொழிய, மத்திய வங்கியின் அலுவலர்கள் மற்றும் 18 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட நிருவாகி அத்தகைய ஏதேனும் சேதம் அல்லது செயல் அல்லது செய்யாமைக்கும் பொறுப்பாத லாகாது.*

மேன்முறையீடு களுக்கான ஏற்பாடுகள்

**95.** *(1) இரண்டாம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடு களுக்கமைய, 13 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழான முடிபு உட்பட மத்திய வங்கியின் முடிபொன்றினால் இன்னலுற்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட கோரிக்கை செய்யப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி, கட்டளை, விதி, பணிப்பு அல்லது ஏதேனும் தீர்மானம் விடயத்துக் கேற்ப விதிக்கப்பட்ட அல்லது எடுக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட அத்தகைகய ஏதேனும் முடிபு, ஒழுங்குவிதி, கட்டளை, விதி, பணிப்பு, தீர்மானம், கோரிக்கை அல்லது தேவைப்பாட்டினால் அவர் பாதிக்கப்படக்கூடும் என அஞ்சுகின்ற எவரேனும் ஆள் அத்தகைய கட்டளைக்கு பயன்கொடுப்பதிலிருந்து மத்திய வங்கியை நிறுத்திவைக்கும், தடைசெய்யும் அல்லது தடுக்கும் பயன்கொண்ட அத்தகைய நிரந்தர அல்லது இடைக்கால தடையாணை, தடைக் கட்டளை, நிறுத்தற் கட்டளை அல்லது வேறு ஏதேனும் கட்டளைக்கு உரித்துடையவராதலாகாது.*

*(2) (அ) ஓராம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒரு முடிபு. ஒழுங்குவிதி, கட்டளை, விதி, பணிப்பு, தீர்மானம், கோரிக்கை அல்லது தேவைப்பாடு தொடர்பாக அரசியலமைப்பின் 140 ஆம் உறுப்புரையினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் மீது அளிக்கப்பட்ட நியாயாதிக்கம் உயர்நீதிமன்றத்தினால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் அல்ல.*

*(ஆ) (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட நியாயாதிக்கத்தை வேண்டுகின்ற ஒவ்வொரு விண்ணப்பமும், அத்தகைய விண்ணப்பம் எந்தச் செயல் தொடர்பில் அல்லது தொடர்பாக செய்யப்படுகின்றதோ அந்தச் செயல் புரியப்படும் தேதியிலிருந்து ஒரு மாதத்தினுள் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய விண்ணப்பம் கோரப்பட்டதிலிருந்து இரண்டு மாதங்களினுள் அத்தகைய விண்ணப்பத்தைக் கேட்டு இறுதியாகக் கையுதிர்த்தலும் வேண்டும்.*

*(3) ஓராம் உட்பிரிவில் அடங்கியுள்ள எவையும், அரசியலமைப்பின் 126 ஆம் உறுப்புரையின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் விண்ணப்பம் தொடர்பில் அல்லது (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் உயர் நீதிமன்றம் வேறுவகையாக சட்டமுறையாக பிரயோகிக்கக்கூடிய தத்துவங்களைப் பாதித்தலாகாது.*

*(4) இரண்டாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழான விண்ணப்பம் எதுவும், அத்தகைய விண்ணப்பம் பற்றி மத்திய வங்கிக்கு ஏழு நாட்களுக்கு முன்னர் முன்னறிவித்தல் வழங்காமல் செய்யப்படுதலாகாது.*

*இச்சட்டம் வேறு எழுத்திலான சட்டங் களையும் விட மேலோங்குதல் வேண்டும்*

***96.** (1) இச்சட்டத்தினதும் அப்போதைக்கு வலுவிலுள்ள வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்குதல் வேண்டும்.*

*(2) இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம், மக்கள் வங்கிச் சட்டம், தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம், அரச ஈட்டு, முதலீட்டு வங்கிச் சட்டம், இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிச் சட்டம், பிரதேசிய சங்வர்தன வங்கிச் சட்டம் அல்லது எந்த நியதிச்சட்டத்தின்கீழ் அரசுக்குச் சொந்தமாகவுள்ள வர்த்தக வங்கியொன்று அல்லது விசேடித்த வங்கியொன்று தாபிக்கப்படுமோ அந்த ஏதேனும் நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளில் அடங்கியுள்ள எதுவும், இச்சட்டத்தின்கீழ் மத்திய வங்கியின் தீர்மானிப்பு அதிகாரசபையின் விட்டுக்கொடுப்பு அல்லது மட்டுப்பாடொன்றாக பொருளமைத்துக் கொள்ளப்படுதலாகாது.*

பேணல்கள்

**97.** (1) பணச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் பயனைக்கொண்டு பணச்சபையினால் தாபிக்கப்பட்டதும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ளதுமான இலங்கை வைப்பு காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டம், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுவதாக இச்சட்டத்தின்கீழ் மத்திய வங்கியின் வைப்பு காப்புறுதி திட்டமாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) பணச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் பயனைக்கொண்டு பணச்சபையினால் தாபிக்கப்பட்டதும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ளதுமான இலங்கை வைப்பு காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவு நிதியம், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுவதாக இச்சட்டத்தின்கீழ் மத்திய வங்கியின் வைப்பு காப்புறுதி நிதியமாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) பணச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் பயனைக்கொண்டு பணச்சபையினால் தாபிக்கப்பட்டதும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ளதுமான இலங்கை வைப்பு காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவு நிதியத்தின் வரவுக்கிருக்கும் பணத்தொகைகள், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுவதாக இச்சட்டத்தின்கீழ் வைப்புக் காப்புறுதி நிதியத்தின் வரவுகளுக்கும் பணத்தொகையாக கருதப் படுதல் வேண்டும்.

(4) பணச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் பயனைக்கொண்டு பணச்சபையினால் தாபிக்கப்பட்ட இலங்கை வைப்பு காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்துக்கு ஏற்றிக்கூறப்படும் எல்லா உரிமைகளும், கடப்பாடுகளும், சொத்துக்களும், ஆதனங்களும், பொறுப்புக்களும், தத்துவங்களும், சிறப்புரிமைகளும் மற்றும் அதிகாரங்களும் சொல்லப்பட்ட திட்டத்தின் அத்தகைய உரிமைகள், சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் அத்தகைய பொறுப்புக்களில் அல்லது அவற்றிலிருந்து எழுகின்றனவும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று

உள்ளனவுமான அக்கறைகளும் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுவதாக இச்சட்டத்தின் கீழான வைப்பு காப்புறுதித் திட்டத்தின் உரிமைகள், கடப்பாடுகள், சொத்துக்கள், ஆதனங்கள், பொறுப்புக்கள், தத்துவங்கள், சிறப்புரிமைகள் அதிகாரங்கள் மற்றும் அக்கறைகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) பணச்சட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஒழுங்குவிதிகளின் பயனைக்கொண்டு பணச்சபையினால் தாபிக்கப்பட்டதும் நியமனத் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று உள்ளதுமான இலங்கை வைப்பு காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தினால் -

(அ) உறுப்பு நிறுவனங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட எல்லா கட்டுப்பணங்களும் அல்லது மேலதிக கட்டுப்பணங் களும்;

(ஆ) உறுப்பு நிறுவனங்களின்மீது விதிக்கப்பட்ட எல்லாத் தண்டங்களும்;

(இ) எந்த உறுப்பு நிறுவனங்களின் உரிமங்கள் பணச்சபை யினால் இல்லாதாக்கப்பட்டுள்ளதோ அந்த உறுப்பு நிறுவனங்களின் வைப்பாளர்களுக்கு செலுத்தப்பட்ட மற்றும் செலுத்தப்படவேண்டிய எல்லா நட்டஈட்டுக் கொடுப்பனவுகளும்;

(ஈ) எவையேனும் உறுப்பு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடன்களும் அல்லது முற்பணங்களும் அவற்றின் ஏதேனும் அறவீடும் மற்றும் விடயத்துக்கேற்ப அத்தகைய கடன்கள் அல்லது முற்பணங்களுக்கெதிராக அடைமானம் வைக்கப்பட்ட எல்லா இணையுறுக்களும்;

(உ) செய்யப்பட்ட எல்லா முதலீடுகளும் அவற்றின்மீது பெறப்பட்ட ஏதேனும் திரும்பலும்;

(ஊ) பேணப்படும் வேறு ஏதேனும் ஆதனம் தொடர்பான அல்லது அதனோடு இணைந்த எல்லா அல்லது எவையேனும் புத்தகங்களும், கணக்குகளும் பதிவேடுகளும்; அத்துடன்

(எ) செலுத்தப்பட்ட எல்லா வரிகளும், தீர்வைகளும், அறவீடுகளும் அல்லது ஒத்ததன்மையைக் கொண்ட வேறு எவையேனும் விதிப்பனவுகள் அல்லது அவற்றின் பாகமும்,

நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுவதாக இச்சட்டத்தின்கீழான வைப்பு காப்புறுதி திட்டத்தினால் சேகரிக்கப்பட்ட கட்டுப்பணம் அல்லது மேலதிக கட்டுப்பணம், விதிக்கப்பட்ட தண்டங்கள், செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்படவேண்டிய நட்டஈட்டுக்கு கொடுப்பனவு, வழங்கப்பட்ட பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட முற்பணங்கள், கடன்கள் மற்றும் அடைமானம் வைக்கப்பட்ட இணையுறுக்கள், செய்யப்பட்ட முதலீடுகள் மற்றும் பெறப்பட்ட திரும்பல்கள், பேணப்பட்ட புத்தகங்கள், கணக்குகள் மற்றும் பதிவேடுகள் மற்றும் செலுத்தப்பட்ட வரிகள், தீர்வைகள், அறவீடுகள் அல்லது விதிப்பனவுகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) ஏதேனும் ஒழுங்குவிதி, அறிவிப்பு, ஒப்பந்தம், சாதனம், பதிவேடு, பங்குச் சான்றிதழ், ஆவணம், உறுதி, முறி, உடன்படிக்கை, உத்தரவாதம், அற்றோணித்தத்துவம், சட்டப்பிரதிநிதித்துவ அளிப்பு மற்றும் எத்தகைய தன்மையினதுமான வேறு சாதனங்களில் உள்ள பணச்சட்டத்தின்கீழ் பணச்சபையினால் தாபிக்கப்பட்ட இலங்கை வைப்பு காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்துக்கான ஒவ்வொரு குறிப்பீடும் அதன் ஏற்பாடுகளுக்கு பயன்கொடுப்பதற்கு இச்சட்டத்தின்கீழான இலங்கை வைப்பு காப்புறுதி திட்டத்துக்கான குறிப்பீடொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(7) தீர்மானிப்பு அதிகாரத்தைப் பிரயோகித்தல் மற்றும் எல்லைக்கு அப்பாற்பட்ட ஒத்துழைப்பு தொடர்பில் இலங்கையிலாயினுஞ்சரி அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ்சரி பணச்சபையினால் ஏதேனும் வேறு ஒழுங்குபடுத்தும்,

மேற்பார்வைசெய்யும் அல்லது அரச அதிகாரசபையுடன் செய்துகொள்ளப்பட்டதும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த தாகவுள்ளதுமான ஏதேனும் உடன்படிக்கை, புரிந்துணர்வு ஒப்பந்தம் அல்லது ஒப்பந்தம், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுவதாக இச்சட்டத்தின் கீழ் மத்திய வங்கியினால் செய்துகொள்ளப்பட்ட ஒரு உடன்படிக்கை, புரிந்துணர்வு ஒப்பந்தம் அல்லது ஒப்பந்தமாக கருதப்படுதல் வேண்டும்.

(8) இச்சட்டத்தின் தொழிற்பாடு எவ்வாறிருப்பினும், பணச்சபையினால் அல்லது விடயத்துக்கேற்ப பணச்சட்டம், வங்கித்தொழில் சட்டம் அல்லது நிதித்தொழில் சட்டத்தின்கீழ் பணச்சபையினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட மத்திய வங்கியின் வேறு எவரேனும் அலுவலரினால் எடுக்கப்பட்டதும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று தொடர்ந்துள்ளதுமான ஏதேனும் தீர்மானிப்பு வழிமுறை அல்லது முற்கூட்டிய இடையீட்டு வழிமுறை இச்சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட ஒரு தீர்மானிப்பு வழிமுறையாக அல்லது முற்கூட்டிய இடையீட்டு வழிமுறையாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் பணச்சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் தொடர்ந்திருத்தலும் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**98**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.

அட்டவணை [பிரிவு 6]

1. 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டம்.
2. 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நிதித்தொழில் சட்டம்.
3. 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டம்.
4. 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கைப் பிணைங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டம்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*